
# இமாம் அபூ ஹனீபா

221

2-21
2-61.

OFFICE OF THE REGISTRAR OF ... MADRAS
MAY 1961



97:458
110570

வ... பதிப்பகம்
...ர்...திருச்சி

# இமாம் அஃலம்

# அபூ ஹனீபா

*

ஆசிரியர் :

ஸையித் இப்ராஹீம், எம். ஏ., எல். டி.,
ஜமால் முஹம்மத் கல்லூரி, திருச்சிராப்பள்ளி.

*

வளர்மதி பதிப்பகம்
தென்னூர் : : திருச்சிராப்பள்ளி.

முதற் பதிப்பு 1956
இரண்டாம் பதிப்பு 1960 பெப்ரவரி
ஹி. 1379 ஷாபான்

## உட்பொருள்

1. தோற்றுவாய்
2. பிறப்பும் வளர்ப்பும்
3. மக்காவிலும் மதீனாவிலும்
4. புகழோங்கல்
5. ஆசிரிய பீடத்தில்
6. இமாமின் அரசியல் கொள்கை
7. அரசாங்கத்தில் செல்வாக்கு
8. மக்காவுக்கு ஹிஜ்ரத்
9. கூபா திரும்பினார்
10. அப்பாஸி கலீபாக்கள்
11. பாக்தாத் நகரில்
12. மாணவர்
13. நூல்கள்
14. வாழ்க்கையின் உயர்வு
15. அறவுரைகள்

பதிப்புரிமை

விலை ரூ. 0-75.

# முன்னுரை

திரு குர்ஆன், ஹதீத், பிக்ஹு, பல்ஸபா, என்பன இஸ்லாமிய கலைகளாகும். அவற்றில் பிக்ஹு என்ற மார்க்கச் சட்டத்தின் ஸ்தாபகர் அபூ ஹனீபா என்பவர். இப்பெருந் தலைவரது வியாக்கியானங்களையும் விரிவுரைகளை யும் இஸ்லாமிய உலகின் பெரும்பாகம் சுமார் பன்னிரண்டு நூற்றாண்டுகளாகப் பின்பற்றி வருகிறது. இவரது மஸ். அலாக்களே பெரிய இஸ்லாமிய அரசாங்கங்களிலெல்லாம் சட்டங்களாயின. இன்னும், அவ்வாறே பின்பற்றப் படு கின்றன. இப்பெரியாரது வாழ்க்கை வரலாறு ஆசிய, ஐரோப்பிய மொழிகள் பலவற்றில் எழுதப்பட்டிருக்கிறது.

இஸ்லாம் மார்க்கத்திலே "ஷரீஅத்" என்பது இஸ்லா மிய மக்கள் பல துறைகளிலும் நல்வாழ்க்கை நடத்தவேண் டிய நெறிமுறைகளாகும். இஸ்லாமிய ஷரீஅத் என்பதில், முதலாவது குர்ஆன்; இரண்டாவது எம்பிரான் முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வ ஆலிஹி வ ஸல்ல மவர்களது சொல்லும் செயலுமான ஸுன்னத். பிக்ஹு என்பது முஸ் லிம்கள் அன்றாட வாழ்க்கையில் பின்பற்ற வேண்டிய சட்டங் களாகும். குர்ஆனையும் ஹதீதையும் ஆழ்ந்து ஆராய்ச்சி செய்து, அதன் பலனாகச் சில பெரியார்கள் இவ்வித பிக்ஹு சட்டங்கள் தொகுத்தார்கள். அத்தகைய மகான்களுக்கு இஸ்லாமிய வழக்கிலே "இமாம்" என்று பெயர். அவர் களில் முக்கிய இடம் பெற்றவர் இமாம் அபூ ஹனீபா.

இவரது வாழ்க்கையின் பல துறைகளிலிருந்தும் நாம் கற்றுக்கொள்ளவேண்டிய படிப்பினைகள் எத்தனையோ இருக் கின்றன. தனி வாழ்க்கைக்கும், சமுதாய வாழ்க்கைக்கும், பொருளாதார வாழ்க்கைக்கும், அரசியல் வாழ்க்கைக்கும்,

குடும்பத்திற்கும், அரசாங்கத்திற்கும், அரசியல் அமைப் போருக்கும், அவர் நல்லதொரு வழிகாட்டியாகத் திகழ் கின்ருர். பக்தர்களுக்கும் ஒளிவிளக்காக விளங்குகிருர். முஸ்லிம் சட்டத் தொகுப்பாளரில் அவரே முதலிடம் பெறு கிருர். பிக்ஹு கல்வியில் மட்டுமல்ல, ஆளுல், அரசியல் வழிகாட்டியாகவும் அமைந்திருக்கிருர்.

பிந்திய உமய்யா கலீபாக்களின் காலமும், ஆரம்ப அப்பாஸி கலீபாக்களின் காலமும் இமாம் அபூஹனீபாவின் வாழ்க்கைக் காலமாகும். கற்ருேருக்கும் மற்ருேருக்கும் துன்பங்கள் நிறைந்த அக்காலத்தில் இமாம் அபூ ஹனீபா வின் வாழ்க்கையானது, இறைநேசம், பொறுமை, வீரம், தியாகம், விடாமுயற்சி, அஞ்சாமை, முதலான பெருங் குணங்களுக்கு உதாரணமாகத் திகழ்கின்றது.

உலகிலுள்ள எழுபது கோடி முஸ்லிம்களுடைய தனிப் பட்ட, குடும்ப, சமுதாய, அரசியல், ஆத்மீக வாழ்க்கைத் துறைகளில் இந்தத் தவத்திரு பெருமகனரின் வாழ்க்கைவர லாறுகளும் ஆராய்ச்சிகளும், இருளில் ஒளியைப் போன்ற தன்மையுடையன. இஸ்லாமிய நெறியில் வாழ்க்கை நடத்த விரும்பும் ஒவ்வொருவருக்கும் இது வழிகாட்டியாக அமைந் துள்ளது. எனவே, விசால நோக்குடன், மக்கள் இப் பெரியாரது வாழ்க்கையைப் படித்துப் பயன்பெறுவாராக!

ஜமால் முஹம்மத் கல்லூரி,
திருச்சிராப்பள்ளி.
25, ஷாபான், 1375.
15—2—1960

ஸையித் இப்ராஹீம்

பிஸ்மில்லாஹிர் ரஹ்மானிர் ரஹீம்.
எப்புகழும் அல்லாஹ்வுக்கே. ஸலவாத்தும் ஸலாமும்
எம்பெருமானார் (ஸல்) அவர்கள்மீதும்
அவர்களது இனமித்திரர்மீதும்
உண்டாவதாக!

# இமாம்
# அபூ ஹனீபா
## ரஹ்மத்துல்லாஹி அலைஹி

## 1. தோற்றுவாய்

அனாதிகால முதல் இறைவன் ஒருவனே. ஆனால், இறைவன் ஒருவனே என்று பிரச்சாரஞ் செய்து வணங்கியோர் முஸ்லிம்களே. உலக சரித்திரத்தில் எத்தனையோ தீர்க்கதரிசிகள் வந்து வந்து ஏகனைப்பற்றிப் பிரச்சாரஞ் செய்தார்கள். வேதங்கள் கொண்டுவந்தார்கள். ஆனால், அவர்களைப் பின்பற்றுவோர் அவ்வேதங்களைக் கூட்டியும் குறைத்தும், ஏகதெய்வக் கொள்கையைக் கைவிட்டு, ஆண்டவனோடு அவனல்லாதவற்றையும் சேர்ந்து வணங்கினார்கள். சிலர் இணைவைத்து வணங்கினார்கள். சிலர் பலதெய்வ வழிபாட்டை மேற்கொண்டார்கள். சிலர் இறைவனையே நிராகரித்தார்கள். இயற்கையை அடிமைப்படுத்துவதற்காகப் படைக்கப்பட்ட மனித இனமானது, இயற்கையின் அடிமையாகியதோடு, வானிலும் வையகத்திலும், நீரிலும் நிலத்திலும் சக்திவாய்ந்த அதிசயப் பொருட்களையெல்லாம் தெய்வமெனக் கைகூப்பி வணக்கஞ் செய்ய ஆரம்பித்தது. இல்லை. மண், கல், மரம், பறவை, முதலியவற்றையும் பூஜித்தது.

என்ன அநியாயம்! என்ன விபரீதம்! மனிதனைத் தனது பிரதிநிதியாக உலகத்தில் படைத்ததாக ஆண்டவன் திரு குர்ஆனில்—

"இன்னீ ஜாயிலுன் பில்அர்லி கலீபா — நாம் பூமியில் நமது பிரதிநிதியைப் படைத்தோம்" — என்று திருவுளமாகியிருக்கிறான். "ஆண்டவனுக்குத் தலைசாய்த்தல்" என்ற பொருளுள்ள இஸ்லாம் மார்க்கத்தை அத்தகைய பிரதிநிதியானவன் பின்பற்றி வந்திருப்பானாயின், அவனுக்கு வானகமும் வையகமும் அடிமையாதல் உறுதியாகும். ஆனால், அவன் தனது தீவினையால் நாயினும் கடையனானான். உலகில் பொய்மையின் இருள் நிறைந்துவிட்டது. இறைவனது மெய்யொளியை மறந்தான் மனிதன். அதை மறைக்கவும் முற்பட்டான்.

இந்த நிலைமையில் அரபிய நாட்டில் மக்கா நகரின் பக்கத்திலிருந்த ஹிரா என்னும் குகையில் அவனையே அஞ்சலி செய்துகொண்டிருந்த எம்பெருமானார் முஹம்மத் முஸ்தபா ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்களை ஆண்டவன் ஏகத்துவத் தூதராக ஏற்றுக்கொண்டான்.

நபிகள் நாதர் செய்த நற்பிரச்சாரத்தின் பலனாக, அவர்களது வாழ்நாட்களிலேயே அரபியநாடு அனைத்துமே இஸ்லாம் மார்க்கத்தை ஏற்றுக்கொண்டுவிட்டது. பிறநாடுகளுக்கும் இஸ்லாமியப் பிரசாரகர்கள் அனுப்பப்பட்டார்கள். அரபிய நாட்டைச் சூழ்ந்திருந்த கீழ ரோம ராஜ்யம், பாரசிகப் பேரரசு, எகிப்து, அபீஸீனியா முதலிய நாட்டு மன்னர்களிடம் இஸ்லாமிய தூதர்கள் சென்றார்கள். அக்கால அரசவைகளையும் இஸ்லாமிய மெய்யொளிக் கதிர்கள் அடுத்துவிட்டன.

பெருமானாரவர்களுக்குப் பிறகு, முதல் நான்கு கலீபாக்கள் திரு குர்ஆனையும் ஸுன்னத்தையும் பின்பற்றி "இறைவன் ஆட்சி"யை உலகில் ஏற்படுத்தினார்கள். இரண்டாம் கலீபா உமர் (ரலி) காலத்தில் பாரசீக ராஜ்யமும் கிழக்கு ரோம ராஜ்யத்தின் சில பாகங்களும் வெல்லப்பட்டன. இஸ்லாம் மார்க்கத்தைப் பின்பற்றிய முஸ்லிம்களின் சொல்லையும் செயலையும் கண்டு முஸ்லிமல்லாதார் கோடிக்கணக்கில் இஸ்லாம் மார்க்கத்தை ஒப்புக்கொண்டார்கள். நபிபெருமானாரது தோழர்களும் அவர்களைப் பின்பற்றியோரும், உத்தம முஸ்லிம்

பெருந்தலைவர்களும் எடுத்துக்காட்டாக நடத்திய வாழ்க்கையின் பலனாக முஸ்லிமல்லாதார் இஸ்லாமிய தேனை நாவினிக்கப் பருகினார்கள். இஸ்லாம் என்ற இயற்கையின் வளங்களைக் கண்டறிந்தார்கள். கமழும் அதன் மணத்தை நுகர்ந்து மகிழ்ந்தார்கள். இஸ்லாத்தின் மெய்யொளியைக் கண்டு கொண்டார்கள். கல்லாரும் கற்றோரும், நல்லாரும் பொல்லாரும், இஸ்லாத்தின் கனியைத் தின்று களித்தார்கள்.

இவ்வாறு, இஸ்லாமிய இல்லத்தில் வந்து சேர்ந்து கொண்ட குடும்பங்களில் அபூ ஹனீபா உடைய குடும்பமும் ஒன்றாகும்.

## 2. பிறப்பும் வளர்ப்பும்

அபூ ஹனீபா நல்லதொரு வாணிப குடும்பத்தில் தோன்றியவர். வறுமையும் அல்லலும் அறியாது அக் குடும்பம்; செல்வமாக வளர்க்கப்பட்டார், கசடறக்கற்றார். இஸ்லாமிய கலைகளைக் கற்றபின் வாழ்க்கையில் அவற்றைக் கடைப்பிடித்து நடக்கவும் செய்தார். காவலர் போன்றிருந்த அபூ ஹனீபா ஏவலாளரின் பணியேற்று எத்தகைய கவலையுமற்று வாழ்ந்தார். செல்வ வளமிருந்தால் கவலை யென்பதும் கிட்டுமா?

நுஃமான் என்பது பெற்றோரிட்ட பெயர். அபூஹனீபா என்பது மறு பெயர். இமாம் அஃலம் என்பது பட்டம். இவரது முன்னோர்களின் பூர்வ பூமி, ஈரான் நாட்டின் தெற்கிலுள்ள பாரஸ் மாகாணமாகும். அபூ ஹனீபாவின் முப்பாட்டனார் ஜூதி என்பவர் இஸ்லாம் மார்க்கத்தை ஒப்புக்கொண்டார். பிறகு, அவர் தமது குடும்பத்தாருடன் அரப் நாட்டிற்கு வந்தார். இராக் மாகாணத்தில் கூபா நகரில் குடியேறினார். அச்சமயம், ஹஸ்ரத் அலீ (ரலி) உடைய கிலாபத் நடக்குங் காலம். கூபா நகரமே கிலாபத்தின் தலைநகரமாயிருந்தது. எனவே, ஜூதி, கிலாபத்தின் தலைநகரிலேயே வசிக்க விரும்பினார். சில சமயம் கலீபாவின் தர்பாருக்குச் சென்று பணிவுடன் ஆஜராவார்.

அபூ ஹனீபாவின் தந்தையின் பெயர் தாபித். இவர் கூபாவில் பிறந்தார். குழந்தை பிறந்ததும் அதன் தகப்பனார் குழந்தையை எடுத்துக்கொண்டு ஹஸ்ரத் அலீயிடம் சென்றார். அக்குழந்தைக்காகவும் அதன் சந்ததிகளுக்காகவும் ஹஸ்ரத் அலீ துஆ செய்தார். தாபித் வளர்ந்தார். வியாபாரத்தில் ஈடுபட்டார். அபூ ஹனீபா ஹி. 80-ல் தாபித் உடைய நாற்பதாம் வயதில், கூபா நகரில் பிறந்தார். குழந்தைக்கு நுஃமான் என்று பெயரிடப்பட்டது.

அக்காலையில், ஆரம்ப கலீபாக்களின் பொற்காலம் மறைந்து உமய்யா மரபினரின் அரசு ஆரம்பமாயிருந்தது. அக்குடும்பத்தைச் சேர்ந்த அப்துல் மலிக் - பின் - மர்வான் என்பவர் கலீபாவாக இருந்தார். நபிபெருமானாரவர்களைக் கண்ணாரக்கண்டு களித்த பெரியோரிற் சிலர் உயிரோடிருந்தார்கள். பெருமானாரின் பணியாளராயிருந்த ஹஸ்ரத் அனஸ்-பின்-மாலிக் ஹி. 93-ல் காலஞ்சென்றார். இன்னொரு நாயக தோழரான ஸஹல்-பின்-ஸஅத் என்பவர் ஹி. 91-ல் காலமாகிவிட்டார். அபூ துபய்ல் ஆமிர் என்ற தோழர் ஹி 100 வரை இருந்தார். ஆனால், இப்பெரியார்களிடம் அபூ ஹனீபா ஹதீது கேட்டாரா என்பதுதான் தெரியவில்லை. இருபது வயதுக்குக் குறைந்தோர் ஹதீதுப்பாடம் கேட்கக் கூடாதென்ற ஒருவிதி அக்காலத்தில் இருந்தமையால் சிறு வயதுள்ள அபூ ஹனீபா இப்பெரியார்களிடம் ஹதீதுப் பாடம் கேட்கவில்லை போலும். எனினும், ஹஸ்ரத் அனஸ்-பின்-மாலிக் என்ற ஸஹாபி நபிபெருமானாரின் தோழரை அபூ ஹனீபா கண்டிருந்த காரணத்தால் அவரை தாபியீன்களில் ஒருவராகவே கொள்ளல்வேண்டும்.

பள்ளிப்பருவம் :—அபூ ஹனீபாவின் இளமைப் பருவமானது அரசாங்கப் புரட்சிக்காலமாகும். உமய்யா கலீபாக்கள் டமஸ்கஸ் (திமஷ்க்) நகரில் ஆட்சி செய்தார்கள். அப்பொழுதிருந்த அப்துல் மலிக் என்னும் கலீபாவின் சார்பாக மாகாண அதிபர்கள் ஆதிக்கம் செலுத்தினார்கள். இராக் மாகாணத்தில் ஹஜ்ஜாஜ்-பின்-யூஸுப் என்பவர் மாகாண அதிபதியாக இருந்தார். இஸ்லாமிய சரித்திரத்தில் ஹஜ்ஜாஜ் கொடுங்கோலராகக் கருதப்படுகிறார். மதச்சார்புள்ளோரான ஆலிம்கள், பாஸில்கள், இமாம்கள்

ஆகியோர் உமய்யா அரசாங்கத்தை விரும்பவில்லை; எனவே, ஹஜ்ஜாஜ் இவர்கள்மீது இன்னல்கள் பல புரிந்தார்.

''மற்ற நபிமார்களைப் பின்பற்றுவோர் தங்கள் தங்கள் காலத்திய கொடும்பாவிகளைச் சமர்ப்பிப்பாராயின், நாம் ஹஜ்ஜாஜை மட்டும் அவர்களுடைய எதிர்ப்பில் கொண்டு வந்தோமாயின், நம்முடைய தராசின் தட்டே கனமாக இருக்கும்'' என்று ஹஸ்ரத் உமர்-பின்-அப்துல் அஜீஸ் கூறியது முற்றிலும் உண்மையாகும்.

கலீபா அப்துல் மலீக். ஹி, 86-ல் இறந்தார். அப்பால், அவரது மைந்தர் வலீத் கலீபாவானார். இவர் காலத்தில் தான் ஐரோப்பாவில் ஸ்பெயின், ஆசியாவில் ஸிந்து போன்ற இரு பெரிய நாடுகள் இஸ்லாமிய ஆட்சியின்கீழ் வந்துவிட்டன. காரிஜிம், ஸமர்கந்து, ஆகிய நாடுகளைக் கடந்து, கிழக்கில் காபூல், வடக்கில் பர்காமு வரையிலும் இஸ்லாமியக் கொடி இலங்கிக்கொண்டிருந்தது. மத்தியத்தரைக் கடலின் மேற்கிலுள்ள மேஜர்கா, மைனர்கா, என்ற தீவுகள் வெல்லப்பட்டன. சுருங்கக் கூறுமிடத்து, வெளித் தோற்றத்தில் முஸ்லிம்கள் வெற்றிமேல் வெற்றி பெற்று, சீரும் சிறப்பும் செம்மையாகப் பெற்றுர்கள்.

ஆனல், முத்தி நெறியில், ஆத்மீகத் துறையில் அணுவளவேனும் முன்னேற்ற அடையாளம் காணப்படவில்லை. ஆட்சி பீடங்களில் அமர்ந்திருந்தோர் மக்கள்மீது கொடுமை புரிந்தார்கள். இந்தக் கொடுங்கோலாட்சியைப் பற்றி, ஹஸ்ரத் உமர்-பின்-அப்துல் அஜீஸ், ''ஷாம் தேசத்தில் வலீத்! இராக் நாட்டில் ஹஜ்ஜாஜ்,! ஹிஜாஸ் மாகாணத்தில் உதுமான்! மிஸ்ர் நாட்டில் கர்ராஹ்! உலக முழுமையுமே கொடுமையில் மூழ்கிவிட்டது!'' என்று கூறினர்.

## இமாமவர்களின் இயற்கைப் பண்புகள் வெளியாதல்

இமாமவர்கள் பிறந்த கூபா நகரில் வெகு காலமாக உண்மையான முஸ்லிம்களுக்குத் துன்பம் இழைக்கப்பட்டு வந்தது. ஹஜ்ஜாஜ் இறந்தபொழுது, இமாமுக்கு வயது பதினைந்தே. சிறுவயதில் இமாமவர்கள் பிக்ஹு கலையை

மட்டும் கற்பதில் காலங்கழித்தார். அச்சமயம், வியாபாரத்திற்காகவும், தர்க்கம் செய்வதற்காகவும் பஸ்ரா நகர் செல்வார். அரசாங்க விஷயங்களில் கலந்துகொள்ளவில்லை. ஆனால், அவரது நாற்பத்திரண்டாம் வயதிற்குப் பிறகே அவர் அரசியல் விஷயங்களில் கலந்தார்.

அச்சமயமிருந்த சூழ்நிலை யென்ன? உமய்யா கலீபா ஹிஷாம் என்பவர் காலத்தில் காலித் பின் அப்துல்லாஹ் கஸ்ரீ அல்லது இப்னு நஸ்ரானியா என்ற கவர்னர் ஹி. 105-லிருந்து ஹி. 120வரை கூபாவில் கவர்னராக இருந்தார். அதாவது, இமாமவர்களின் 25 முதல் 40 வயது வரை. இவர் பெயரளவில் முஸ்லிமாக இருந்தார். முஸ்லிம்களைத் துன்பப்படுத்தினர். பள்ளிவாசல்களில் மனாராக்களை இடித்தார். தமது கிறிஸ்தவ தாயாருக்காக ஒரு கிறிஸ்தவக் கோவில் கட்டினார். மேலும், அவர் பெருமானாரின் குடும்பத்தாரையும் துன்பப்படுத்தினர். கலீபா ஹிஷாமுடைய தானியங்களை விற்ற பிறகுதான் மற்றோருடைய தானியம் விற்கப்பட வேண்டுமென்று கலீபாவிடமிருந்து கட்டளை வந்தது. அதனால், பஞ்சம் உண்டாயிற்று. தானிய விலையும் உயர்ந்தது. இந்த கவர்னர் கலீபாவின் சொத்துக்களையும் அபகரிக்க முயன்றார். இறுதியாக, அவர் நீக்கப்பட்டார்.

இதற்கடுத்தபடியாக யூஸுப் என்பவர் கவர்னராக வந்தார். அவர் பக்திமான்போலத் தோன்றினர். ஆனால், அவருக்குப் பைத்தியம்பிடித்திருந்தது. முஸ்லிம்களுக்கு நன்மை ஏற்படவில்லை.

இந்த நிலைமையைக்கண்டு, ஹஸ்ரத் அபூ ஹனீபா மனம் நொந்தார். அச்சமயம், கலீபாவின் கட்டளையின் பிரகாரம், ஹஸ்ரத் ஜைத் பின் அலீ என்ற, பெருமானாரின் குடும்பத்தைச் சேர்ந்த, பெரியார் கூபா நகருக்குக் கொண்டுவரப்பட்டார். அவரும் அங்கு கஷ்டப்பட்டார். பிறகு கொல்லப்பட்டார். இந்த நிகழ்ச்சிகளால், இமாமவர்களுடைய உள்ளம் கொதித்தெழுந்தது.

இந்த மாபெரும் மாறுதல்கள் நடந்த காலங்களிலும் கலைக் கழகங்களின் கதவுகள் அடைக்கப்படவில்லை. ஹதீது, ரிவாயத்துகளின் பாடங்கள் கற்பிக்கப்பட்டு வந்தன. மன

நிம்மதி இல்லாத அக்காலத்திலும், புகஹாக்களும் முஹத்தி தீன்களும் தத்தம் மாணவருக்கு பிக்ஹு, ஹதீது பாடங் களைத் தொடர்ந்து கற்பித்து வந்தார்கள். ஆனால், இந்தக் கலைகள் எந்த அளவில் தன்மையிலும் உயர்வு பெற்றிருக்க வேண்டுமோ அந்த முறையில் இல்லாம லிருந்தன.

ஹஜ்ஜாஜ் ஹி. 95-ல் இறந்தார். கலீபா வலீத் ஹி. 96-ல் இறந்தார். இராக் நாட்டு மக்களுக்கு நல்ல காலம் பிறந்தது. ஸுலைமான்-பின்-அப்துல் மலிக் என்பவர் கலீபா வானார். உமய்யா கலீபாக்களிலெல்லாம் இவர் மிக மேன்மையானவர் என்று சரித்திராசிரியர்கள் கூறுகிறார்கள். இவரே ஹஸ்ரத் உமர் பின் அப்துல் அஜீஸைத் தமது ஆலோசகராக நியமித்தார். இதனால், இஸ்லாமிய உலகிற்கு நன்மை ஏற்பட்டது. மேலும், இவர் இறக்கும்பொழுது தமக் குப் பின் உமர்-பின்-அப்துல் அஜீஸ், கலீபா ஆக வேண்டு மென்று மரண சாசனம் எழுதினார். ஸுலைமான் ஹி. 99-ல் இறந்துபோக, ஹஸ்ரத் உமர்-பின்-அப்துல் அஜீஸ் கலீபா வானார். இப்புதிய கலீபா காலத்தில் நிம்மதியும் நீதியும் நிலவி நின்றன. மக்களுக்குக் கல்விச் செல்வம் கிடைத்தது. ஒழுக்கம் ஓங்கியது. மக்களிடையில் ஒரு நவீன உணர்ச்சி பிறந்து புத்துயிர்பெற்று எழுந்தது. ஒவ்வொரு முஸ்லிம் இல்லத்திலும் இஸ்லாமியக் கலைகள் பரவலாயின. ஹதீது களைச் சேகரித்துத் தொகுக்கும்படி இமாம் ஸஹரீ (Zahri) என்பவருக்கு இந்த கலீபா உத்திரவிட்டார். அவ்வாறே ஹதீதுகள் சேகரிக்கப்பட்டன. அவற்றின் பிரதிகள் இஸ் லாமிய நாடுகளுக்கு அனுப்பப்பட்டன.

இமாம் அபூ ஹனிபா பிறந்து வளர்ந்த காலம் இஸ்லா மிய சரித்திரத்தில் உமய்யா கலீபாக்களின் காலமாகும். அவர்களுக்குமுன் இஸ்லாமியக் குடியரசின் பணியைத் தாங் கிய நேர்வழி நடந்த நான்கு கலீபாக்களுக்கும் உமய்யாக் களுக்கும், மலைக்கும் மடுவுக்குமுள்ள வேறுபாடு இருந்தது. பொதுவாக உமய்யாக்கள் கொடுங்கோலர் களாகவே இருந்தார்கள். மக்களைப் பயமுறுத்தினார்கள். இரத்தம் சிந்தினார்கள். ஹஸ்ரத் இமாம் ஹுஸைன் (ரலி) கர்பலாவில் உயிரிழந்த காலமுதல், இவர்கள் பெருமானா ரின் குடும்பத்தாரைத் துன்புறுத்தி இன்பம் பெற்றார்கள்.

பெருமானாரின் நகரமான மதீனாவைக் கொள்ளையடித்தார்கள். மஸ்ஜித் நபவி என்ற மதீனா பள்ளிவாசலில் வெகுகாலம்வரை நாயகதோழர் ஸயீத் பின் முஸய்யப்என்பவரைத் தவிர வேறெவரும் தொழுகைக்கு வரமாட்டார்கள். மக்காவிலுள்ள புனித காபாவையும் அவர்கள் மதிக்கவில்லை. முதல் கலீபா ஹஸ்ரத் அபூபக்கருடைய பௌத்திரர் அப்துல்லாஹ் பின் ஜுபைர் என்பவரைக் கொன்று, மக்காவில் ஹஜ்ஜாஜ் பின் யூஸுப் என்ற உமய்யா தளபதி அவரைத் தூக்கு மரத்தில் தொங்கவிட்டார். இராக், ஈரான், பலூசிஸ்தான் முதலிய நாடுகளுக்கு இந்த ஹஜ்ஜாஜ் பின் யூஸுப் கவர்னராக இருக்கும்பொழுது, ஆயிரக்கணக்கான முஸ்லிம்களைக் கொன்றார். உமய்யாக்கள் ரோம சக்ரவர்த்திகளைப் போலவும், பாரசீக சக்ரவர்த்திகளைப் போலவும் பலவந்த சர்வாதிகாரஞ் செய்தார்கள்.

இமாம் அபூ ஹனீபா பிறந்து வளர்ந்த கூபா நகரில், வெகுகாலமாக இப்னு ஜியாத் என்ற இரக்கமற்ற கவர்னர் ஆட்சி செய்துகொண்டிருந்தார். பிறகு, ஹஜ்ஜாஜ் என்ற கவர்னரின் கொடுங்கோல்! இருபது ஆண்டுகள்வரை அநியாயம் நடந்தது! வாள் வெகு தாராளமாக உபயோகிக்கப்பட்டது. தலைநகரில் வசித்தபடியால் மற்றூரைவிட கூபாவிலிருந்த மக்கள் அதிகமாகத் துன்பப்பட்டார்கள். இமாம் அபூ ஹனீபாவின் ஆசிரியரின் ஆசிரியரான ஹஸ்ரத் இப்ராஹீம் நக்யீ என்றும் பெரியார், அந்த ஹஜ்ஜாஜ் இறந்த செய்திகேட்டு உடனே, இறைவனுக்கு நன்றி செலுத்தி பூமியில் தலையை வைத்து வணங்கினார். மேலும், அவரது கண்களிலிருந்து ஆனந்தக் கண்ணீர் வடிந்து கொண்டே இருந்தது. இரும்புத் தண்டத்தால், வாளால், அநியாயத்தால் ஆட்சி—கொடுங்கோலாட்சி—இறைவனை மறந்த ஆட்சி—நடந்த காலம் அது. எவராயினும் தைரியத்துடன் அரசியலின் பிழையைக்கூறி, ஆட்சி பீடத்திலுள்ளோரைத் திருத்த முயன்றாலும், அந்த முயற்சியில் அவர், தங்கள் உயிரோடு விளையாடுவோராகவே இருப்பார். காஜா ஹஸன் பஸ்ரீ இப்னு ஸீரீன், இப்ராஹீம் நக்யீ, ஷஃபி, போன்ற பெரிய இமாம்களும், ஒன்றும் சொல்லாமல் இருக்க வேண்டிய நிலைமைஏற்பட்டது. இப்படி ஒரு தலைமுறை வளர்ந்தால் சமூ

கத்தில் வளரும் சிறுவரும், வாலிபரும், முதியோரானால், அவர்களது குடும்பத்திற்கும், சமுதாயத்திற்கும், உலகிற்கும் என்ன பலன் கிடைக்கும்? தைரியமும், உண்மையும், தியாகபுத்தியும் ஆத்மீக உயர்வும் கோழைகளாகி, நரிகளாகிப் பிழைப்போரிடம் காணப்படுமா?

இஸ்லாம் மார்க்கம் உலகிற்குப் போதித்த ஒன்று குலம், ஒன்றிறைவன், சமத்துவம், சகோதரத்தும், இறையச்ச வாழ்க்கை—இவற்றை எவ்வாறு மக்கள் தம் வாழ்க்கையில் பின்பற்ற முடியும்? குர்ஆனின் விளக்கமாக அமைந்த—நபி பெருமானாரின் முன்மாதிரியான—வாழ்க்கையை மக்கள் எவ்வாறு பின்பற்ற முடியும்?

அமர் பில் மாருப் வ நஹ்யு அனில் முன்கர்—நல்ல செயல் செய்யும்படி மக்களைத் தூண்டி, கெட்ட செயலிலிருந்து மக்களை விலக்குவதற்கு ஒரு நல்ல குழு மக்களுக்கிடையில் எவ்வாறு ஏற்படும்?

ஆனால், இஸ்லாமிய சரித்திரத்தில் அற்புதங்கள் பல நடந்திருக்கின்றன. முஸ்லிம்களின் நிலைமை மிகமிகச் சீர்கேடுற்று, அவர்களுடைய முன்னேற்றக் கப்பல், கடலில், புயலில், தாழ்ந்துவிடும் என்று எதிரிகள் தீர்க்கதரிசனம் செய்யும் அந்த வேளையில், ஒரு மாற்றம்—ஒரு புரட்சி—ஓர் அற்புதம் உண்டாகும்! மறைவான இடத்திலிருந்து—உதவி கிடைக்கும்! நம்பிக்கையே இல்லாத இடத்திலிருந்து நம்பிக்கை உண்டாகும்! இந்த நூற்றுண்டில்-கி. பி. 1922-ம் ஆண்டில்-துருக்கியில் இத்தகைய பெருமாற்றமும் அரிய அற்புதமும் உண்டாகிப் புதிய துருக்கிக் குடியரசு தோன்றியதல்லவா? இஸ்லாத்தை அழிக்க வந்த தாதாரித் துருக்கியர், கி. பி. 1258ல் இஸ்லாமியத் தலைநகரான பக்தாதை அழித்து இஸ்லாத்தை அழித்துவிட்டதாகத் திருப்திகொண்டார்கள். ஆனால், அடுத்த தலைமுறை கழிந்தது. அவர்களே முஸ்லிமாகி, இஸ்லாத்தின் பாதுகாவலர்களாகப் புறப்பட்டார்கள். இது வரலாறு கூறும் உண்மை.

"முக்ரிஜுல் ஹய்யு மினல் மய்யிதி—(இறைவனுகிய) நாம் இறந்தோரிலிருந்து உயிருள்ளோரை உண்டாக்குவோம்." என்ற இறைவசனத்தின் பிரகாரம், இந்த உமய்யா

அரசர்கள்—இறைவனை மறந்த பிணங்கள்—ஆட்சிசெய்த குடும்பத்தில் உமர் பின் அப்துல் அஜீஸ் என்ற ஒரு புனிதர் நல்லாட்சி செய்தார். அவர் காலத்தில் மறுபடியும் மக்கள் இறையச்ச வாழ்க்கை நடத்தி இன்புற்றிருக்க வகைசெய்தார். முஸ்லிம்களின் புதிய நரம்புகளில் புதிய இரத்தம் ஓடிப் புனித வாழ்க்கை நடத்த உதவினர். மக்களின் வாழ்க்கையின் வானிலே புதியதொரு மின்னலும், மின் வேகமும் பிறந்தது.

அப்பொழுது நமது இமாம் அபூ ஹனீபாவுக்கு வாலிப வயது. உமர் பின் அப்துல் அஜீஸ் என்பவர் கலீபா பதவியை ஏற்றவுடன் பள்ளிவாசலில் அவர் ஆற்றிய அரிய சொற்பொழிவில், "ஆண்டவனுடைய கட்டளைகளுக்கு விரோதமாக என் கட்டளைகள் இருந்தால், மக்கள் எனக்குக் கீழ்ப்படியவேண்டாம்." என்றார். அக்காலத்தில், அந்தச் சூழ்நிலையில், உமய்யா குடும்பத்தில் பிறந்த ஒருவர் வாயிலிருந்து வரக்கூடிய பொன்மொழிகளல்ல இவை.

இந்த வாக்கியத்தை மக்கள் கேட்ட நாளே அவர்களுடைய சுவாதீன நாள்! விடுதலை விழா! பிரஜைகளைத் துன்புறுத்திய கவர்னர்களை இந்தப் புதிய கலீபா உடனே நீக்கிவிட்டார். குறைகள் நீக்கப்பட்டன. நபிபெருமானாரவர்களுக்குப் பிறகு நேர்வழி நடந்த நான்கு கலீபாக்கள் முப்பது ஆண்டுகள் இஸ்லாமியக் குடியரசைப் பேணிப் பாதுகாத்த முறையை—இஸ்லாமிய நெறியை—பெருமானாரின் வாழ்கை வழியைப் பின்பற்றி இந்த மகான் ஆட்சிசெய்து மக்களுக்குப் பணியாற்றினர்.

இதன் விளைவு என்ன? அதற்கு முன் பூட்டப்பட்டிருந்த வாய்கள் திறந்தன. விடுதலை யடைந்தன. சுதந்திரத்துடன் பேச ஆரம்பித்தன. நேர்வழியில் நடக்கும்படி மக்களுக்கு கட்டளையிட்டன. தீநெறியிலிருந்து விலகும்படி மக்களைத் தடுத்தன. உண்மையை உரைத்தன. உள்ளத்திலிருப்பதை மறைக்காமல் வெளியிடும் தைரியம் மக்களுக்குப் பிறந்தது. அணைந்து விடுமோ என்று அஞ்சப்பட்ட சத்திய விளக்கு பிரகாசம் பெற்றது. அன்றுவரை வாய் பொத்தி இருந்தோர் தாராளமாகத் தமது கருத்துக்களை வெளியிட்டார்கள்.

மக்கள் இவ்வாறு சுதந்திரம் பெற்றார்கள். இரண்டாவதாக மக்கள் இஸ்லாமிய வாழ்க்கை நடத்த உமர்-பின்-அப்துல் அஜீஸ் உதவிசெய்தார். அவருக்கு முன்னிருந்த உமய்யாக்களின் இஸ்லாமல்லாத வாழ்க்கையின் பலனாக, பொது மக்கள் அதைப் பின்பற்றிக் கெட்டுவிட்டார்கள். குர்ஆன், ஹதீத், அவற்றின் விளக்கமான பிக்ஹு-இவற்றின் மீதிருந்த பற்றும் குறைந்துகொண்டே வந்தது. இஸ்லாமிய சட்டங்களைப் பின்பற்றாத அரசாங்கத்தில் இருக்கும் முஸ்லிம்கள் ஒரு தலைமுறை—அல்லது அதற்கு அதிகமான காலத்தில் இருந்தால்-முஸ்லிம் அல்லாத விஷயங்களைப் பிரதானமானதாகக் கருதி அவற்றைப் பின்பற்றி-அரசியலாரைப் பின்பற்றி அவர்களைப் புகழ்ந்து, அவர்களுடைய பழக்கவழக்க்ங்களை மேலென்று நினைத்து — இஸ்லாமிய உண்மைகளையும் நபி பெருமானாரின் ஸுன்னத்தையும் சிறிது சிறிதாகமறந்து, இஸ்லாமிய வாழ்க்கை முறைகளின் அவசியத்தையும் உணராமல் போய்-விடுவார்கள். இஸ்லாமிய முறையைப் பின்பற்றாத அரசியல்களிலுள்ள முஸ்லிம்கள் பொதுவாக அத்தகைய முஸ்லிமல்லாத அரசியலின் பழக்க வழக்கங்களையும் கல்வியையும் கலாச்சாரத்தையும் தங்கள் வாழ்க்கைக்குத் தேவையானவையென்று பிழையாக நினைத்து அவற்றைப் பின்பற்றி இஸ்லாமிய கல்வியையும் பண்பாடுகளையும் அவசியமில்லாதனவர்க நினைத்து, காலம் செல்லச்செல்ல இஸ்லாமியப் பண்புகளை, ஒழுக்க விதிகளை, ஆத்மஞான நெறியை, விட்டுவிடுதல் அன்றும் இன்றும் நாம் காணக்கூடிய ஒரு துக்ககரமான காட்சி! அத்தகைய முஸ்லிம் சமுதாயம் உயிரற்ற சமுதாயமாக மாறிவிடுகிறது. முஸ்லிம்கள் இஸ்லாமிய சட்டதிட்டங்களை விட்டுவிட்டு, இலக்கியம், கவிதை முதலிய துறைகளில் காலத்தைப் போக்க ஆரம்பிப்பார்கள். உமய்யாக்கள் காலத்திலிருந்த முஸ்லிம் பொது மக்கள் இஸ்லாமிய மத சம்பந்தமானவற்றில் கவலை செலுத்தியதெல்லாம், தத்துவ சம்பந்தமான இஸ்லாமிய விஷயங்களை, அதாவது இல்முல் கலாம் என்னும் கலையைக் கற்றார்கள். தர்க்க சாஸ்திரமும், பகுத்தறிவின் அடிப்படையில் வாதஞ்செய்தலும் ஒரு மத விஷயமாகக் கருதப்பட்டது. இமாம் அபூ ஹனீபாவும்

ஆரம்பத்தில் இதே நிலையில்தான் இருந்தார். "நான் ஆரம்பத்தில் இல்முல் கலாமையே மற்றெல்லாக் கல்விகளை விட மேலானதாகக் கருதி வந்தேன். மதத்தின் அடிப்படையில் தான் தர்க்கப் பேச்சுக்கள் நடக்கின்றன என்றும் நினைத்தேன்" என்று அவர் தம்மைப்பற்றிக் கூறுகிறார். இயற்கையில், நூலறிவும் நுண்ணறிவும், சிந்தனைச் செல்வமும் நிறைந்த இமாம் அபூ ஹனீபா இதில் அதிக கவனஞ் செலுத்தி இல்முல் கலாம் என்ற கலையில் முதல்வர் என்று பெயர் பெற்றுவிட்டார்! தமது அறிவுத் திறனைக் காட்டுவதற்குகூபா நகரம் சிறிதாகத் தோன்றும்பொழுதெல்லாம் அங்கிருந்து பெரிய பஸ்ரா நகருக்குச் செல்வார். ஏனென்றால், அக்காலத்தில் இல்முல் கலாம் என்ற கலையில் அந்த நகரமே முதன்மை பெற்றிருந்தது. அந்த நகரில் வார்த்தை வாதம் செய்வோர் — சண்டையிடுவோர்— இவர்களின் ஒரு பெரிய கூட்டம் — இருந்தது. அவர் அந்த நகருக்கு ஏறத்தாழ இருபது தடவை தர்க்கஞ் செய்யச் சென்றார். சண்டை போடும் நோக்கத்துடன் செல்வார்! சென்றால் ஓராண்டு வரை அங்கு தங்குவார்!

இவ்வாறு முஸ்லிம்களின் வாழ்க்கை வீணாகிக்கொண்டிருந்தது. அவர்களுக்கிடையில் பல கட்சிகள் தோன்றின. அரசாங்கம் இதைப் பார்த்துக்கொண்டிருந்தது. இதனால் அரசாங்கத்திற்கு நஷ்டம் ஏற்படவில்லை. ஊர் இரண்டு பட்டால் கூத்தாடிக்கு இன்பமும் இலாபமும் கிடைக்குமல்லவா?

இவ்வாறு, தர்க்கஞ் செய்வோர் யுக்தியால் செய்வார்கள், அதை மதமென்று நினைத்துக்கொள்வார்கள். ஆனால், அந்தப் பேச்சுக்கள் ஸஹாபாக்களின் பேச்சுக்களைப் போன்றதல்ல. அவர்களுடைய நடவடிக்கைகளும் ஸாலிஹீன்—சான்றோர்களின் நடவடிக்கையல்ல, அவர்களுடைய உள்ளம் கடினமானது. உணர்ச்சியற்றது. குர்ஆனுக்கும், நபிபெருமானாரின் ஸுன்னத்திற்கும் விரோதமாகப் பேச அவர்கள் பின்வாங்கமாட்டார்கள்! இறையச்சமென்பதே அவர்களிடம் கிடையாது!

இந்த நிலைமையில் ஹஸ்ரத் உமர் பின் அப்துல் அஜீஸ் என்ற மகான் கலீபாவாக வராவிட்டால், முஸ்லிம்களின் கதி அதோகதிதான். இவர் இஸ்லாமிய வாழ்க்கையின் மறு மலர்ச்சிக்காக அரும்பாடுபட்டார்.

"ஆண்டவன் என் கையால் எல்லா அநாச்சாரங்களை யும் அகற்றி, எல்லா ஸுன்னத்துக்களையும் என் கையால் உயிர்ப்பித்து, இந்த முயற்சியில் என் உடலின் ஒவ்வொரு பாகமும் எனக்கு உதவி செய்து, இறுதியாக இதில் எனக்கு மரணம் வந்தாலும், இது இறை நெறியில் நான் செய்யும் ஓர் எளிய அர்ப்பணமாகும்" என்றார்.

குறிப்பிட்ட தீயசெயல்களைச் செய்யவிடாமல் மக்களைத் தடுக்கவேண்டுமென்றும், குறிப்பிட்டதொரு ஸுன்னத்தைப் பின்பற்றவேண்டுமென்றும் அவர் தமது கவர்னர்களுக்கும் இதர அரசாங்க அலுவலர்களுக்கும் எழுதும் கடிதங்களில் குறிப்பிடுவார். அவர் ஆட்சி செய்த இரண்டரை ஆண்டு கள் முழுதும் இவ்வாறு எழுதிக்கொண்டே இருந்தார்.

இதன் பலனாக, மக்கள் மனதில் ஒரு புரட்சியும் மாற்ற மும் உண்டாயிற்று. குர்ஆனை மறந்தவர்கள் மறுபடியும் வெகு ஊக்கத்துடனும் உணர்ச்சியுடனும் அதன் பக்கம் திரும்பினார்கள். இமாம் அபூ ஹனீபாவும் மாறிவிட்டார்.

"வெகுகாலம் இல்முல் கலாமில் என் காலத்தைக் கழித்த பிறகு, எனது மனதைப் பரிசோதித்தேன், சிந்தனை செய்தேன். அப்பொழுது, நபி பெருமானாரவர்களுடைய தோழர்களிடமும், அவர்களைப் பின்பற்றிய தாபியீன்களிட மும், நாம் இப்பொழுது பெறவேண்டுமென்று விருப்புகிற எந்த வஸ்துவும் தப்பிவிடவில்லை. எல்லா விஷயங்களையும் அறியும் சக்தி அவர்களிடம் இருந்தது. இந்த விஷயங்களை அவர்கள் நன்றாய் அறிந்திருந்தார்கள். அவற்றின் நன்மை தீமைகளும் அவர்களுக்குத் தெரியும். ஆனால், இத்தகைய பிரச்சினைகளைப் பற்றி அவர்கள் வாக்கு வாதம் செய்யவு மில்லை. சண்டை சச்சரவுகள் செய்யவுமில்லை. இந்த விஷ யங்களைப்பற்றி அவர்கள் சந்தேகப்படவுமில்லை. இதைப்பற்றி

அவர்கள் மௌனம் சாதித்தார்கள். இஸ்லாமிய சட்டங்களான பிக்ஹு விஷயமாய் அவர்கள் ஆராய்ச்சி செய்தார்கள். அவற்றைப் பற்றிப் பேசுவார்கள். அவற்றை அனுசரிக்கும்படி மக்களுக்குப் போதிப்பார்கள்.'' என்று இமாம் அபூ ஹனீபா கூறுகின்றார்.

ஹஸ்ரத் உமர் பின் அப்துல் அஜீஸ் செய்த பிரச்சாரத்தின் பலனாக, இமாம் அபூ ஹனீபா தமது மூளையில் சேகரித்து வைத்திருந்த பகுத்தறிவுக் கருவூலத்தை அழித்துவிட்டார். தர்க்கம் செய்யுமிடத்திற்குப் போவதை நிறுத்திவிட்டார். ஸஹாபாக்கள் சென்ற வழியைப் பின்பற்றினார். அதில் சென்றார்.

ஆனால், ஷரீயத் விஷயங்களில் அவர் ஒரு புதிய ஆரம்ப மாணவராகவே இருந்தார். ஏனென்றால், அதை அதற்கு முன் அவர் கற்கவில்லை. ஆனால், நல்ல வயது, சிறந்த அறிவு, நிறைந்த ஊக்கம், பொங்கி எழும் கல்வித் தாகம் — இவையெல்லாம் சேர்ந்து, அவரை ஹஸ்ரத் ஹமாம் பின் ஸபீ ஸுலைமான் என்ற பேராசிரியரிடம் போய்ப் பாடங் கேட்கச்செய்தது. அதில் அவரது முழு கவனமும் சென்றது.

பத்து ஆண்டுகள் அவருடன் இருந்தார். அதற்குப் பிறகும் தொடர்ந்து பாடங் கற்றார். ஆசிரியருடைய மரணம் வரை அவரைவிட்டுப் பிரியவில்லை.

அதற்குப் பிறகு தாம் பெற்ற இஸ்லாமிய செல்வத்தைப் பிறருக்கு அளிக்க முயன்றார். இதற்கும் காரணமானவர் உமர் பின் அப்துல் அஜீஸ் என்ற புண்ணிய புருஷரே. மக்கள் இஸ்லாமிய கல்வி யறிவு பெற்று, அதை விளம்பரப் படுத்துவதில் ஈடுபட வேண்டுமென்றும் அவர் விரும்பினார். ஆனால், அவர் இரண்டரை ஆண்டு ஆட்சிசெய்த பிறகு காலஞ் சென்றுவிட்டார். அவருக்குப் பிறகு அப்துல் மலிக் என்பவருடையபுத்திரர் எஜீத் என்பவர் கலீபாவானார். இந்தப் புதிய உமய்யா கலீபா, தமது முதல் அறிக்கையில்.

''தெரிந்துகொள்வீர்களாக! உமர் பின் அப்துல் அஜீஸ் ஒரு ஏமாற்றுக்காரர்........ உமர் காலத்தில் நீங்கள் நல்லதாகக் கருதியவற்றையெல்லாம் விட்டுவிடுங்கள். அவர்

காலத்திற்குமுன் மக்கள் எந்த நிலைமையில் இருந்தார்களோ அந்த நிலைமைக்கு அவர்களைத் திருப்பிவிடுங்கள். மக்கள் இதை விரும்பினாலும் விரும்பாவிட்டாலும், அவர்கள் செத்தாலும் பிழைத்தாலும் சரி, அரசியல் கட்டளைகள் வாபஸ் வாங்கப்படமாட்டாது'' என்று பிரகடனம் செய்தார்.

இந்த நிலைமையில், இமாம் அபூ ஹனீபா எவ்வாறு இஸ்லாமியப் பிரச்சாரம் செய்யமுடியும்? இந்த கலீபாவுக்குப் பிறகு, ஆறு உமய்யா கலீபாக்கள் நன்னெறி தவறி ஆட்சி செய்ததையும் இமாம் அபூ ஹனீபா பார்த்துக்கொண்டிருந்தார். அவர் மக்களுக்கு எவ்வாறு போதனை செய்யமுடியும்? ஆட்சி பீடத்தில் இஸ்லாமிய நெறிக்கு முரணான உமய்யாக்கள் உட்கார்ந்துகொண்டு, தாமும் பாவஞ்செய்து மக்களையும் பாவிகளாக்க முயன்றார்கள்!

ஆனால், தூய்மையான உள்ளத்துடன் ஆரம்பிக்கப்படும் எந்த இயக்கமும் இறுதியில் இறைவனருளால் வெற்றி பெற்றே தீரும். ஹஸ்ரத் உமர் பின் அப்துல் அஜீஸ் மூட்டிய நெருப்பானது, இமாம் அபூ ஹனீபா போன்ற வாலிபர்களின் உள்ளத்தில் மறைந்து—ஆனால் — எரிந்து ஒளிவீசிக் கொண்டே இருந்தது!

இன்று உலகில் நாற்பது கோடி முஸ்லிம்களுடைய தனிப்பட்ட, குடும்ப, சமுதாய, அரசியல் வாழ்க்கைத் துறைகளில் இமாம் அபூ ஹனீபாவின் திருப்பணி, இருளில் ஒளி வீசுவதைப்போல், இஸ்லாமிய நெறியில் வாழ்க்கை நடத்த விரும்பும் ஒவ்வொரு ஆண் பெண்ணுக்கு வழி காட்டியாக அமைந்துள்ளது

கவர்னர் ஹஜ்ஜாஜும், கலீபா வலீதும், உயிரோடிருந்த காலத்தில் அபூ ஹனீபாவுக்குக் கல்வி கற்க வாய்ப்புக் கிடைக்கவில்லை எனவே, தமது குடும்பத் தொழிலான வியாபாரத்தில் ஈடுபட்டிருந்தார். கலீபா ஸுலைமான் காலத்தில் கல்வி கற்கும் சாதனங்கள் ஏற்பட்டவுடன், இந்த மாணவருக்கும் ஆர்வமுண்டாயிற்று. அச்சமயம் நடந்ததொரு சம்பவம் அந்த ஆர்வத்தைப் பூர்த்தி செய்தது.

இமாம் ஷாபி:—ஒரு நாள் அபூஹனீபா கடைத்தெரு வழியாகச் சென்று கொண்டிருந்தார். வழியில் ஷாபி என்ற பேராசிரியரின் வீட்டைக் கடந்து செல்லவேண்டியிருந்தது. ஷாபி என்பவர் கூபா நகரில் புகழ்பெற்றவர். அங்கு சென்று கொண்டிருந்த வாலிபர் ஒருகால் மாணுக்கராயிருக்கலாமென்று நினைத்து, இமாம் ஷாபீ அந்த வாலிபரை அழைத்தார்.

ஷாபீ:—வாலிபரே! எங்கு போகிறீர்?

அபூ ஹனிபா:—நான் ஒரு வர்த்தகரிடம் போகிறேன்.

ஷாபீ:—நீர் யாரிடம் கல்வி கற்கிறீர்?

அபூ ஹனீபா:—(அதிக துக்கத்துடன்) எவரிடமும் படிக்கவில்லை.

ஷாபீ:—உயர்வின் அறிகுறிகளை உம்மிடம் நான் காண்கிறேன். நீர் உலமாக்களுடைய தோழமையில் உட்காருவீராக!

அன்று முதல் அபூ ஹனீபாவுக்குக் கல்வித் தாகம் அதிகரித்துவிட்டது. அக்காலத்தில், ஹதீது, பிக்ஹு, கலாம், இவை சம்பந்தமான பாடங்களே கல்வியில் முக்கியமானவை. அபூ ஹனீபா முதலாவதாக இல்முல் கலாம் கற்றார். அதில் அதிக தேர்ச்சியடைந்தார். அவருக்கு இக்கலை வெகு சீக்கிரம் வந்துவிட்டது. அக்காலத்தில் அவருடன் வாக்குவாதம் செய்ய ஒருவரும் நெருங்குவதில்லை.

பிக்ஹு:—அபூ ஹனீபா அடிக்கடி வியாபார சம்பந்தமாக பஸ்ரா நகரம் செல்வார். அச்சமயம், அந்நகரம், குத்ரீ, முர்ஜீ, மூதஜிலி, ஜஹ்மீ, காரிஜீ, ராப்ஜீ முதலிய கொள்கையுடையோருக்கு உறைவிடமாயிருந்தது. குறிப்பாக காரிஜிகளுக்கு அங்கு அதிக செல்வாக்கிருந்தது. இந்தப் பிரிவுகளுடன் சமயவாதம் செய்யும் இல்முக்கு (கல்விக்கு) " இல்முல் கலாம் " என்று கூறப்பட்டது.

அபூ ஹனீபாவும் பஸ்ரா நகருக்குச் சென்றகாலையில் அங்குள்ள தலைவர்களோடு தர்க்கஞ் செய்தார். வாதில் எதிரிகளைத் தோற்கடித்து வந்தார். ஆயினும், சொற்போர்

புரிந்து வார்த்தை வாதங்கள் செய்யும் இந்தக் கலையை விட்டு விட்டு, பிக்ஹு கலையைக் கற்க ஆரம்பித்தார். இதற்கான பல காரணங்களுமிருந்தன.

முதலாவது, இல்முல் கலாம் என்ற வாக்குவாதக் கலையைப் பற்றி பெருமானாரவர்களது தோழர்களுக்குத் தெரிந்திருந்தும், அவர்கள் தங்களது நேரத்தை இதில் வீணாக்காமல், பிக்ஹு சம்பந்தமான மஸ்அலாக்களில் கவனஞ் செலுத்தியதோடு பிறருக்கும் இதையே கற்பித்தார்கள்.

இரண்டாவது, இல்முல் கலாமில் ஆழ்ந்திருப்போரது நடத்தைகளை அபூ ஹனீபா கூர்ந்து கவனித்தார். எல்லாம் பேச்சு. வெறும் பேச்சு. ஆனால், நன்னடத்தை, ஆத்மீகம், ஒழுக்கம், முதலியன அவர்களிடமிருந்து அகன்றுவிட்டன. தொண்டையைக் கிழித்துக் கொண்டு மண்டையுடைக்கும், வார்த்தை கத்தும் வாதியராகிய இவர்களிடம் ஆரம்ப முஸ்லிமகளிடமிருந்த முன்மாதிரியான புனித இஸ்லாமிய வாழ்க்கையே காணப்படவில்லை! நல்ல தானியம் இருக்க வேண்டிய இடத்தில் வெறும் உமியைக் கண்டார் அபூ ஹனீபா!

மூன்றாவது, ஒருநாள் ஒரு மாது அபூ ஹனீபாவிடம் வந்து, "ஒரு மனிதன் தன் மனைவியை ஸுன்னத்தின் பிரகாரம் தலாக் (விவாக விலக்கு) சொல்லவேண்டுமானால் எவ்வாறு செய்யவேண்டும்?" என்று வினவினாள். அப்பொழுது தாமே மறுமொழி கூறமுடியாமல், பக்கத்தில் பாடங்கற்பித்த, "இமாம் ஹம்மாத் இடம் சென்று கேட்டுக் கொள். அவர் கூறும் மறுமொழியையும் என்னிடம் தெரிவித்துவிட்டுச் செல்" என்று கேட்டுக் கொண்டார். அந்த மாது அவ்வாறே செய்தாள். அதைக் கேட்டவுடன், அபூ ஹனீபா, இமாம் ஹம்மாதிடம் சென்று பிக்ஹு பாடம் கேட்க ஆரம்பித்தார்.

**ஹம்மாத்** :—ஹம்மாத் அக்காலத்தில் சிறந்த ஆசிரியர். பெருமானாரவர்களின் பணியாளரான ஹஸ்ரத் அனஸ் இடம் ஹதீது கேட்டிருந்தார். அச்சமயம், கூபா நகரில் அவரது கலாபீடமே நடுநாயகமாக விளங்கியது. அவரிடம் எத்

தலையோ பெரியார்கள் வந்து பாடங்கேட்பார்கள். ஹம்மாத் பெரும் பணக்காரர். ஆகவே, எவர் சார்பையும் துணையையும் விரும்பாதாராய், சுவாதீனத்துடன் கவலையற்றுக் கல்வி கற்பித்து வந்தார். ஆகவே, இத்தகைய பெரியாரிடம் பிக்ஹு கற்கவேண்டுமென்று அபூ ஹனீபா முடிவு செய்தார்.

இஸ்லாத்தில் "ஷரீ அத்" என்பது, பல துறைகளிலும் இஸ்லாமிய மக்கள் வாழ்க்கைநடத்தவேண்டிய நெறி முறைகளாகும். இஸ்லாமிய ஷரீஅத் என்பதில், முதலாவது. குர்ஆன். இரண்டாவ்து, எம்பெருமானாரவர்களின் சொல்லும் செயலுமான ஸுன்னத். "பிக்ஹு" என்பது முஸ்லிம்கள் அன்றாட வாழ்க்கையில் பின்பற்றவேண்டிய சட்டங்கள். குர்ஆனையும் ஹதீதையும் ஆராய்ச்சி செய்து அதன் பயனாக சில பெரியார்கள் இவ்வித பிக்ஹு சட்டங்கள் தொகுத்தார்ர்கள். அவர்களுக்கு இமாம்கள் என்றுபெயர்.

அக் காலத்திலே பாடங்கேட்கும் முறையும் விசேஷமானது. குறிப்பிட்டதொரு மஸ்அலாவைப்பற்றி ஆசிரியர் நாவால் விளக்கஞ் செய்வார். அதை மாணவர்கள் மனப்பாடம் செய்துகொள்வார்கள். சில சமயம் எழுதிக்கொள்வார்கள். முதலாம் நாள், அபூ ஹனீபா இடது வரிசையில் உட்கார்ந்தார். இதுவே ஆரம்ப மாணவருக்கு ஒதுக்கப்பட்ட இடம். ஆயினும், சில நாட்களில், ஞாபக சக்தியிலும் நுண்ணறிவிலும் மற்ற மாணவர்களைவிட அபூ ஹனீபா தலை சிறந்தவர் என்று அனுபவ மூலமாய் அறிந்த ஹம்மாத், அவரை எல்லோருக்கும் முன்னால் வந்து உட்காரும்படி உத்தரவிட்டார்.

அபூ ஹனீபா இவ்வாறு ஆசிரியர் ஹம்மாதிடம் பத்தாண்டுகள் பிக்ஹு பாடங் கேட்டு வந்தார். அப்பால், தாமே பிறருக்குப் பாடஞ் சொல்ல வேண்டுமென்று பிரியப்பட்டார். எனினும், ஆசிரியருக்கு மரியாதை செய்யும் பொருட்டு அவ்வாறு செய்யாமலிருந்தார். ஆனால், அச் சமயம் ஹம்மாதுடைய சுற்றத்தாரி லொருவர் பஸ்ரா நகரில் இறந்துபோனார். இறந்தவருக்கு ஹம்மாதைத் தவிர வேறு வாரிஸ் கிடையாது. ஆகவே, அப்பொழுது ஹம்மாத்

பஸ்ரா செல்லவேண்டிய அவசியம் ஏற்பட்டது. செல்லும் பொழுது தமக்குப் பிரதிநிதியாக அபூ ஹனீபாவை நியமித்து விட்டுச் சென்றூர். மாணவரும் பொதுமக்களும் அபூ ஹனீபாவிடம் மஸ்அலாக்கள் கேட்டார்கள். அதாவது, அச்சமயம் புதிய புதிய பல மஸ்அலாக்கள் சம்பந்தமாக அபூ ஹனீபாவே முடிவு கூறவேண்டியவரா யிருந்தார். அந்த மஸ்அலாக்களைப் பற்றி அவர் அதுவரை தமது ஆசிரியரிடம் பாடங்கேட்கவில்லை. எனவே, தமது சுயமுயற்சியின் உதவியால் தீர்ப்புக் கூறினூர். அதே சமயம், அம்மாதிரி மஸ்அலாக்களைப்பற்றிய நினைவுக் குறிப்பு ஒன்று எழுதி வைத்திருந்தார்.

இரண்டு மாதங்கள் கழிந்தன. ஹம்மாத் பஸ்ராவிலிருந்து திரும்பி வந்தார். அந்த ஆசிரியரிடம் தாம் எழுதி வைத்திருந்த அறுபது மஸ்அலாக்களின் நினைவுக் குறிப்பை அபூ ஹனீபா சமர்ப்பித்தார். ஹம்மாத் அவற்றைப் பார்வையிட்டார். அவற்றில் இருபதில் பிழை இருப்பதாகவும் மற்றவை அனைத்தும் சரியானதே என்றும் அவர் கூறினூர். அச்சமயம் அபூ ஹனீபாவின் மனதில் ஓர் எண்ணம் உதித்தது. "ஆசிரியர் ஹம்மாத் உலகில் இருக்கும்வரை அப்பெரியாரது மாணவராகவே இருப்பேன்" என்று அபூ ஹனீபா சபதஞ் செய்துகொண்டார்.

ஹம்மாத், ஹி. 120-ல் மரணமடைந்தார். அபூ ஹனீபா எத்தனையோ ஆசிரியரிடம் பிக்ஹு பாடங் கேட்டிருந்தாராயினும், ஹம்மாதிடமே அக்கலை அனைத்தையும் விசேஷமாகக் கற்றமையால், அவரை அளவுகடந்து மரியாதை செய்தார்.

ஹதீது :— ஹம்மாதிடம் மாணவராயிருக்கையிலேயே, அபூ ஹனீபா, ஹதீது கற்க ஆரம்பித்துவிட்டார். ஏனெனில் பிக்ஹு சம்பந்தமான மஸ்அலா-மதப் பிரச்சினைகளை நன்றுய் அலசி, ஆராய்ந்து, நோட்டமிட்டு, முயற்சித்து, உண்மை காணவேண்டுமாயின், ஹதீதுக் கலையை முற்ற முற்றக் கற்றுக்கொள்ளாமல் முடியாது. விடாமுயற்சியுடன் ஆழ்ந்து சிந்தனைசெய்து, தீர முடிவுகட்டும் இயற்கையுள்ள அபூ

ஹனீபா, பிக்ஹு சம்பந்தமான பூரண அறிவைப் பெற்றுக் கொள்ள முயன்று ஹதீதுப் பாடம் கேட்டு வந்தார்.

ஹதீதின் நிலைமை அக்காலத்தில் எவ்வாறிருந்தது? இஸ்லாமிய நாடுகளிளெல்லாம் ஹதீது கலாசாலைகள் வெகு சிறப்புடன் நடத்தப்பட்டு வந்தன. பற்பல இஸ்லாமிய நாடுகளிலும் ஏறத்தாழ பத்தாயிரம் ஸஹாபாக்கள் பரவி விட்டார்கள். அவர்கள் மூலமாக ஸனதுகள், (ஆதாரங்கள்) ரிவாயத்துகள் (செவிவழிச் சொல்), சம்பந்தமான தொடர்பு நிரந்தரமாக நிறுவப்பட்டது. ஓர் ஊருக்கு ஒரு ஸஹாபீ வந்துவிடுவாராயின், மக்கள் திரள் திரளாக வருவார்கள். அவரைச் சூழ்ந்துகொள்வார்கள். பெருமானாரவர்களின் புனித வாழ்க்கை வரலாறுகளைக் கேட்பார்கள். இன்பம் பெறுவார்கள். அல்லது, ஷரீயத் சம்பந்தமான மஸ்அலாக் களைக் கேட்பார்கள். இவ்வாருக, பெருமானாரவர்களது தோழர்களின் சீடர்களென்று சொல்லப்படும், தாபியீன்கள் தோன்றினார்கள். இஸ்லாமிய உலகம் முழுமையிலுமே இவர்கள் காணப்பட்டார்கள். ஸஹாபிகளும் தாபியீன் களும் அதிகமாயிருந்த நகரங்களெல்லாம் கலா நிலையங் களாக மாறிவிட்டன. இவற்றில், மக்கா, மதீனு, பஸ்ரா, கூபா, ஆகிய நகரங்களுக்கு விசேஷ மதிப்பிருந்தது. ஏனென்ருல், மற்ற நகரங்களைவிட இந்த நகரங்களே இஸ்லா மியச் சின்னங்களாக விளங்கின.

உதாரணமாக, கூபா நகரம், ஹஸ்ரத் உமர் (ரலி) உடைய ஆணையின்படி ஸஅத்-பின்-அபீ வக்காஸ் என்னும் தளபதி ஹி. 17-ல் முஸ்லிம்களுக்காகப் புதிதாக நிர்மா ணித்த நகரமாகும். ஹஸ்ரத் அலீ இந்த நகரையே தமது கிலாபத்தின் தலைநகராக ஏற்படுத்தினுர். இந்த நகரில் ஆயிரத்தைம்பது ஸஹாபிகள் வந்து குடியேறினுர்கள். பதர் போரில் பெருமானாரவர்களுடனிருந்த இருபத்து நான்குபேர் அவர்களில் இருந்தார்கள். இத்தகைய பெரியார் களின் மூலமாய் கூபா நகரில், ஹதீது, ரிவாயத்து, ஆகிய கலைகளின் பிரச்சாரம் பொங்கியெழுந்தது. கூபா நகரி லுள்ள ஒவ்வொரு இல்லமும் ஹதீதுப் பாடங் கற்பிக்கும் கல்லூரியாக மாறிவிட்டது.

இதைப் போலவே பஸ்ரா நகரமும் ஹஸ்ரத் உமர் கட்டளைப்படி நிர்மாணிக்கப்பட்டதாகும். கலைகளிலும், ஹதீதுப் பிரசாரத்திலும் இந்நகர் கூபா நகரைப் போலவே இருந்தது. இந்த இரண்டு நகரங்களும், மக்கா, மதீனா, நகரங்கள் போன்ற இஸ்லாமிய கலைகளுக்கு உறைவிடங்களாகக் கருதப்பட்டுவந்தன.

ஹஜ்ஜு சம்பந்தமான விதிகளுக்காக மக்கா நகரமும், இனிய குரலில் திரு குர்ஆன் ஓதுவதற்கு (கிரஅத்) மதீனா நகரமும், ஹலால், ஹராம், அதாவது, பிக்ஹு, சம்பந்தமான கலைக்கு கூபா நகரமும், சிறந்த நகரங்களாக அக்காலத்தில் விளங்கின.

ஹதீதுப் பாடத்தில் கஷ்டங்கள் :—பிக்ஹு சம்பந்தமான பாடங்களை ஹம்மாதிடம் கேட்பதே போதுமானதென்று அபூ ஹனிபா கண்டுகொண்டார். ஆனால், ஹதீதுப் பாடங் கேட்டல் இவ்வளவு இலேசானதல்ல. ஏனெனின், இங்கு முயற்சியும் புத்திக்கூர்மையும் இருந்தால்மட்டும் போதாது. ஆனால், ஹதீதுக் கலையில் பாடங்கேட்பதோடு, அதை நன்கு ரிவாயத்துச் செய்து விளக்கத்துடன் புரிந்துகொள்வது அவசியமாகும். ஏன் ? அக்காலத்தில் ஹதீதுகள் ஒன்றுசேர்க்கப்படாமல் சிதறிய நிலைமையில் இருந்தன. பெரிய பெரிய ஆசிரியருக்கும் நானூற்றுக்கு அதிகமான ஹதீதுகள் ஞாபகமில்லை. சிறிய தொகையுள்ள இந்த ஹதீதுகள் முக்கிய மஸ்அலாக்களை விளக்குவதற்குப் போதுமானவையல்ல. இதைத் தவிர செவிவழிச் சொல்லாக (ரிவாயத்) வந்த ஒரே ஹதீது, பலரால் பலமாதிரியாக ரிவாயத்துச் செய்யப்பட்டது. ஆகவே, ஹதீது கிடைத்த எல்லா துணைவழிகளையும் ஆழ்ந்து ஆராய்ந்தாலொழிய அதன் முழு உண்மை விளங்காது.

கூபா நகரில் ஹதீது பாடஞ்சொல்வோர் எல்லோரிடமும் அபூ ஹனீபா பாடங்கேட்டதாகத் தெரிகிறது. பிறவிடங்களில் உள்ளோரிடமும் பாடங்கேட்டார். கூபா நகரில் மட்டும் இருபத்தொன்பது ஆசிரியர்களிடம் பாடங்கேட்டார். அவர்களில் பெரும்பாலோர் தாபயீன்கள். கூபா

நகரிலே ஹதீது ஆசிரியர்களில் முக்கியமானவர் இமாம் ஷஃபீ. ஸல்மா-பின்-கஹீல், மஹாரிப்-பின்-வஸரா, அபூ இஹ்ஹாக் ஸபயீ, அவ்ன்-பின்-அப்துல்லாஹ், ஸமாக்-பின்-ஹரப், அம்ரு-பின்-மர்ரஹ், மன்ஸூர்-பின்-மாமர், ஆமஷ், இப்ராஹீம்-பின்-முஹம்மத், அதீ-பின்-தாபித் அன்ஸாரீ, அதா-பின்-ஸாயிப், மூஸா-பின்-அபீ ஆயிஷா, அல்கமா-பின்-மர்தத், இவர்கள் அனைவரும் ஸனதுகளிலும் ரிவாயத்து களிலும் மிகமிகச் சிறந்தோரென்று ஒப்புக்கொள்ளப்பட்டோ ராவர். ஸுபியான் தவ்ரீயும், இமாம் அஹ்மத்-பின்-ஹம்ப லும் இதே பெரியார்களின் மூலமாய் வந்த பரம்பரையில் ஹதீதுக் கலைகற்றூர்கள்.

## 3. மக்காவிலும் மதிநாவிலும்

இவ்வாறு பல பெரியோரிடம் ஹதீது பாடங்கேட்டுத் திருப்தி கொண்டாராயினும், அபூ ஹனீபா இஸ்லாம் மார்க்கக் கலைகளின் பூர்வ ஊற்றுக்களும் மத்தியஸ்தானங் களுமான மக்கா, மதீனா சென்று தமது கல்வியைப் பூரண மாக்க விரும்பினார். அவர் மக்காவுக்குச் சென்ற காலையில், அங்கு மார்க்கக் கலைகளின் போதனையானது உச்சநிலை பெற்றிருந்தது. ஹதீது கற்பிக்கும் ஆசிரியரை ஸஹாபி களுங்கூடப் பணிவிடை செய்து இன்புறுவார்கள். ஹதீது போதிப்பதற்கென பல கல்வி மன்றங்கள் இருந்தன. அவற்றில் அதா-பின்-அபீ ரபாஹ் உடைய கலாமன்றம் மிகவும் சிறந்து விளங்கியது. அப்பெரியார் தாபயீன்களில் ஒருவராவர். எத்தனையோ ஸஹாபாக்களுக்குப் பணிவிடை செய்து அதனால் பலனடைந்தவர். அப்துல்லாஹ்-பின்-அப்பாஸ், அப்துல்லாஹ்-பின்-உமர் அப்துல்லாஹ்-பின்-ஜுபைர், அஸாமா-பின் ஸைத், ஜாபிர்-பின்-அப்துல்லாஹ், ஸைத்-பின்-அர்கம், அப்துல்லாஹ்-பின்-ஸாயிப், அகீல், ராபிஃ, அபூ தர்தார், அபூ ஹுரைரா முதலிய பல ஸஹாபாக் களிடம் ஹதீது கேட்டவர். பெருமானாரவர்கள் தோழமை யின் பெரும் பாக்கியத்தைப் பெற்ற இருநூறு பெரியோரைக் கண்டவர். ஹஸ்ரத் உமருடைய மைந்தரும், பத்வாக்கள்

அளிப்போருமான அப்துல்லாஹ்-பின்-உமர், "அதா-பின்-ரபாஹ் இருக்கும்பொழுது மக்கள் ஏன் என்னிடம் வரவேண்டும்" என்று கூறுவார். "அதாவைத் தவிர வேறெவரும் பத்வா கொடுக்கலாகாது" என்று ஹஜ்ஜுக் காலத்தில் அரசாங்கத்தின் சார்பாக விளம்பரப்படுத்தப்பட்டு வந்தது. மேலும், பிற்காலத்தில் பெரிய பெரிய ஆசிரியர்களாய் விளங்கியோரும், ஹதீது சம்பந்தமான இமாம் எனப்படுவோருமான இமாம் அவ்ஸாயீ, ஜஹ்ரீ, அம்ரு-பின்-தீனர், முதலியோர் இப்பெரியாரிடம் பயிற்சி பெற்ற மாணவராவார்கள்.

இத்தகைய சிறப்புள்ள ஆசிரியரிடம் ஹதீது பாடங்கற்று ஸனது பெற்றுக்கொள்ளும் நோக்கத்துடன் அபூ ஹனீபா மக்காவுக்கு வந்தார். அந்த ஆசிரியரிடம் அனுமதி பெற்றார். அவரிடம் பாடங் கேட்டார். சில நாட்கள் சென்றன. அபூ ஹனீபாவின் நுண்ணறிவையும் மேன்மையையும் அறிந்த ஆசிரியர், அவருக்குத் தனி உயர்வு கொடுக்க ஆரம்பித்தார். அபூ ஹனீபா வந்தவுடன், மற்ற மாணவர்களை விலக்கி, தமக்குப் பக்கத்தில் வந்து உட்காரும்படி ஆசிரியர் கூறும்படியான அத்தகைய விசேஷ உயர்நிலையை சின்னுட்களில் அவர் அடைந்துவிட்டார்!

ஆசிரியர் அதா ஹி. 115-ல் காலமானுர். அவர் உயிருடனிருக்கும் வரை மக்காவுக்குச் செல்லும் பொழுதெல்லாம் அபூ ஹனீபா அவரைச் சந்தித்துப் பயனடைந்து கொண்டே வந்தார்.

இதைத்தவிர, மக்காவில் மற்றவர்களிடமும் அபூ ஹனீபா ஹதீது சம்பந்தமான ஸனதுகள் பெற்ருர். இவர்களில் இக்ரிமா என்பார் முக்கியமானவர். இவர் அப்துல்லாஹ்-பின்-அப்பாஸ் உடைய மாணவராவர். அப்துல்லாஹ்-பின்-அப்பாஸ் வெகு கவனத்துடனும் விடா முயற்சியுடனும் இக்ரிமாவுக்கு கல்வியும் பயிற்சியும் அளித்தார். ஆசிரியர் உயிருடனிருக்கும் பொழுதே மாணவர் இஜ்தியாத்-பத்வா கொடுக்கும் உயர்நிலை-பெறும்படி செய்துவிட்டார். இக்ரிமா, இதைத் தவிர, ஹஸ்ரத் அலீ, அபூ

ஹுரைரா, அப்துல்லா-பின்-உமர். உக்பா-பின்-ஆமி, ஸப்வான், ஜாபிர், அபூ கதாதா முதலிய அநேகம் ஸஹாபிகளிடம் ஹதீதுப் பாடம் கேட்டிருந்ததோடு, பிக்ஹு சம்பந்தமான மஸ்அலாக்களையும் ஆராய்ச்சி செய்திருந்தார். தாபயீன்களில் சிறப்புற்ற எழுபது பேர் இவரது மாணவர்களாக இருந்தார்கள். 'இக்ரிமாவைவிட திரு குர்ஆனை அதிகமாய் அறிந்தோர் கிடையாது' என்று இமாம் ஷுஅபீ (Shoobi) சொல்லுவார்.

மதீனாவில் ஹி. 102-க்கு முன்:—மக்காவிலிருந்து அபூ ஹனிபா மதீனா சென்றார். மதீனா நகரம் அக்காலையில் ஹதீதின் களஞ்சியம். பெருமானாரவர்களின் பிந்திய வாழ்நாட்களின் உறைவிடம். அச்சமயம், தாபியீன்களில் பிக்ஹு, ஹதீது, ஷரியத்து சம்பந்தமான மஸ்அலாக்கள், ஆகியவற்றில் முதிர்ந்த அறிவு படைத்த ஏழு பேர் இங்கிருந்தார்கள். மேலும், அவர்களது புகழ் இஸ்லாமிய நாடுகளில் சிறந்து விளங்கியது. இவர்களனைவரும் ஒரே சபையில் உட்கார்ந்து மஸ்அலாக்களின் தீர்ப்பளித்து வந்தார்கள். இவர்களது பத்வாக்களை அடிப்படையாகக் கொண்ட "மதீனா பிக்ஹு" என்பதை இமாம் மாலிக் கோர்வை செய்தார்.

அச்சமயம், மதீனாவிலிருந்த ஏழுபேரில், ஸுலைமான், ஸாலிம்-பின்-அப்துல்லாஹ் என்ற இருவரே உயிரோடிருந்தார்கள். ஸுலைமான் என்பவர், பெருமானாரவர்களின் பிராட்டியார் ஹஸ்ரத் மைமூனா அம்மையாரின் பணியாளர். ஸாலிம் என்பவர் ஹஸ்ரத் உமருடைய பௌத்திரர். அபூ ஹனிபா இவ்விருவரிடமும் ஹதீதுப் பாடங் கேட்டார்.

இமாம் ஜாபர் ஸாதிக்:- அபூ ஹனிபா இரண்டாந்தடவை மதீனாவுக்குச் சென்றபொழுது, இமாம் ஜாபர் ஸாதிக் என்ற பெரியாரைச் சந்திக்கச் சென்றார். நண்பர்கள் அறிமுகஞ் செய்துவைத்தார்கள். அபூ ஹனீபா, 'கியாஸ்' அனுமானம் மூலமாக ஹதீது விளக்கம் செய்வதாகப் பலர் பலவித வதந்திகளைக் கிளப்பிவிட்டிருந்தார்கள். இமாம் அவ்ஸாயீ என்பாரும் இத்தகைய அபிப்பிராயம் கொண்டிருந்தார்.

ஆனால், இருவரும் நேராகச் சந்தித்தபொழுது உண்மையை அறிந்து, தாம் செய்த பிழைக்காக வருந்தினர். இதைப் போலவே, இமாம் ஜாபர் ஸாதிக் எண்ணியிருந்தார். ஆகையால், ஜாபர் ஸாதிகும் அபூ ஹனீபாவும் மதீனாவில் சந்தித்தபொழுது இந்த சம்பாஷணை நடந்தது.

இமாம் ஜாபர் ஸாதிக் (Jafar sadiq) :- கியாஸை (அனுமான முடிவை) அடிப்படையாகக் கொண்டு ஹதீதுகளை எதிர்ப்பது நீங்கள்தானா ?

அபூ ஹனீபா :- (வெகு மரியாதையுடன்) ஆண்டவனிடம் நான் காவல் தேடுகிறேன்! ஹதீதை எவர் எதிர்த்து நிற்கமுடியும்? தாங்கள் ஆசனத்தில் அமர்ந்தால், நான் விளக்குவேன்......................(சில விநாடிகள் கழித்து) ..............................ஆண், பெண் இவ்விருவரில் யார் பலவீனமுள்ளவர் ?

இமாம் ஜாபர் ஸாதிக் :- பெண்தான்.

அபூ ஹனீபா :- பாகப் பிரிவினையில் (விராஸத்) ஆணுடைய பாகம் அதிகமா? அல்லது பெண்ணுடைய பாகம் அதிகமா ?

இமாம் ஜாபர் ஸாதிக் :- ஆணுடைய பாகந்தான் அதிகம்.

அபூ ஹனீபா :- நான் கியாஸை உபயோகித்தேனாயின் பெண்ணுக்கு அதிக பாகம் கிடைக்கவேண்டுமென்று கூறுவேன். ஏனென்றால், கியாஸை அடிப்படையாகக்கொண்டு பலவீனமுள்ள பெண்ணுக்கு அதிகம் கொடுக்கவேண்டும்.

[சில நிமிஷங்கள் கழிந்தன.]

அபூ ஹனீபா :- தொழுகை நோன்பு இவற்றில் எது உயர்ந்தது ?

இமாம் ஜாபர் ஸாதிக் :- தொழுகைதான்.

அபூ ஹனீபா : அப்படியானால், மாதவிலக்குள்ள பெண்கள் விட்டுவிட்ட தொழுகையை மறுபடியும் (கலா) தொழ வேண்டும். நோன்பு விட்டுப்போனால் அதற்காக கலா நோன்பு வைக்கவேண்டிய அவசியமில்லை. நானோ, நோன்பின் கலா உண்டென்றே பத்வா கொடுக்கிறேன்.

இமாம் ஜாபர் ஸாதிக் இதைக் கேட்டு அகமகிழ்ந்து, அபூ ஹனீபாவின் நெற்றியை முத்தமிட்டார். அபூ ஹனீபா வெகுநாள் அங்கு தங்கி, பிக்ஹு, ஹதீது சம்பந்தமான பல விஷயங்களைச் சேகரித்தார்.

## 4. புகழோங்கல்

முதன் முதலில், அபூ ஹனீபா மக்கா, மதீனு நகரங்களுக்குச் சென்ற காலையில், சாதாரணமானதொரு மாணவராகவே சென்றார். ஆனால், பிறகு, அவரது புகழ் ஓங்கி விட்டது. இராகிலிருந்து அவர் மக்காவுக்குப் புறப்பட்டுச் செல்லும் ஊர்களில் மக்கள் ஆயிரக்கணக்காகக் கூடிவிடுவார்கள். மக்கா நகரிலும் பிக்ஹு, ஹதீது ஆகியவற்றில் பற்றுள்ளோர் பல்லாயிரவர் வந்து சூழ்ந்துகொள்வார்கள். செல்லுமிடமெங்கும் பொதுமக்களும், கல்வித்தாகமுள்ளோரும் அவரைச் சிறப்பித்ததோடு, அவரது ஆசிரியர்களே அவருக்கு மரியாதை செலுத்த ஆரம்பித்தார்கள்.

ஒரு சமயம் அபூ ஹனீபா ஒரு ஹதீதின் ஆராய்ச்சி சம்பந்தமாக கதீப் என்ற ஆசிரியரிடம் சென்றார். இவர் வருவதைக் கண்டவுடன் கதீப் எழுந்து நின்றார். எதிர்கொண்டழைத்தார். தம்முடன் சமமாக ஆசனத்தில் அமர்த்தினர். விசாரித்தறியவந்த விஷயத்தைத் தமக்குத் தெரிந்த முறையில் தெளிவாக விளக்கினர்.

இனி, மக்காவில் அம்ரு-பின்-தீனர் என்ற ஆசிரியர் இருந்தார். இவர் ஹதீதுப் பாடஞ் சொல்லும் முஹத்தித். தாம் பாடஞ்சொல்லிக் கொண்டிருக்கையில் அபூ ஹனீபா வந்துவிட்டால், வந்தவரது முகத்தைப் பார்த்துக்கொண்டே பாடஞ்சொல்வார்.

இமாம் மாலிக் :- இவ்வாறுன புகழ்பெற்றுராயினும் அபூ ஹனீபா தம்மை ஒரு மாணவராகவே கருதிவந்தார். இமாம் மாலிக் என்னும் பெரியார் அபூ ஹனீபாவுக்கு பதின்மூன்று வயது குறைந்தவர். ஆயினும், கல்வித் தாகம் நிரம்பிய அபூ ஹனீபா அவரிடம் சென்று, ஹதீதுப் பாடங்கேட்பார்.

ஹதீதுகளை விளக்கும் முறைகளும் விதிகளும் இராக் நாட்டிலிருந்ததினின்றும் ஹிஜாஸ் மாகாணத்தில் வேறுபட்டிருந்தன. ஹதீதின் தொடர்ச்சியைக் கூறும் ராவீ உயிருடன் எதிரில் வந்து சொன்னால் மட்டும் அந்த ஹதீதை ஒப்புக்கொள்ள முடியுமென்று ஷாஃபா போன்றவர்கள் கூறுவார்கள். இமாம் ஜுஹ்ரீ போன்றவர்கள் ஹதீதுடன் தங்கள் சொந்த விளக்கத்தையும் கலந்துவிடுவார்கள். இமாம் மாலிக் போன்றவர்கள் ஹதீதை மாணவர் வாசிக்கும் பொழுது கேட்டுக்கொண்டிருப்பார்கள். ஆனால், தாங்களே வாசிக்கமாட்டார்கள்.

ஹதீதுப் போதனுமுறைகளிலுள்ள இத்தகைய வேறுபாடுகளை அபூ ஹனீபா நன்கு ஆராய்ச்சி செய்தார். அதைச் சீர்திருத்த வேண்டுமென்றும் ஆவல் கொண்டார். எனவே, அவரது இளமைப் பருவத்திலேயே ஹதீதுப் பாடப் பயிற்சி என்பது ஓர் உருவாக அமைய ஆரம்பித்தது.

முதலில் ஹதீதுப்பாடம் செவிவழிச்சொல் முறையில் கற்பிக்கப்பட்டது. பிறகு, எழுத்து மூலமாகக் கற்பிக்கப்பட்டது. ஹி. 101-ல் உமர்-பின்-அப்துல் அஜீஸ் என்னும் உத்தம கலீபா இவ்விஷயமாகக் கவலைகொண்டு, ஹதீதுகளைச் சேகரஞ்செய்யும்படி மதீனுவுக்கும் மற்ற நகரங்களுக்கும் கடிதங்கள் எழுதினர். மதீனுவில் இமாம் ஜுஹ்ரீ, ஹதீதுகளைத் சேகரித்தார். இவரது பிரதிகளே அரசாங்கத்தின் சார்பாக எல்லா இஸ்லாமிய நாடுகளுக்கும் அனுப்பப்பட்டன.

இதற்கப்பால், ஹதீதுப் பாடஞ்சொல்லும் முறையிலும் மாறுபாடு உண்டாயிற்று. ஆசிரியர் (ஷெய்க்) ஓர் உயரமான இடத்தில் உட்காருவார். அவர் கையில் ஹதீதுக் கோர்வை இருக்கும். மாணவர் மைக்கூடு, பேனு முதலியவற்றுடன் உட்கார்ந்து, ஆசிரியர் ரிவாயத்துச் செய்து விளக்குவதை அவரது வார்த்தைகளில் எழுதிக் கொள்வார்கள். மாணவரது எண்ணிக்கை அதிகமாயிருந்தால் ஒரு மாணவர் எழுந்து, ஆசிரியரது வார்த்தைகளை உரத்த குரலில் எல்லோரும் கேட்கும்படி கூறுவார்.

அபூ ஹனீபாவுக்கு ஹதீத் பாடங்கற்பித்த ஆசிரியர் மிகப்பலர். இதில் அவருக்குத் தனிச் சிறப்பிருந்தது. சுமார் நாலாயிரம்பேரிடம் 'இமாம் அபூ ஹனீபா ஹதீதுப் பாடங் கேட்டதாக' ஒருவர் உறுதியுடன் கூறுகிறார். இஸ்லாமிய சரித்திரத்தில் இஃதோர் ஆச்சரியமான விஷயமுமல்ல. ஹதீதுகளைச் சேகரஞ்செய்வதில் முஸ்லிம்கள் எடுத்த முயற்சிகளும், அனுபவித்த பேராபத்துக்களும் இதர இனத்தார்களுடைய நினைவுக்கும் எட்டாமுடியாதவையாகும்.

அபூ ஹனீபாவின் ஆசிரியர்கள் தாபியீன்களாகவும், வெகுகாலம் தாபியீன்களுடைய தோழமையிலிருந்தவர்களாகவும், ஆலிம்களாகவும், பாஸில்களாகவும், சன்மார்க்கராகவும், மக்களுக்கு முன்மாதிரியாகவும் இருந்தார்கள்.

## 5. ஆசிரிய பீடத்தில்

தமது ஆசிரியரான ஹம்மாத், கூபா நகரில் உயிருடன் இருக்கும் வரையிலே, தாமும் ஆசிரியராக இருக்க அபூ ஹனீபா இணங்கவில்லை. என்ன ஆச்சரியம்! அக்காலத்தையும் இக்காலத்தையும் ஒப்பிடுங்கள்! ஆசிரியரைக் கூலியாள் என்று கருதும் மாணவர் இந்த மேன்மையை அறிவரோ? அபூ ஹனீபாவின் உள்ளன்பைப் பாருங்கள்! தமது ஆசிரியர் உயிரோடிருக்கும் வரை ஆசிரியரது வீட்டுப்பக்கமாகத் தமது காலை நீட்டியும் உட்கார மாட்டார்! ஆசிரியர் ஹம்மாத் ஹி. 120-ல் காலமானார். ஹம்மாத் காலஞ்சென்ற சில காலத்தில் மக்களிடமிருந்து ஒரு வேண்டுகோள் வந்தது. ஆசிரியர் ஹம்மாத் இருந்த ஆசனத்தில், அபூ ஹனீபாவே அமரத் தகுந்தவரென்றும் எனவே, அப்பதவியை அவரே ஏற்றுக்கொள்ள வேண்டுமென்றும் மக்கள் விரும்பினார்கள்.

அபூ ஹனீபாவுக்கு இஃதொரு நெருக்கடியான நிலைமையும் சோதனைக்காலமாகவும் இருந்தது. பொறுப்போ மிகப் பெரியது! சுமையோ மிகப் பளுவானது! அதை ஏற்றுக்கொள்ளப் பயந்தார், பின்வாங்கினார். எனினும், கடைசியாக, மக்களது வேண்டுகோளுக்கு இணங்கி ஏற்றுக்கொண்டார். இருந்தாலும் மனநிம்மதி இல்லாதிருந்தார்.

கனவு:—அபூ ஹனீபா திரு மதீனாவுக்குச் சென்ற சமயத்தில் நபிபெருமானாரவர்களது அடக்க ஸ்தலத்தின் முன் நின்று கொண்டு,

"அஸ்ஸலாமு அலைக்கும் யா ஸய்யிதல் முர்ஸலீன்!" (இறைதூதர்களின் தலைவரே! உங்களுக்கு ஸலாம்!) என்று பணிவாக நின்றுகொண்டு கூறியசமயம்,

"அலைக்குமஸ்ஸலாம் யா இமாமல் முஸ்லிமீன்!" (முஸ்லிம்களின் தலைவரே! உமக்கும் ஸலாம்!) என்று மறுமொழி பிறந்தது. அந்த நாள் முதல் அவர் தனிமையை நாட ஆரம்பித்தார். கம்பளி உடுத்திக்கொண்டார்.

ஒரு சமயம் அபூ ஹனீபா ஒரு கனவு கண்டார். கனவில் தாம் நபிபெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களது எலும்புகளை ஒன்றுசேர்ந்து, அப்பால், அவற்றைப் பிரித்துக்கொண்டிருக்கக் கண்டார்! ஒன்றும் தோன்றாமல் உடனே இமாம்-பின்-ஸீரீன் என்னும் பெரியாரிடம் சென்றார். கனவுகளின் பொருளை விளக்கஞ் செய்வதில் அந்தப் பெரியார் அக்காலத்தில் சிறந்தவராக இருந்தார் எனவே, இந்தக் கனவைக் கேட்டவுடன், அவர்,

"அபூ ஹனீபாவே! நீர் ஆலிம் —இஸ்லாமிய மத அறிஞர்— ஆகிவிடுவீர். ஸுன்னத்தைப் பின்பற்றுவதில் மேலான நிலைமை அடைவீர். உண்மையல்லாத ஹதீதுகளிலிருந்து உண்மையான ஹதீதுகளைப் பிரித்தெடுப்பீர்" என்று விளக்கஞ் செய்தார்.

இன்னுமோர் இரவில், பெருமானாரவர்களையே கனவில் கண்டார். பெருமானாரவர்கள், "அபூ ஹனீபாவே! என்னுடைய ஹதீதுகளை வெளியாக்கும்படி உம்மை உலகத்தில் கொண்டுவரப்பட்டிருக்கிறது. ஆகையால், நீர் தனிமையை நாடவேண்டாம்" என்று திருவுளமானார்கள்.

பிணமாக இருக்கும் கலையை உயிருள்ள கலையாகமாற்றுவதே இந்தக் கனவின் பொருள் என்று இமாம்-பின்-ஸீரீன் செய்த விளக்கத்தைக் கேட்டு மனக்கவலையொழிந்து, அபூ ஹனீபா தமது மாணவர்களுக்குப் பாடஞ்சொல்லவும், பொது மக்களுக்குப் போதனை செய்யவும் ஆரம்பித்தார்.

ஆசிரியர் ஹம்மாத் உடைய பழைய மாணவர்கள் வந்து அபூ ஹனீபாவிடம் பாடங்கேட்டார்கள். அப்பால், கூடா நகரிலுள்ள மற்றப்பாடசாலைகளில் உள்ளோரும் திரள் திரளாக வந்துசேர ஆரம்பித்தார்கள். கடைசியாக, ஸ்பெய்ன் நாட்டைத் தவிர, மற்றெல்லா இஸ்லாமிய நாடுகளிலிருந்தும் மாணவர்கள் வந்துவிட்டார்கள். மக்கா மதீனு திமஷ்க், பஸ்ரா, வாஸித், மூஸல், ஜஸீரா, ரக்கா, நஸீபய்ன், ரம்லா, மிஸ்ர், எமன், எமாமா, ஸஜ்ரய்ன், பக்தாத், அஹ்வாஸ், கிர்மான், இஸ்பஹான், ஸல்வான், அஸ்தராபாத், ஹமதான், நஹாவந்து, ரேய், கூமஸ், தாம்கான், தப்ரேஸ், ஜர்ஜான், நிஷாபூர், ஸர்கஸ், நிஸா, புகாரா, ஸமர்கந்து, கஸ், ஸன் ஆனியான், திர்மத், ஹிராத் நஹிஸ்தார், இல்ஸம், காரிஜிம், ஸீஸ்தான், மதாயின், மஸீஸா, ஹமஸ் முதலான பற்பல நாடு நகரங்களும் அபூ ஹனீபாவிடம் மாணவர்களை அனுப்பிப் பெருமையடைந்தன.

## 6. இமாமின் அரசியல் கொள்கை

அக்காலத்தில் அரசியல்முறை நேர்மையற்றிருந்தது. இறையச்சமுள்ளோர் அத்தகைய அரசியலிலிருந்து ஒதுங்கியிருந்தார்கள். ஆனால், சிலர் உலக இச்சைகளுக்கும் தேவைகளுக்கும் அடிமையாகி, அந்த அரசாங்கத்துடன் ஒத்துழைத்தார்கள். சிலர் தங்கள் சுயமரியாதையையும், மதத்தையும் விற்று விட்டார்கள். ஹஸ்ரத் ஸுப்யான் தவ்ரீ போன்ற மகான்கள் ஆரம்பத்தில் அரசியல் அலுவலர்கள் கொடுக்கும் அன்பளிப்புகளைப் பெற்றுக் கொண்டிருந்தனர். அதனால், கேடு விளையுமென்று தெரிந்தவுடன், வியாபாரம் செய்யத் தொடங்கி, எப்பொழுதும் தம்மிடம் இருநூறு தீனர் – பொற்காசுகள் வைத்திருப்பார். "அப்படி என்னிடம் இந்தப் பணம் இல்லாவிட்டால், இந்த அரசியலார் என்னை முகம் துடைக்கும் கைக்குட்டையைப்போல் கேவலமாகக் கருதுவார்கள்" என்பார். ஏனென்றால், பொன்னையும் பொருளையும் கொடுத்து மக்களை அந்த அரசியல் அடிமையாக்கிக் கொண்டு வந்தது. உத்தியோகங்கள்

கொடுப்பார்கள். விலையுயர்ந்த, உருசியுள்ள வகை வகையான உணவுகளைக் கொடுத்து ஏமாற்றுவார்கள். இந்த முறையை உமய்யா-கலீபாக்களும், அப்பாஸி கலீபாக்களும், அவர்களுடைய கவர்னர்களும், இதர அதிகாரிகளும் அனுசரித்தார்கள். இந்த வலையில் பெரிய இராஜாளிப் பறவைகளெல்லாம் அகப்பட்டன. சிங்கங்களெல்லாம் நரிகளாக மாற்றப்பட்டன.

இந்தக் காட்சிகளைக் கண்டார் இமாம் அபூ ஹனீபா. ஒவ்வொருவரும் சுவாதீனமாகச் சம்பாதித்துப் பணக்காரராக இருந்து கொண்டு, அரசாங்கத்தின் தயவை எதிர்பாராமல் இருப்பதே மேன்மையென்ற முடிவுக்கு வந்தார். அரசியலிலிருந்து விலகி நிற்பதற்கு இது மட்டும் போதாது என்றும் கண்டு கொண்டார். அதனால்தான், அவர் பெருமளவில் வியாபாரம் செய்யும் வேலையில் ஈடுபட்டார்.

## பெரிய அளவில் வியாபாரம்

இமாம் அபூ ஹனீபா ஆடை வணிகர் என்று சரித்திரம் கூறுகிறது. ஹிஜ்ரி முதல் நூற்றாண்டில் அந்தப் பிரதேசத்திலுள்ளோர் "கஸ்" (Khaz) என்ற துணியை உடுத்துவார்கள். எனவே, அந்த ஆடை வியாபாரமே முக்கியமாகச் செய்தார். அக்காலத்தில், இருபது கெஜமுள்ள ஒரு பீஸ் (த்ஹான்) விலை இருபது பொற்காசு. இதில் நல்ல ரகமுள்ள ஒரு பீஸ் முன்னூறு ரூபாய் வரையிலும் இருந்தது. இமாமவர்கள் இந்தத் துணியை நெய்வதற்காகப் பெரிய தொழிற்சாலை ஏற்படுத்தி யிருந்தார். சில்லறை வியாபாரமும், மொத்த வியாபாரமும் செய்வார். கூலிகள் மூலமாய் தெருக்களில் சென்று சில்லறை வியாபாரம் நடந்தது. இதைத் தவிர பக்தாத், நிஷாபூர், மர்வ், போன்ற நகரங்களுக்கும் வெளிநாடுகளுக்கும் சரக்குகளை அனுப்பி, அந்த ஊர்களிலிருந்து, தமக்கு வேண்டிய சரக்குகளைத் தருவித்துக் கொள்வார். இவருடைய கடை, கூபா நகரில், அம்ரு பின் ஹரீஸ் என்ற பேட்டை முழுமையிலும் கூபாவின் பள்ளிவாசலுக்குப் பக்கத்தில் இருந்தது. இந்த விசாலமான பேட்டையில்

அவருடைய தொழிலாளிகளும் வசித்தார்கள். நெசவுத் தொழிலும் இந்த இடத்தில் நடந்திருக்கலாம். அல்லது அங்குள்ள நெசவுக்காரரிடமிருந்து நெசவு முடிந்த பிறகு இமாம் அபூ ஹனீபா துணிகளை விலைக்கு வாங்கும் வழக்க மும் இருக்கலாம். இதைத் தவிர, வெளியிலிருந்தும் பலர் தனிப்பட்ட முறையில் துணிகளைக் கொண்டுவந்து விற்பதும் உண்டு. ஒரு மனிதன் எண்ணாயிரம் (திர்ஹம்) வெள்ளிக்காசு களுக்கு ஒரே முறையில் விற்பனை செய்துவிட்டுப் போவார். மேலும், இமாமவர்களுக்குச் சொந்தமான ஒரு பெரிய கட்டி டம் இருந்தது. அதில், அவரது மேற்பார்வையில் " கஸ் " துணி நெய்யப்பட்டது.

லட்சக்கணக்கான மக்கள் நிறைந்த, கூபா நகரில் இமா முடைய கடையே மிகப்பெரிய கடை. அந்த நகரில் வேறு கடைகளில் கிடைக்காத துணிகள் இமாம் கடையில் கிடைக் கும். இமாம், வியாபாரத்தில் நேர்மையானவர். நல்ல துணி களைப் பார்த்த பிறகே வாங்குவார், நல்ல துணிகளையே விற்பார். சில்லரைக் கடைகளில் செய்வதுபோல வீணாக விலையை உயர்த்தியும் குறைத்தும் மக்களின் நேரத்தை வீணாக்க மாட்டார். பெரிய கம்பெனிகளில் இந்தக் காலத் தில் இருப்பதுபோல, எல்லாம் " ஒரே விலை " " கறார் விலை " — " ஒரு சொல் " கடையில் இமாம் உட்கார்ந்து இருப்பது வழக்கம். அவரது மைந்தர் ஹம்மாத் என்ப வரும், மாணவர்களும் கடையில் இருப்பதும் உண்டு. பிறகு, தயாரித்துக் கொடுப்பதாக வாக்களித்து, முன்பணம் பெற்று " ஆர்டர் " வாங்கிக் கொள்வதும் உண்டு. பல பணிமக்கள் ஏறத்தாழ முப்பதாயிரம், நாற்பதாயிரம் திர்ஹம் மதிப்புள்ள சாமான்கள் விற்றுக் கொண்டு வந்து கொடுப் பார்கள். இமாமவர்களுக்கு லட்சக்கணக்கான ரூபாய் இலாபம் ஒவ்வோர் ஆண்டிலும் கிடைத்து வந்தது.

வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வார். அதைப் போலவே வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்வார். அப்பாஸி அரசாங்கத்திலிருந்த கிழக்கு நாடுகளில் அவரு டைய ஏஜண்டுகள் -வியாபாரப் பிரதிநிதிகள்- பெரிய நகரங்

களில் இருந்தார்கள். இந்த ஏஜண்டுகள் கூபாவிலிருந்து துணிகளைப் பெற்றுக் கொள்வார்கள். அந்தந்த பிரதேசப் பொருட்களை கூபாவுக்கு அனுப்புவார்கள். ஹபஸ் (Hafas) பின் அப்துர் ரஹ்மான் என்பவருடன் இமாமவர்கள் முப்பது ஆண்டுகள் வியாபாரம் செய்தார்.

அக்காலத்தில் அப்பாஸி கலீபாக்களின் தலைநகரான பக்தாத் நகரம் கலைகளிலும், வியாபாரத்திலும் உலகிற்சிறந்த நகரங்களில் தலைமை பெற்று விளங்கியது. அங்கும் இமாமவர்களின் ஏஜண்டு இருந்தார். இவர்களில் பெரும்பாலோர் அவரது மாணவர்களாகவும் இருந்தார்கள். புகாரா, ஸமர்கந்த், மர்வ், ஹிராத், நிஷாபூர் முதலிய நகரங்களுடன் வியாபாரத் தொடர்பு இருந்தது.

இவ்வளவு பெரிய அளவில் இமாமவர்கள் வியாபாரம் செய்வதற்கு அவர் பெரும் பணக்காரராக இல்லாவிட்டாலும், அவரது பண்பு நலன்கள் காரணமாக மக்கள் அவரிடம் ஏராளமான பணம் கொடுத்து அடைக்கலமாக வைத்திருந்தார்கள். எண்ணெய் விற்பவள் ஒருவள் லட்சத்து எழுபதினாயிரம் திர்ஹம் அவரிடம் கொடுத்திருந்தான். இதைப் போலவே பலரும் கொடுத்திருந்தார்கள். அவர்களிடம் அனுமதி பெற்று, அந்தப் பணத்தைக் கடனாக வாங்கிக் கொண்டு வியாபாரத்தில் சேர்த்துக் கொண்டு, அதில் கிடைக்கும் இலாபத்தை அவரவருக்குப் பங்கிட்டுக் கொடுத்து விடுவார். வியாபாரத்தில் தமக்கு நஷ்டம் உண்டானாலும் அவரவரிடம் கடனாகப் பெற்றதைக் கொடுத்துவிடுவார்.

**பேங்க் (வங்கி) நிர்வாக ஆரம்பம்:**—இமாம் அபூ ஹனீபா தமது மாணவர்களுக்கும், இறை நேசர்களுக்கும் உறவினருக்கும் ஏழைகளுக்கும் அள்ளி அள்ளிக் கொடுக்கும் இயல்புடையோராதலால், அவரை மக்கள் நம்பி, அவரிடம் தங்கள் பணத்தை அடைக்கலமாக வைத்திருந்தார்கள். இதிலிருந்து, இமாமவர்கள் வட்டி வாங்காத "பேங்க்" நிர்வாக முறையை ஆரம்பித்து விட்டார். இமாமவர்கள் காலஞ் சென்ற பிறகு, அவரிடம் மக்கள் கொடுத்திருந்த பணம் ஐந்துகோடி ரூபாய் அடைக்கலமாக இருந்தது.

இவ்வாறு, இமாமவர்கள் அரசாங்கத் தொடர்பில்லாமல் சுவாதீனமாக வாழ்க்கை நடத்தினர். "உங்கள் உதவியைவிட அல்லாஹ்வின் உதவி மேலானது. அவனே, நம்பினோர்க்கு அவனுடைய அருள்மேகம் எப்பொழுதும் பொழியும். (அரசியலாராகிய) நீங்கள் ஒன்றை எதிர்பார்த்து கொடுக்கிறீர்கள். ஆனால், மகாபெரிய அல்லாஹ் கொடுத்தால், அதைச் சொல்லிச் காட்ட மாட்டான்" என்ற கருத்துள்ள பாடலை அடிக்கடி பாடுவார். "அரசாங்கத்தாரிடம் கைநீட்ட வேண்டுமென்ற அச்சம் எனக்கு இல்லாதிருந்தால், என்னிடம் ஒரு திர்ஹம் நாணயம் கூட நான் வைத்திருக்கமாட்டேன்" என்பார்.

## 7. அரசாங்கத்தில் செல்வாக்கு

இவ்வாறு இஸ்லாமிய உலகெங்கும் தனிச்சிறப்புடன் விளங்கிய இமாம் அபூ ஹனீபாவுக்கு அரசாங்கத்திலும் செல்வாக்கு அதிகரித்தது. இருந்தாலும் அக்கால அரசியல் குழப்பங்களிலும் கலகங்களிலும் இவரும் கலந்திருக்கலாமென்று அரசாங்கத்தார் சந்தேகிக்கும்படியான நிலைமைகளும் ஏற்பட்டன.

ஜைத்-பின்-அலீ என்பவர் ஹி. 121-ல் உமய்யா அரசுக்கு விரோதமாகக் கிளம்பினர். இவர் ஹஸ்ரத் அலீயின் குடும்பத்தைச் சேர்ந்தவர். தமது குடும்பத்தாருக்கே கிலாபத் கிடைக்கவேண்டுமென்ற கொள்கையுடையோர். நபி பெருமானரவர்களின் குடும்பத்தாருடன் அபூ ஹனீபா நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தமையால், அவர் மீது அரசாங்கத்தாருக்கு இவ்வாறான சந்தேகம் ஏற்பட்டது. ஆனால், உண்மையில் அபூ ஹனீபா இதில் கலந்துகொண்டதாகச் சரித்திரச் சான்றொன்றும் கிடைக்கவில்லை.

ஹி. 125-ல் உமய்யா கலீபா, ஹிஷாம் இறந்தார். பிறகு வலீத்-பின்-எஜீத், எஜீத், இப்பராஹீம்-பின்-வலீத், மர்வான் ஆகியோர் ஒருவர் பின்னொருவராக கலீபா பீடத்தில் அமர்ந்தார்கள்.

அக்காலத்தில் காரிஜிகள் கூபாவின்மீது படையெடுத்து அதைக் கைப்பற்றி அங்கிருந்த மக்கள் எல்லோரையும் கைதுசெய்தார்கள். இமாம் அபூ ஹனீபாவும் கைது செய்யப்பட்டார்.

ஆனுல் விடுதலையடைந்தார். பிறகு காரிஜிகள் கூபா வாசிகளைக் கொலைசெய்யத் தயாரானுர்கள். ஆனுல், இமாம் அபூ ஹனீபா அவர்களுக்குப் போதனை செய்து தடுத்தார். பிறகு, காரிஜிகள் துரத்தப்பட்டார்கள். மர்வான் காலத்தில்தான் அப்பாஸி கிலாபத்தை ஏற்படுத்தும் முயற்சி வலுவடைந்தது. அபூ முஸ்லிம் குராஸானீ என்பவரின் தீவிர முயற்சியால், உமய்யா அரசாங்கத்தை எதிர்க்கும் இரகசிய ஏற்பாடுகள் நாடெங்கும்செய்யப்பட்டன. எனவே, உமய்யா அரசாங்கம் ஆட்டமெடுக்க ஆரம்பித்தது.

இந்த ஆர்ப்பாட்டங்களில் இராக் நாடே முதற் பங்கெடுத்தது. அந்த நாட்டில் கூபா நகரமே மத்திய ஸ்தானம். இந்த அரசாங்கப் புரட்சியை நிறுத்துவது எப்படியென்று சிந்தனைசெய்தார் கலீபா மர்வான். கடைசியாக, எஜீத் பின்-உமர்-பின்-ஹுபீரா என்பவரை இராக் மாகாண கவர்னராக நியமித்தனுப்பினுர். இந்தப் புதிய கவர்னர் ராஜதந்திரி. பராக்கிரமசாலி. துணிவுள்ளவர். கொடையாளி. உயர்ந்த குடும்பத்தைச் சேர்ந்தவர். பேச்சு வன்மையுள்ளவர். பிறரை வசப்படுத்தும் குணமுள்ளவர். இத்தனை பண்புகள் நிறையப்பெற்ற இந்த கவர்னர் வந்தவுடன் இராகின் நிலைமையை நன்கு ஆராய்ந்து பார்த்தார். உமய்யா அரசின் நன்மை தீமைகளை உற்றுநோக்கினுர். அந்த ஆட்சியின் இயந்திரம் செம்மையாகவே இருந்தது. ஆனுல், ஒரு குறை. அது பெருங் குறை. அதாவது, அரசாங்க இயந்திரத்தில் மார்க்கம் என்பதே இல்லாதிருந்தது. எனவே, இப்பெருங் குறையை அகற்றிவிட்டால் அரசாங்க இயந்திரம் நலம்பெற நடக்குமென்று கண்டு கொண்டார்.

இப்னு ஹுபீரா கவர்னராக இருக்கும்பொழுது, அவர் ஒரு மனிதனைக் கொலைசெய்யக் கட்டளையிட்டார். அச்

சமயம், இமாமவர்கள் அங்கு சென்று அந்த மனிதன் நல்லவன் என்று சாட்சியம் சொல்லி, விடுதலை செய்வித்தார். இதைப்போல், மற்றொரு முறையும் இன்னொரு மனிதனை விடுதலை செய்வித்தார். அந்த கவர்னர் இவ்வாறு இமாமவர்களுடன் தொடர்பு கொண்டார். இமாமவர்களை அந்த கவர்னர் அழைத்து மரியாதை செய்வார். ஆனால், இமாமவர்கள் தாமாக அவரிடம் செல்வதில்லை. கவர்னருக்கு இஸ்லாமிய சட்ட விஷயங்களில் சந்தேகம் ஏற்பட்டால், இமாமவர்களை அழைத்து, விளக்கம் பெற்றுத் தெளிவடைவார்.

அரசாங்க அலுவல் வேண்டாமை:—புதிய கவர்னர் இராக் மாகாணத்திலுள்ள புகஹாக்கள் அனைவரையும் அழைத்து உயர்ந்த உத்தியோகங்கள் கொடுத்தார். கஜானா உத்தியோகஸ்தர், (மீர்முன்ஷி) உத்தியோகம் அபூ ஹனீபாவுக்கு அளிக்கப்பட்டது. ஆனால், அவர் அதை வேண்டாமென்று கூறிவிட்டார். கவர்னர், விடாப்பிடியுடன், அந்த உத்தியோகத்தை ஒப்புக்கொண்டே யாகவேண்டும் என்று வற்புறுத்தினார். அபூ ஹனீபாவின் நெருங்கிய நண்பர்கள் பலர் அதை ஒப்புக்கொள்ளும்படி வேண்டிக்கொண்டார்கள். ஆனால், எவரது வார்த்தையும் அபூ ஹனீபா கேட்கவில்லை. அவர் கவர்னரை நோக்கி, நிம்மதியுடன், "உம்மிடம் வந்து நான் என்ன செய்வேன். என்னை உம்மிடம் நெருங்கியிருக்கச் செய்தால் என்னைப் பாவங்களில் மூழ்கும்படி செய்வீர்." என்றார். அரசியல் விஷயங்களில் அதிகமாக ஈடுபட்டு அரசாங்கத்தாரை நெருங்குவோருக்கு இது நிரந்தரமான பாடமாகும். மேலும், "உம்மிடம் எனக்குத் தேவையான பொருள் இல்லை. உமக்கு நான் அஞ்சுவதற்கான பொருள் ஒன்றும் என்னிடம் இல்லை" என்றார். அரசாங்கத்திடம் பணமும் பதவியும் உண்டு. ஆனால் அரசாங்கம் சந்தேகிக்கும்படியான ஒன்றும் இமாமிடம் இல்லை.

கவர்னர் கோபங்கொண்டார். தினந்தோறும் அபூ ஹனீபாவுக்குப் பத்து சவுக்கடி தண்டனை விதித்தார். அவ்வாறே செய்யப்பட்டது. அதற்கப்பாலும் அபூ ஹனீபா பிடிவாதத்துடனே இருந்தார். அபூ ஹனீபா அதற்குப்பிறகு

அங்கிருக்க விரும்பவில்லை. அங்கிருந்து புறப்பட்டு ஹி 136 வரையில் மக்காவில் வசிந்துவந்தார்.

## 8. மக்காவுக்கு ஹிஜ்ரத்

உமய்யா அரசாங்கத்தின் இப்னு ஹபீராவின் தொந்தரவுகளைப் பொறுக்கமாட்டாமல், தற்காலிகமாக ஹிஜ்ரத் செய்து, மக்கா நகரில் அடைக்கலம் புகவிரும்பி, ஹி. 130-ல் புறப்பட்டார். இதனால், இப்னு ஹபீராவும் ஒருவித மகிழ்ச்சி கொண்டிருக்கலாம். ஒரு சுவாதீனமுள்ள புனிதர் கூபா நகரிலிருக்கும்வரை தமக்கும் தொந்தரவுதான் என்று நினைத்திருக்கலாம். அதனால்தான் இமாமவர்களை அவர் தடுக்கவில்லை. இதே ஹி. 130-ல் அப்பாஸிகளின் சார்பாக அபூ முஸ்லிம் குராஸானீ என்பவர் ஈரான் நாட்டில் வெற்றியடைந்து மர்வ் நகரில் வெற்றியுடன் நுழைந்தார். இந்த இயக்கத்துடன் இமாம் அபூ ஹனீபா கலந்திருந்ததாகத் தெரியவில்லை. ஏனென்றால், அதே அபூ முஸ்லிம் என்பவரைக் கண்டித்து, அவரால் கொலை செய்யப்பட்ட இப்ராஹீம் பின் மைமூன் என்பவர் இமாம் அபூ ஹனீபாவின் நண்பராக இருந்தார்.

எனவே, ஹி. 132-ம் ஆண்டுவரை இமாமவர்கள் நிம்மதியாக ஹிஜாஸ் மாகாணத்தில் காலங்கழித்தார். அந்த ஹி. 132-ம் ஆண்டில், அப்பாஸி குடும்பத்தாரின் முதல் கலீபா அபுல் அப்பாஸ் அல்ஸப்பா என்பவர் கூபா நகருக்கு வந்து, வெள்ளிக்கிழமையன்று தமது ஆட்சியை பிரகடனஞ் செய்து, சரித்திரப் புகழ்பெற்றதொரு சொற்பொழிவாற்றினார்.

இதற்கிடையில் கூபாநகரில் எத்தனையோ குழப்பங்கள் நடந்து, இறுதியாக, கவர்னர் இப்னு ஹபீரா அங்கிருந்து வாஸித் சென்று மறைந்துவிடுகிறார். அப்பாஸி கட்சியார் கூபாவில் தங்கள் ஆட்சியை ஆரம்பிக்கிறார்கள். முதலாம் அப்பாஸி கலீபா கூபாவில் ஆலிம்களைத் தனியாக அழைத்து ஒரு சொற்பொழிவாற்றினார். அதில்,

" இந்த கிலாபத் இறுதியாக உங்கள் இறைதூதரின் குடும்பத்திற்குக் கிடைத்துவிட்டது. ஆண்டவன் தீர்ப்பு

வந்துவிட்டது. ஆண்டவன் இறுதியில் உண்மைக்கு உயர்வு கொடுத்தான்" என்று ஆரம்பித்து,

"நீங்கள் மார்க்க அறிஞர் (ஆலிம்)கள். நீங்கள் இதில் உதவி செய்யவேண்டும். உங்களைக் கண்ணியப்படுத்தப்படு மென்றும், ஆண்டவனுடைய பொருளால் உங்களுக்கு விருந்தளிக்கப்படும் என்றும் விளம்பரஞ் செய்யப்படுகிறது."

" ஆகையால், கலீபாவாக நியமனம் பெற்றவரிடம் விசுவாசப் பிரமாணம் செய்ய உங்கள் கைகளை நீட்டுங்கள் அந்த விசுவாசப் பிரமாணம் கிலாபத்திற்காக ஒரு சான்ருக இருக்கும். இதில் உங்களுக்கு நிம்மதியும் அடைக்கலமும் கிடைக்கும். இதனுல் மறு உலகில் உங்களுக்கு பேரின்ப வாழ்க்கை கிடைக்கும். "

"பாருங்கள்! அச்சத்தால் என்னை "அமீருல் மூமினீன்" என்று சொல்லாதீர், உண்மை சொல்லப் பின்வாங்காதீர் " என்றும் கூறினுர்.

அச்சமயம் இமாம் அபூ ஹனீபாவும் இருந்ததாகக் கூறப் படுகிறது. எனவே, அவர் அப்பொழுது ஹிஜாஸிலிருந்து திரும்பி வந்திருக்கலாம். எல்லா ஆலிம்களும் இமாம் அபூ ஹனீபாவைப் பார்த்தார்கள். அதைக்கண்டு, இமாமவர்கள், ஆலிம்களைப் பார்த்து,

"உங்களுக்குப் பிரியமானுல், உங்கள் சார்பாகவும், என் சார்பாகவும் நான் மறுமொழி கூறுகிறேன்,, என்ருர். எல்லோரும் சில விநாடிகள் ஒன்றும் பேசாமலிருந்தார்கள், பிறகு, இமாமவர்கள் எழுந்து, கீழ்க்கண்ட சொற்பொழி வாற்றினுர்.

"நபி பெருமானுர் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்ல மவர்களுடைய சொந்தக்காரர்வரை அவர்களுடைய உரிமை வந்து விட்டதற்காக, அல்லாஹ்வுக்குப் புகழ்! அநியாயக் காரர்களுடைய அநியாயங்கள் அழிந்து பட்டதற்காகவும் நாங்கள் உண்மையை வெளியிடுவதற்காக எங்கள் நாவு களுக்குச் சுதந்திரம் கிடைத்ததற்காகவும் இறைவனுக்கு நன்றி! ஆண்டவனுடைய கட்டளையால் நாங்கள் உங்

களுக்கு விசுவாசப் பிரமாணம் செய்துவிட்டோம். நாங்கள் கியாமுஸ் ஸாஅத் வரை விசுவாசமாக இருப்போம்'' என்று சுருக்கமாகக் கூறிமுடித்தார்.

ஸப்பாவுக்கு இவர் ஆற்றிய சொற்பொழிவில் அதிக திருப்தியுண்டாயிற்று. ''ஆலிம்கள் உங்களைத் தங்கள் சார் பாகப் பேசச் சொன்னார்கள், உங்களைப்போன்றவர்கள் தான் பேசவேண்டும்,'' என்றார். பிறகு, எல்லோரும் வெளியே வந்தார்கள். ''கியாமுஸ் ஸாஅத்'' என்றீர்களே? என்று இமாம் அபூ ஹனீபாவிடம் கேட்டார்கள். ''ஆம்! நீங்கள் எல்லாம் என்னை உங்கள் வக்கீலாக்கினீர்கள்! என்ன செய்வது? ஆகையால், எனக்காகவும் உங்களுக்காகவும் நாமெல்லாம் இங்கு சேர்ந்து ''உட்காரும் நேரம்'' வரை என்றேன்!'' என்று விளக்கினார். ஆனால், கலீபா, ''உலக முடிவு நாள்வரை'' என்று நினைத்தார்.

சில சரித்திராசிரியர்கள் அடுத்த கலீபா மன்ஸூர் காலத்தில்தான் ஹிஜாஸிலிருந்து அபூ ஹனீபா கூபாவுக்கு வந்தார் என்று கூறுகிறார்கள். அதாவது, ஸப்பாஹ் ஆட்சி செய்த நான்கு ஆண்டு, ஒன்பது மாதம், இமாமவர்கள் ஹிஜாஸில் இருந்தார்களென்றும், அதற்கிடையில் கூபாவுக்கு வந்து போய்க் கொண்டிருந்தாரென்றும் நாம் நினைக்கலாம்.

ஹிஜாஸில்:—நிற்க, இமாம் அபூ ஹனீபா, ஹிஜாஸில் என்ன செய்து கொண்டிருந்தார்? மக்காவும் மதீனாவும் தமக்கு நேர்ந்த ஆபத்துகளிலிருந்து விடுதலை கொடுக்கும் அடைக்கல ஸ்தலங்களாகக் கருதி அங்கிருந்தார். ஹிஜாஸ் பிரதேசத்திலிருந்த நபி மொழிக்கலை வல்லுநர்களான முஹத்திதீன்களையும் ஆலிம்களையும் சந்தித்தார். அந்தப் பொன்னான காலத்தை தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டார். ஆயிரக்கணக்கான தாபியீன்களைச் சந்தித்தார். அதா பின் ரபாஹ் போன்ற புனிதர்களைக் கண்டு களித்தார், அக்காலக் கலைகளையெல்லாம் கற்றிருந்த இந்த மகான் தமது மாணவருடன் உட்கார்ந்திருக்கையில் அங்கு அபூ ஹனீபா சென்றுவிட்டால், ''விலகுங்கள்! வழிவிடுங்கள்!''

என்று கூறி, ஹனீபாவைத் தம் அருகில் அழைத்து உட்கார வைத்துக்கொள்வார். இதைத் தவிர, இமாம் அபூ ஹனீபாவின் சிறப்பை அறிந்த மக்கள் அவரிடம் வந்து அவரது சொற்பொழிவுகளைக் கேட்பார்கள். சந்தேகங்களை நீக்கிக் கொள்வார்கள். இவ்வாறு, காலஞ் செல்லச் செல்ல அவரது புகழ் ஹிஜாஸ் மாகாணத்தில் பரவியது. மக்காவில் அவர் குடியிருந்த வீட்டிற்கும் காபாவில், அவர் இருக்கும்பொழுதும் கிழக்கு மேற்கு நாடுகளிலுள்ளவர்கள் அவரிடம் வந்து பத்வா — மார்க்கத் தீர்ப்புகள் பெற்றுக்கொண்டு செல்வார்கள். அங்கு வருவோரும் சாதாரணமானவர்களல்லர். ஹதீத், பிக்ஹு, கலைகளை நன்கு அறிந்தோரே வருவார்கள், எனவே, கூபா என்ற ஓர் ஊரில் மட்டும் வெகுநாள் தங்கியிருந்த இமாமவர்களுக்கு உலகின் பல பாகங்களிலிருந்து வரும் எல்லா முஸ்லிம்களுக்கும் இலாபம் உண்டாக்கும்படியான நல்ல வாய்ப்பு ஏற்பட்டது. கவர்னர் இப்னு ஹுபைராவின் துன்பமானது, இதர முஸ்லிம்களுக்கு இமாமவர்களால் இன்பம் கிடைக்கும்படி செய்தது.

மேலும், ஹிஜாஸில் பல ஆலிம்களுடன் சந்தித்தபொழுது, அவர்களுடன் கொள்கைகள், எண்ணங்கள், முதலியவற்றைப் பரிமாறும் வாய்ப்பும் கிடைத்தது. தர்க்கங்களும் செய்வார். இப்னு ஜரீஜ் என்ற புகழ்பெற்ற பெரிய இமாம் அப்பொழுது மக்காவில் இருந்தார், அவருடனும் தர்க்கங்கள் செய்வார், இமாம் அவ்ஸாயீ என்பவருடனும் தர்க்கம் செய்ததோடு, அவரைப்பற்றிய தப்பெண்ணத்தை நீக்கி ஆண்டவனிடம் மன்னிப்புக் கேட்டார். பெருமானாரவர்களுடைய ஹதீதுகளை பொதுமக்களிடம் கிளிப்பிள்ளைகளைப் போலச் சொல்வோரைக் கண்டிப்பார். நபி மொழி எப்பொழுது, எங்கு, எதற்காக, எவரிடம், சொல்லப்பட்டது. கேட்டவருடைய நிலைமை என்ன, சூழ்நிலை என்ன, என்பன போன்ற விஷயங்களை நன்கு ஆராயாமல் சொல்வோரை அவர் குறைவாகவே மதிப்பார். கண்மூடித்தனமாக, ஹதீதுகளைச் சேகரித்துக் கொண்டிருப்போரால் மக்களுக்கு அதிக பலன் உண்டாகாது என்று நினைத்தார்.

## 9. கூபா திரும்பினார்

உமய்யா அரசாங்கம் மறைந்தது. அப்பாஸி அரசாங்கம் தோன்றியது. மக்காவிலிருந்து கூபாவுக்குத் திரும்பிய பிறகு, இமாமவர்கள் ஒரு மன்றம் மஜ்லிஸ் – நிறுவி, அதன் மூலமாக இஸ்லாமிய கலைகளைப் பெருக்குவதற்காக முயன்றார். இவ்வளவு பெரிய பணியை அவர் தனியாகச் செய்யத் துணிந்தது நமக்கு வியப்பாகவே தோன்றுகிறது. இந்த மன்றத்தின் மூலமாக, இமாமவர்கள் செய்ததென்ன ?

(1) நபி பெருமானாரவர்கள்வரை ஒவ்வொரு ஹதீதையும் முஹத்திதீன்கள் சொல்லிக் கொண்டிருந்தார்களல்லவா ? அந்த ஹதீதுகளைச் சரித்திர ஆராய்ச்சியுடன் நன்றாக முடிவான அமைப்பாக ஏற்படுத்த அவர் முயன்றார்.

(2) புதிய பிரச்சினைகள் தோன்றினால் அவற்றைப்பற்றி குர்ஆன், ஸுன்னத் இவற்றின் ஆதாரத்துடன், நன்றாக அறிந்து, எல்லா சூழ்நிலைகளையும் கவனித்து விதிகள் உண்டாக்க வேண்டும், என்றும் முயற்சித்தார்.

ஸுப்யான் தவ்ரீ, இமாம் அவ்ஸாயீ, ரபீயத்துர் ராயி, முதலியோர் இத்தகைய பணிகளை தனிப்பட்ட நிலைமையில் செய்து கொண்டிருந்தது உண்மையே என்றாலும், கூட்டு முறையில் செய்வது அதைவிடச் சிறந்தது என்று இமாம் அபூ ஹனீபா நினைத்தார். இவரது நோக்கம் முழுதும் இவர் காலத்தில் நிறைவேறா விட்டாலும், இந்தப் பணி இவர் காலத்தில் ஆரம்பிக்கப்பட்டதும், அவர் காலஞ்சென்ற பிறகு தொடர்ந்து நடத்தப்பட்டதும் உண்மை.

இந்த மன்றத்தில் பயிற்சி பெற்றோர் இஸ்லாமிய மத விஷயங்களில் சிறந்தோராக விளங்கியதோடு, பிற்காலத்தில் அரசாங்க அலுவலர்களாகவும், குறிப்பாக நீதிபதிகளாகவும் நியமனம் பெறுவதற்குத் தகுதியுடையோராகப் பயிற்சி கொடுக்கப்பட்டார்கள். முப்தி (Mufti)களாகவும் காஜி – (நீதிபதி)களாகவும் தயாரிக்கப்பட்டனர். முப்தி என்றால் பொது மக்கள் மதச் சட்டங்கள் சம்பந்தமாக சந்தேகங்கள் உண்டானால் அதற்கு விளக்கம் செய்வோர். ஆனால், மக்கள்

அந்தச் சட்டங்களைப் பின்பற்று விட்டால், அவர்களைத் தண்டிக்கும் உரிமை அவர்களுக்குக் கிடையாது. காஜி என்றால் அரசாங்க நீதி இலாகாவில் உத்தியோகம். காஜி தீர்ப்பளித்து விட்டால், குற்றவாளி அதற்குக் கீழ்ப்படிய வேண்டும். இஸ்லாமிய நாடுகளில் நீதிபதிக்கு உதவியாக அவசியமானபொழுது நீதிபதிக்கு அபிப்பிராயம் தெரிவிக்க (இப்பொழுது ஜூரிகள் இருப்பதுபோல) சிலர் சர்க்காரால் உத்தியோகஸ்தராக நியமிக்கப்பட்டிருந்தார்கள். அவர்களையும் முப்தி என்று சொல்லுவார்கள். ஆனால், இந்த முப்திகளுக்கும் குற்றவாளிகளைத் தண்டிக்கும் அதிகாரம் கிடையாது. இந்தக் கலைமன்றத்தில் பயிற்சி பெற்றவர்கள் பிற்காலத்தில் நீதிபதிகளாகவும், முப்திகளாகவும், காஜிகளுக்கு ஆசிரியர்களாகவும் அமைந்தார்கள். நீதிபதி உத்தியோகத்திற்குத் தகுதி வாய்ந்த தமது மாணவர்களுக்கு இமாமவர்கள், இந்த உத்தியோகம் அளவு கடந்த பொறுப்பு வாய்ந்ததென்றும், ஒரு சிறு பிழை செய்தாலும் பாவமென்றும் இதிலிருந்து பெரிய அறிவாளிகளெல்லாம் தப்ப வழி தேடுவார்களென்றும், அரசாங்கத்தின் நிர்ப்பந்தத்தால் தப்பிதமான தீர்ப்புகள் செய்யலாகாதென்றும், பாதுஷா குற்றஞ் செய்தாலும் தண்டனை அளிக்கப் பின்வாங்கலாகாதென்றும், நீங்கள் நீதிபதி உத்தியோகத்தை ஏற்றுக்கொள்ளாவிட்டால் பொதுமக்களுக்கு நஷ்டம் விளைவிக்கும், தீயர்கள் அந்த உத்தியோகத்தைப் பெற்றுக்கொள்வார்கள் என்ற அச்சமிருந்தாலன்றி நீங்கள் அந்தப் பணியை ஏற்றுக் கொள்ளலாகாதென்றும் போதனை செய்தார்.

கூபாவில் இப்னு அபீ லய்லா என்ற நீதிபதி இருந்தார். அவர் நீதிமன்றத்தில் செய்யும் முடிவுகளில் இமாமவர்கள் தலையிட்டு அவரை, மறைமுகமாகவும், வெளிப்படையாகவும் திருத்துவார். ஒரு சமயம் இப்னு லய்லாவின் நீதிமன்றத்தில் பைத்தியம் பிடித்த ஒரு கிழவி தன் தாய் தகப்பனைத் திட்டியதாக ஒருவர் வழக்குத் தொடர்ந்தார். நீதிபதி, அந்தக் கிழவிக்கு தாயையும், தகப்பனையும் திட்டியதற்காக இரட்டைத் தண்டனை கொடுக்கவேண்டுமென்று முடிவு செய்தார். பள்ளிவாசலே நீதிமன்றம். ஆகையால், பள்ளிவாசலில் சவுக்கடி கொடுக்கப்பட வேண்டுமென்றார்.

இதை இமாமவர்கள் கேள்விப்பட்டு இது பிழையான தண்டனை என்றார். ஏனென்றால், அந்தக் கிழவி பைத்தியக்காரி என்று எல்லோருக்கும் தெரியும். ஆகையால், அவள் பைத்தியக்காரிதானா என்பதை அறிந்து கொள்ளவேண்டும். இரண்டாவது தாய், தகப்பன் இருவரும் உயிரோடிருக்கும் பொழுது, இந்த வாதிக்கு வழக்குத் தொடரும் உரிமையில்லை. தாய் தகப்பனே செய்யவேண்டும். மூன்றாவது, பள்ளிவாசல், தண்டனையை நிறைவேற்றுமிடமில்லை. நான்காவது, ஒரு கூட்டத்தை நோக்கித் திட்டினால், ஒரே தண்டனைதான் கொடுக்கவேண்டும், இரட்டைத் தண்டனை கொடுத்தது பிழையாகும்.

இவ்வாறு, இன்னும் பல பிழைகளை இப்னு லய்லாவுக்குச் சுட்டிக் காட்டினார். எப்பொழுதும், இவ்வாறே குற்றம் கண்டால், அதைத் திருத்திக் கொண்டிருப்பார்.

இக்காலத்தைப்போல அக்காலத்திலும், சாட்சிகளைக் குறுக்கு விசாரணைசெய்து, வழக்கை பலவீனமாக்கும் முயற்சி செய்யப்படுவதுண்டு. ஒருசமயம் ஒரு தோட்டத்தைப் பற்றிய வழக்கு இப்னு லய்லாவிடம் வந்தது. அப்பொழுது, அந்தத் தோட்டத்தில் எத்தனை மரங்கள் இருக்கிறது என்று கேட்க, சாட்சி, " எனக்குத் தெரியாது " என்றார். உடனே அந்த வழக்குத் தள்ளப்பட்டது. வாதி இதைப்பற்றி இமாமவர்களிடம் சென்று முறையிட்டார். இதைக் கேட்டு, இமாமவர்கள் அந்த வாதியை நோக்கி, " நீர் நீதிபதி இப்னு லய்லாவிடம் சென்று, இத்தனை ஆண்டுகளாக இந்த கூபா ஜாமியா பள்ளிவாசலில் தொழுகிறீர்களே, இந்தப் பள்ளிவாசலிலுள்ள தூண்கள் எத்தனை? என்று கேளும்" என்றார். வாதி அவ்வாறே கேட்க, நீதிபதி "நான் எண்ணிக்கொண்டா இருக்கிறேன்?" என்று விடையளித்தார். " அப்படியானால் மரங்களை எண்ணவில்லை என்ற சாட்சியத்தால் நான் இந்தத் தோட்டத்தையே அறியமாட்டேன் என்று நீங்கள் எவ்வாறு வழக்கைத் தள்ளி விட்டீர்கள்?" என்று வாதி கேட்டார்.

இவ்வாறாக, அரசாங்க நீதிமன்றங்களில் நடக்கும் பிழைகளை இமாமவர்கள் திருத்துவார்கள்.

## 10. அப்பாஸி கலீபாக்கள்

தொண்ணூறு ஆண்டுகளாக நடந்த உமய்யா அரசியல் ஹி. 132-ல் முடிவடைந்தது. அப்பாஸி அரசியல் ஆரம்பமாயிற்று. அபுல் அப்பாஸ் "ஸப்பாஹ்" என்பவர் முதல் அப்பாஸி கலீபா. அவர் கூபா நகருக்கு வந்த பொழுது, ஆலிம்களின் சார்பாக இமாம் அபூ ஹனீபா அவர் முன்னிலையில் சொற்பொழிவாற்றினார். ஆனால் ஹி. 136-ல் வந்த இரண்டாம் கலீபா மன்ஸூர் காலத்தில்தான் இமாமவர்களின் அரசாங்கத் தொடர்பு ஆரம்பமாகிறது. அதாவது, பக்தாத் நகரை நிர்மாணிக்கும் பொழுது நாட்டிலுள்ள அறிஞர்களை அழைத்ததாகவும், அப்பொழுது இமாமவர்களையும் அழைத்ததாகவும் கட்டிடவேலையில் மேற்பார்வை செய்யும்படி வேண்டிக் கொண்டதாகவும், அவரும் அவ்வாறே சில காலம் செய்ததாகவும் தெரிகிறது. கட்டிடங்களுக்குச் செங்கல் தயாரித்துக் கொடுக்கும் பொறுப்பேற்றுக் கோடிக்கணக்கான செங்கல்கள் தயாரித்துக் கொடுத்ததாகவும் தெரிகிறது. அப்பாஸிகள் தங்கள் சர்வாதிகாரத்தை உலகுள்ளவரை நிலைநாட்ட எண்ணினார்கள் அவர்களுக்கு எதிர்ப்பு எங்கிருந்து வந்தாலும், பற்பல முறைகளைக் கையாண்டு எதிர்ப்பை அடக்கவும் அழிக்கவும் முயன்றார்கள். உமய்யா குடும்பத்தாரைத் தேடித் தேடிப் பிடித்துக் கொல்வார்கள். சில சமயம் இறந்துபோன உமய்யா கலீபாக்களின் பிரேதங்களையும் வெட்டி எடுத்து எரித்துச் சாம்பலாக்கிக் காற்றில் வீசிவிடுவார்கள்.

இத்தனை முன்னெச்சரிக்கையுடன் அப்பாஸிகள் நடந்து கொண்டபோதிலும், மக்கள் மனதில் நிம்மதியற்ற நடுக்கத்தையும் இடி மின்னல்போன்ற அதிர்ச்சிகளையும் ஏற்படுத்திய காலையிலும், அப்பாஸி அரசாங்கத்திற்கு எதிர்ப்பு இருந்து கொண்டே இருந்தது. பலவிடங்களில் அரசாங்கத்திற்கு விரோதமாகக் கிளர்ச்சிகளும் கலகங்களும் உண்டாயின. முதலிரண்டு அப்பாஸி கலீபாக்கள் அவற்றை அடக்கும் கவலையில் அளவுகடந்து சென்றுவிட்டார்கள். உமய்யாக்கள் போன்று துன்பமிழைக்காமல், அப்பாஸிகள் பெருங்குடி

மக்களுக்கு சுகவாழ்வு அளிப்பார்களென்றே பொதுமக்கள் எதிர்பார்த்திருந்தார்கள். ஆனால், அப்பாஸிகளின் சொல் ஒன்று. செயல் வேறு. அப்பாஸிகளின் கொடுமைகள் உமய்யாக்களின் கொடுமைகளைவிட அதிகமாகிவிட்டன.

கலீபா மன்ஸூர் இன்னும் ஓரடி எட்டிச் சென்றார். உமய்யாக்கள் காலத்தில் மதீனாவில் இமாம் ஹஸன் பௌத்திரர் முஹம்மத் நப்ஸெ ஜக்கியா என்பவரை ஹாஷிம் குடும்பத்தார் கலீபாவாகத் தேர்ந்தெடுத்தபொழுது, இந்த அபூ ஜாபர் மன்ஸூர் என்பவரும் அவருக்கு விசுவாசப் பிரமாணம் செய்தார் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. இமாம் மாலிக், இமாம் அபூ ஹனீபா, இவ்விருவரும் முஹம்மதுக்கு ஆதரவளித்தார்கள்.

உமய்யாக்களுக்கு விரோதமாக அப்பாஸிகள் மறைமுகமாகக் கிளர்ச்சி ஆரம்பித்த காலமுதல் "நாங்கள் நபி பெருமானாரவர்களின் குடும்பத்தாருக்காக அவர்களுடைய கிலாபத்தைப் பிடுங்கிக்கொண்ட உமய்யாக்களை அழிப்பதற்காகப் புறப்பட்டிருக்கிறோம்" என்று பிரகடனம் செய்தார்கள். இதைப் பொதுமக்கள் நம்பினார்கள். இந்த இயக்கத்தில் அப்பாஸிகளுக்கு ஈரான் நாட்டிலே வெற்றி கிடைத்தது. பிறகு, வேறு நாடுகளில் கிடைத்தது. ஆனால், அவர்களுக்கு அரசியல் கிடைத்தவுடன் தங்கள் வாக்குறுதிகளை மறந்துவிட்டார்கள். தங்களுக்கு உதவிசெய்த தளபதிகளையும் கொன்றார்கள். பிறகு, நபிபெருமானாரின் குடும்பத்தார் பக்கம் திரும்பினார்கள்.

அஹ்லே பைத் என்ற ஹஸ்ரத் அலீயின் குடும்பத்தாரை அழித்துவிட வேண்டுமென்று கங்கணம் கட்டிக்கொண்டார்கள். ஏன்? இந்தக் குடும்பத்தார் தங்களுக்கே கிலாபத் கிடைக்கவேண்டுமென்றார்கள். அதற்கான திட்டமும் தயாரித்தார்கள். வெளிப்படையான முயற்சிகளும் செய்தார்கள். இதற்கிடையில், இவர்களது முயற்சிகளை அறிந்துகொண்ட அப்பாஸிகள், இவர்களைக் கணக்கற்ற கொடுமைகளுக்கு ஆளாக்கினார்கள்.

நப்ஸே ஜக்கியா நிகழ்ச்சி ஹி. 145ல் நடந்தது. அதாவது நபிபெருமானாரவர்கள் ஹிஜ்ரத் செய்த ஒன்றரை நூற்றுண்டுகளுக்குப் பிறகு நடந்தது. முஸ்லிம்களில் இரண்டு பிளவுகள் உண்டாகி ஒரு கட்சியார் மறைமுகமாகவும் வெளிப்படையாகவும் நபி பெருமானாரின் குடும்பத்தைத் துன்புறுத்தினார்கள். உமய்யாக்களும் அப்பாஸிகளும் அஹ்லுல் பைத்—பெருமானாரின் குடும்பத்தாரைக் கண்டு அஞ்சினார்கள். நபிபெருமானாரின் குடும்பத்தார் இறையச்ச வாழ்க்கை நடத்திக்கொண்டு, மக்களுக்குப் போதனைசெய்து கொண்டு அமைதியாக வசித்தார்கள். இருந்தாலும் அவர்களுக்கு அடிக்கடி ஆபத்து ஏற்பட்டுக்கொண்டிருந்தது.

முஹம்மத் பின் அப்துல்லாஹ் (நப்ஸெ ஸக்கியா) அவரது சகோதரர் இப்ராஹீம் இவ்விருவரும் சிறந்த பக்திமான்கள். இறைநம்பிக்கை யுள்ளவர்கள். வீரமுள்ளவர்கள். பேரின்ப வாழ்க்கையை விரும்புவோர்கள். இத்தகைய புனித சகோதரர்களைக் கொலை செய்யும்படி கலீபா மன்ஸூர் கட்டளையிட்டார். அதனால், அவர்கள் ஐந்து ஆண்டுகள் மறைமுகமாக வசித்தார்கள். அரபு நாட்டிலும், ஈரானிலும் இருந்தார்கள். பல ஊர்களுக்குச் சென்றார்கள். ஒரே ஊரில் பல நாட்கள் தங்கமுடியவில்லை. அவர்களைப் பிடிக்க அரசாங்கம் முயற்சி செய்வதாகத் தெரிந்தால், உடனே புறப்படுவார்கள். இந்தியாவுக்கு வந்து, ஸிந்து நாட்டில் இருந்தார்கள். அங்கும் ஆபத்து. மறுபடியும் அரபு நாட்டுக்குச் சென்றார்கள். இறுதியாகத் தங்களுக்கு உதவிகிடைக்கும் என்ற நம்பிக்கை கிடைத்தவுடன், அப்பாஸி கலீபாவுக்கு விரோதமாகக் கொடி உயர்த்தினார்கள்.

அப்பாஸிகளின் பேருபகாரிகளுடைய மனதையும் இமாமவர்கள் மாற்றிவிட்டார். அதாவது, பரம்பரையாக ராணுவ உதவி அளித்துத் தங்கள் உயிர்களை அப்பாஸி கட்சிக்காக அர்ப்பணஞ் செய்த தாயீ கோத்திரத்தின் தளபதியான ஹஸன் பின் கஹ்தபா (Hasan bin Qahtaba) என்பவரை அப்பாஸி கலீபா மன்ஸூருக்கு உதவி செய்யாமல் விலகும்படி — இமாம் அபூ ஹனீபா செய்துவிட்டார். இந்த

ஹஸன் பின் கஹ்தபா என்பவர் அந்த அரசியலின் பிரதான தூணாக அமைந்திருந்தார். அப்பாஸி சேனைக்கு அவர் எத்தகைய கட்டளையிட்டாலும் அதற்கு அந்தச் சேனை உடனே கீழ்ப்படியும், அவர் அப்பாஸி அரசியலில் அவ்வளவு செல்வாக்குள்ளவர்.

ஒருசமயம் அப்பாஸி கலீபா மன்ஸூர், இமாம் அபூ ஹனீபாவுக்குப் பத்தாயிரம் பொற்காசுகள், இந்த ஹஸன்பின் கஹ்தபா என்பவர் மூலமாகக் கொடுத்தனுப்பினார். பணம் பெற்றால் இமாமவர்கள் தனக்கு அடிமையாகி விடுவரென்று கலீபா மன்ஸூர் நினைத்தார். பணத்தைக் கண்டதும் இமாமவர்கள் மனக்கலக்க மடைந்தனர். பேசவும் அவருக்கு நாவெழவில்லை. இந்த நிலைமையைக் கண்டு, ஹஸன் ஆச்சரியப்பட்டார். "பணமென்றால் எல்லோரும் சந்தோஷமாகப் பெற்றுக்கொள்வார்கள். இமாம் ஏன் இவ்வாறு அஞ்சுகிறார்?" என்று அவருக்கு வியப்பு அதிகரித்தது!

அன்று முதல் ஹஸன் பின் கஹ்தபாவுக்கு இமாமவர்கள் மீது மரியாதை உண்டாயிற்று. அதற்குப் பிறகு அவர் வந்து அடிக்கடி சந்திப்பது வழக்கம். இவ்வாறு ஓராண்டு கழிந்தது. தொடர்பும், அதிகரித்தது.

அச்சமயம், இப்ராஹீம் பின் அப்துல்லாஹ் என்பவர் இராக் நாட்டில் மறை முகமாக அரசாங்கப் புரட்சிக்கு தயாரிப்புகள் செய்து கொண்டிருந்தார். அதே காலத்தில் இமாம் அபூ ஹனீபாவும் மறை முகமாக அப்பாஸி அரசாங்கக் கட்டிடத்தின் ஹஸன் பின் கஹதபா என்ற தூணை வீழ்த்த முயற்சித்து அதில் வெற்றியு மடைந்தார். அவருக்கு நற்போதனை செய்து இறைச்ச முண்டாக்குவார். ஒருநாள், இமாமவர்களிடம், ஹஸன் வந்து, "நான் இதுவரை எத்தனையோ மக்களைக் கொலை செய்துவிட்டேன், அதற்காக வருந்துகிறேன். நான் இப்பொழுது ஆண்டவனிடம் பாவ மன்னிப்புக் கேட்டால், அது ஏற்றுக்கொள்ளப்படுமா?" என்று கேட்டார். "தூய்மையான உள்ளத்துடன், சென்ற காலத்தில் நடந்த குற்றங்களுக்காக மனம் நொந்து, இனி மேல் அவ்வாறு செய்யமாட்டேன் என்று உறுதிகொண்

டால், உம்முடைய பாவங்கள் நிச்சயமாக இறைவனுல் மன்னிக்கப்படும். இவ்வாறு நீர் நினைப்பதும் உறுதிகொள்வதுமே உம்முடைய பாவ மன்னிப்புக் கேட்டலுக்குச் சமமாகும்'' என்று கூறினுர்.

சில நாட்கள் கழிந்தன. மதீனுவில் முஹம்மத் நப்ஸே ஸக்கியாவும், பிறகு, பஸ்ராவில் இப்ராஹீமும் அப்பாஸி அரசாங்கத்திற்கு விரோதமாகக் கலக்கொடி உயர்த்தினுர்கள். கலீபா மன்ஸூர் உடனே, தளபதி ஹஸனைத் தமது தர்பாருக்கு அழைக்கிருர். ஹஸன் அரண்மனைக்குச் செல்லாமல், நேராக இமாம் அபூ ஹனிபாவிடம் வருகிருர். நடந்த விஷயத்தைச் சொல்லுகிருர். உடனே இமாமவர்கள் முன்னர் இறைவனிடம் அவர் மன்னிப்புக் கேட்டதை நினைவுபடுத்தினுர். ஹஸன் மறுபடியும் ''நான் என் வாக்கின்படி நடப்பேன்'' என்று சத்தியம் செய்துவிட்டு கலீபாவிடம் சென்று ''நான் இனிமேல் மனிதரைக் கொல்லும் வேலையில் ஈடுபடமாட்டேன்'' என்று தைரியமாகக் கூறி அரசியலிலிருந்து ஒதுங்குகிருர்.

இதனுல், கலீபா மன்ஸூருக்கு ஏற்பட்ட மனக்கலக்கம் சொல்லமுடியாததாகும். இவ்வாறு, இமாம் அபூ ஹனீபா அப்பாஸி அரசாங்கத்தின் மிக முக்கியமான தளபதியை தமது வசப்படுத்தி வெற்றி பெற்ருர்! இது மாபெரிய மகத்தான வெற்றி!

கடைசியாக, அப்பாஸிகளின் கொடுமைகளைப் பொறுக்க முடியாமல், அஹ்லே பைத் குடும்பத்தாரின் தலைவரான முஹம்மத் நப்ஸெ ஜக்கீயா என்பவர், ஹி. 145-ல் அப்பாஸி அரசை எதிர்க்கத் தீர்மானித்துத், தமது மறைவிடத்திலிருந்து புறப்பட்டு, மதீனு நகர் சென்று, கலகக் கொடி உயர்த்தினுர். அவருக்குப் பக்கபலமும் கிடைத்தது. இமாம் மாலிக்போன்ற இமாம்களும் அவர்களுக்குத் துணையாய் நின்று பத்வா கொடுத்தார்கள். மதீனுவைச் சுற்றி அகழ் தோண்டிப் பாதுகாவல் செய்தார்.

ஆனுல், நப்ஸெ ஜக்கீயா தோல்வியடைந்து போர்க்களத்தில் மாண்டுபோனுர். பிறகு, அவரது சகோதரர்

இப்ராஹீம் என்பவர் இராகில் கிளம்பினுர். இந்தக் கலகத்தைப்பற்றிக் கேள்விப்பட்டவுடன் கலீபா, மன்ஸூருக்கு நடுக்கமுண்டாகிவிட்டது. அன்றுமுதல் இரண்டு மாதம் வரை அவர் தமது ஆடையையும் மாற்றவில்லையாம்! தலையணை வைத்துப் படுப்பதில்லையாம்! தொழுகை விரிப்பில் உட்கார்ந்திருப்பாராம்!

இப்ராஹீம் சிறந்த வீரபுருடர். மேன்மையான அறிவாளி. பொதுமக்களால் விரும்பப்படுவோர். கூபா நகரில் மட்டும் சுமார் ஒரு லட்சம் மக்கள் அவரது கிலாபத்திற்காக உயிர்த்தியாகஞ் செய்யவும் துணிந்து நின்ருர்கள். பொதுவாக, மார்க்க சம்பந்தமுள்ளோர் அனைவரும், குறிப்பாக, ஆலிம்களும் புகஹாக்களும் இந்தப் புரட்சிக்கு ஆதரவளித்தார்கள்.

நெருக்கடியான இச்சந்தர்ப்பத்தில் இமாம் அபூ ஹனீபாவின் நிலைமை எவ்வாறிருந்தது? உமய்யாக்கள் மறைந்தனர். அப்பாஸிகள் வந்தனர். ஆனுல், கொடுங்கோன்மை மறையவில்லை. சர்வாதிகாரத்தின் சாவுமணி அடிக்கப்படவில்லை. அப்பாஸிகளின் முதல் கலீபாவான ஸப்பாஹ்வின் காலத்திலேயே அவர்கள் கிலாபத்தை நிர்வகிக்கத் தகுதியற்ருரென்று தெரிந்துவிட்டது. அவ்வரசாங்கத்தை அமைப்பதில் அடிப்படையான ஆதரவு அளித்த அபூ முஸ்லிம் குராஸானீ உடைய கொடுமைகள் மறுபக்கம் மலிந்து காணப்பட்டன. எவராயினும் எதிர்த்துப் பேசினுல், உடனே உயிர் போய்விடும். இம்மாதிரியான அநியாயங்களைப் பொறுத்துப் பொறுத்துப் பார்த்து, கடைசியில் பொறுமையிழந்து, அபூ ஹனீபாவின் நண்பரும் மார்க்க பக்தியுள்ள ஆலிமுமாயிருந்த இப்ராஹீம்—பின்—மைமூன் என்னும் பெரியார், அபூ முஸ்லிமிடம் சென்று அவரைக் கண்டித்தார். உடனே, கொலை செய்யப்பட்டார். இதை அறிந்த அபூ ஹனீபா துக்கக் கடலில் மூழ்கினுர்.

ஹி. 145-ல் நப்ஸெ ஜக்கீயாவின் சகோதரர் இப்ராஹிம் கிலாபத் உரிமைகொண்டாடி புறப்பட்டகாலையில், அபூ ஹனீபாவும் மற்ற மார்க்கப் பெரியோருடன் சேர்ந்து

இப்ராஹீமுக்குத் துணையாக நின்றார். நாலாயிரம் பொற் காசுகள் கொடுத்தனுப்பினார். சில சொந்தக் காரணங்களை முன்னிட்டு போரில் கலந்துகொள்ளவில்லை. ஆனால், இப்ராஹீம் பஸ்ராவில் போர் புரிந்து இறந்துபோனார்.

அன்று அங்கு மதீனாவில் நப்ஸெ ஜக்கீயா, இன்று இங்கு பஸ்ராவில் அவர் சகோதரர் இப்ராஹீம், இருவரும் கிலாபத்தின் உரிமைக்காகப் போர் செய்தனர். ஆனால், அப்பாஸிகளின் சர்வாதிகாரத் தனியரசு அவர்களைக் கொன்றுவிட்டது. இவ்வாறு எதிப்பு ஒருவகையில் முடிவடைந்தது. ஆனால், கலீபா மன்ஸூர் திருப்தியடையவில்லை. இப்ராஹீமுக்கு உதவிசெய்தோரை அவர் பின் தொடர ஆரம்பித்தார். அவர்களில் அபூ ஹனீபாவும் ஒருவர்.

## 11. பக்தாத் நகரில்

நபி பெருமானாரவர்கள் காலத்திலும் முதல் நான்கு இஸ்லாமிய கலீபாக்கள் காலத்திலும் மதீனாவே இஸ்லாமிய தலை நகரமாயிருந்தது. உமய்யாக்கள் திமஷ்க் நகரைத் தங்கள் ஆட்சி பீடமாகத் தெரிந்தெடுத்தார்கள். அப்பாஸிகளின் ஆரம்ப காலத்தில் கூபா நகரின் பக்கத்திலுள்ள ஹாஷிமிய்யா தலைநகரா யிருந்தது. பெருமானாரின் குடும்பத்தாரான ஸாதாத்துகளே கிலாபத்திற்கு உரியவர் என்ற கொள்கையுடையோரான கூபா நகரத்தாரின் பக்கத்திலிருப்பதை விரும்பாமல், வடக்கில் வெகு தூரத்தில் ஓரிடத்தைத் தெரிந்தெடுத்து, கலீபா மன்ஸூர் ஹி. 146-ல் பக்தாத் நகரை நிர்மாணித்து, அதை அப்பாஸி தலைநகராக்கினார். பிறகு, கூபாவிலிருந்து பக்தாத் நகருக்கு அபூ ஹனீபா வர வேண்டுமென்று மன்ஸூர் உத்தர விட்டார்.

இமாம் அபூ ஹனீபாவின் கூபா நகர் வாழ்க்கையின் இறுதி நாட்களில் தமது மாணவர்களைப் பல இடங்களிலிருந்தும் வரவழைத்தார். ஆயிரம் பேர் வந்தார்கள். அவர்களை கூபா நகரின் ஜாமியா பள்ளிவாசலில் ஒன்றுசேர்த்து,

" நீங்கள் என் உள்ளத்திலே என் பெருஞ்செல்வமாக அமைந்திருக்கிறீர்கள். என் இன்பமும் துன்பமும் உங்கள்

வாழ்க்கையுடன் கலந்திருக்கிறது. உங்களுக்காக நான் இஸ்லாமிய சட்டதிட்டங்களின் தொகுப்பும் விரிவுரைகளும் தயாரித்து விட்டேன். அதில் உங்களுக்கு எல்லைகளும் வகுத்துவிட்டேன். நீங்கள் அதை இப்பொழுது உபயோகிக்கலாம். மக்கள் உங்களைப் பின்பற்றி நடக்கும் முறையில் நான் உங்களைத் தயாரித்து விட்டேன். உங்களுடைய ஒவ்வொரு வார்த்தைகளையும் மக்கள் சோதிப்பார்கள்'' என்று சொற்பொழிவாற்ற ஆரம்பித்தார். பிறகு, குறிப்பிட்ட நாற்பது மாணவர்களைப் பக்கத்தில் அழைத்து,

"இப்பொழுது நீங்கள் எனக்கு உதவி செய்யும் வேளை வந்துவிட்டது. உங்கள் நாற்பது பேரில் ஒவ்வொருவரும் காஜி - நீதிபதி பதவிக்கும் தகுதியுடையோராக அமைந்து விட்டீர்கள். உங்களில் பத்துபேர் நீதிபதிகள் மட்டுமல்ல, நீதிபதிகளை உண்டாக்கும் உயர்வும் பெற்று விட்டீர்கள்... ஆண்டவன் பெயரால் சொல்லுகிறேன், உங்களுக்குக் கிடைத்த கல்வியின் கண்ணியத்தைக் கருதி, அதை இழிவான முறையில் உபயோகிக்கப்படாமல் நீங்கள் காப்பாற்ற வேண்டும். உங்களில் எவருக்காயினும் நீதிபதி அலுவல் பார்க்கும்படி நிர்ப்பந்தம் ஏற்படுமானால், உங்கள் தீர்ப்புகளில் பொது மக்களுக்கு அநீதி ஏற்படாமல் தப்பித்துக் கொள்ள வேண்டுமென்று நான் உங்களை எச்சரிக்கிறேன். நீதி வழங்குவதில் நீங்கள் பிழை செய்தால், உங்களுடைய சம்பளம் உங்களுக்கு (ஹராம்) சட்ட விரோதமானதே. நீதிபதியின் உள்ளும் புறமும் ஒன்றாக இருந்தால்தான், அவர் வாங்கும் சம்பளம் ஹலால் - சட்டபூர்வமானது. இருந்தாலும், உங்களுக்கு நிர்ப்பந்தம் ஏற்பட்டு நீதிபதி பதவி கிடைத்தால், உங்களுக்கும் பொது மக்களுக்குமிடையிலுள்ள தொடர்பைத் துண்டித்து விடாதீர்கள். உங்கள் வாயிலில் உள்ள சேவகன் உங்களை மிகைத்துவிடலாகாது. நகரின் ஜாமியா பள்ளியில் ஐந்து வேளை தொழுகைக்கும் நீங்கள் போகவேண்டும். தொழுகை வேளையில், "எவருக்காயினும் ஏதாவது தேவையிருந்தால் அதை வெளியிடலாம்'' என்று தெரியப்படுத்துங்கள். ஒவ்வொரு இரவிலும் இஷா தொழுகைக்குப் பிறகு இவ்வாறு

மூன்று முறை விளம்பரப்படுத்திய பிறகுதான் நீங்கள் உங்கள் வீட்டிற்குப் போகவேண்டும்.

வியாதியின் காரணமாக நீதிபதி நீதிமன்றம் செல்ல முடியாவிட்டால், அந்த மாதம் எத்தனை நாள் போக வில்லையோ அத்தனை நாள் சம்பளமும் வாங்கக்கூடாது. முஸ்லிம் பாதுஷா பொதுமக்களுடன் நேர்மையற்ற முறை யில் நடந்தால், நீதிபதி அச்சமின்றி அதைப்பற்றிக் கேள்வி கேட்கவேண்டும்.''

இவ்வாறு, இமாம் அபூ ஹனீபா அரிய சொற்பொழி வாற்றினுர்.

கலீபா மன்ஸூர் எப்படியாவது தம்மைக் கட்டாயப் படுத்தி அப்பாஸி சாம்ராஜ்யத்தின் உயர்தர நீதிபதியாக நியமனம் செய்வாரென்றும், அதை மறுத்தால் தமக்குத் தீங்கு நேரிடலாமென்றும் நினைத்து இமாமவர்கள் இவ்வாறு தமது மாணவர்களிடம் விடைபெற்றுக் கொள்ளும் முறை யில் அவர்கள் அனுசரிக்க வேண்டிய வாழ்க்கை முறையை யும் குறிப்பிட்டுவிட்டார்!

கலீபாவின் கடிதம் வந்தவுடன் பக்தாத் நகருக்குச் சென்றுர். அபூ ஹனீபாவைக் கொலைசெய்து விடவேண்டு மென்று மன்ஸூர் தீர்மானஞ் செய்திருந்தார். அபூ ஹனீபா தமது தர்பாருக்கு வந்தவுடன் அவர் எந்தெந்த ஆசிரியர் களிடம் கல்வி கற்ருரென்று விசாரித்து விட்டு பிரதம நீதிபதி (காஜீ) (Judge-Qadi) உத்தியோகத்தை ஏற்றுக் கொள்ளும் படி இமாம் அபூ ஹனீபாவிடம் கூறினுர்.

இமாம்:—நான் இந்த உத்தியோகஞ் செய்யத் தகுதி யில்லாதவன்.

மன்ஸூர்:—நீங்கள் பொய் சொல்லுகிறீர்கள்.

இமாம்:—நான் பொய்யனுயிருந்தால் இந்த உத்தியோ கத்திற்கு உரியவ னல்லவென்று உறுதியாகிறது. ஏனென் ருல், பொய்யனுக்கு காஜீ உத்தியோகம் கொடுக்கக்கூடாது.

இப்பெரும் பாரத்தைத் தாங்கமுடியாதென்று அபூ ஹனீபா கண்டு கொண்டார். எனவே, தாம் அந்த உத்தி

யோகத்திற்குத் தகுதியற்றவரென்று நிரூபிக்க மூன்று காரணங்கள் சமர்ப்பித்தார்.

1. எனது மனநிலை மீது எனக்கு நம்பிக்கை யில்லை.

2. நான் அரபிய குடும்பத்தவன் அல்லன். ஆகையால், அரபியர் என்னுடைய அதிகாரத்தை விரும்பமாட்டார்கள்.

3. அரசவையில் மந்திரி பிரதானிகளுக்கு மரியாதை செய்தல் வேண்டும். இது என்னால் முடியாத காரியம்.

கலீபா மன்ஸூர் ஆணையிட்டார்! வற்புறுத்தினார்! கண்டித்தார்! கோபித்தார்! எச்சரிக்கை விடுத்தார்! ஆனால் இமாம் அபூ ஹனீபா "முடியவே முடியாது" என்று மறுத்து விட்டார்.

அரச ஆக்கினை! மண்ணுளும் மன்னரது மாட்சிமை பொருந்திய தனியரசு! இத்தகைய சர்வாதிகாரத்தின் முன்னிலையில் ஞானம், தவம், கல்வி, ஒழுக்கம் இவையனைத்தும் பஞ்சாகப் பறந்து போகவேண்டியதுதானே? அந்த ஆடம்பர அரசிலே, பேச்சுரிமை, எழுத்துரிமை, தொழிலுரிமை மார்க்க உரிமை எங்கிருந்து கிடைக்கும்? ஆகவே, இமாம் அபூ ஹனீபா குற்றவாளியானார்! சிறைக்கூடத்திற்கு அனுப்பப்பட்டார்!

உற்றவிடத்தில் உயிர்வழங்கும் தன்மையோர்
பற்றலரைக் கண்டால் பணிவரோ—கற்றூண்
பிளந்திடுவ தல்லால் பெரும்பாரந் தாங்கின்
தளர்ந்து வளையுமோ தான்.

மரணம்:—கலீபா மன்ஸூர் இமாம் அபூ ஹனீபாவைச் சிறைக்கோட்டத்திலிட்டார். "அச்சமில்லை இனி அச்சமே இல்லை" என்று மனம் பூரித்து நிம்மதியுடன் இருந்தாரா? கிணறு வெட்டினார்! பூதம் புறப்பட்டு விட்டது! பக்தாத் நகரம் கிலாபத்தின் தலைநகரம். வாழ்க்கைத்துறைகள் எல்லாவற்றிற்கும் முன்மாதிரியாகத் தோற்றமளிக்குமிடம். அந்த நகரில் பல கலாபீடங்கள். அக்கால ஆலிம்கள் அனைவரினும் உயர்ந்த ஆலிமான இமாம் அபூ ஹனீபா, பக்தாத் நகரச் சிறையில்! சிறை சென்ற இமாமை உலகம் உடனே

மறந்துவிடுமென்று நினைத்தார் மன்ஸூர். ஆனால், உண்மையில் நடந்ததென்ன ? ஹி. 146-ல் இமாம் அபூஹனீபாவை மன்ஸூர் கைது செய்தார். இஸ்லாமிய உலகின் எட்டுத் திசைகளினின்றும் பக்தாதிற்குவரும் மாணவர் பலரும் இமாமவர்களிடம் சென்று அவருக்கு மரியாதை செய்தார்கள்.

குற்றங் காட்டி இடித்துக் கூறி
அறவழி காட்டும் அந்த ஞானரை
சத்தியம் பேசும் சாது மக்களை
சீறி அடக்கியும் சிறையில் தள்ளியும்
உலகமும் தாங்களும் உள்ள வரையிலும்
பரம்பரை யாகப் பாத்தியம் கூறி
சுகித்து வாழும் சூழ்ச்சிகள் எண்ணி
அரசியல் தந்திரம் அனைத்தையும் சேர்த்து
திட்டம் போட்டுத் திறமை மிகுந்த
எத்தனை யோபல ஏகாதி பத்தியம்
மண்ணிற் புதைந்து மறைந்து போவதை
படித்தும் கேட்டும் பார்த்தும் வருகிறோம்.
திட்டம் எங்கே ? திறமையும் எங்கே ?

—நாமக்கல் கவிஞர்.

இந்த நிலைமையில் இமாமை இகழவும் அவமரியாதையாக நடத்தவும் கலீபாவுக்கு மனந்துணியவில்லை. சிறைச்சாலையே கலாசாலையாக மாறிவிட்டது. மன்னருக்குப் பிற நாட்டில் சிறப்பில்லை. ஆனால், கற்றோர்க்கும், ஞானாசிரியருக்கும் சென்றவிடமெல்லாம் சிறப்பு. இமாம் அபூஹனீபாவிடம் பலர் வருவார்கள். மார்க்கக் கல்வி கற்பார்கள். ஹனபீ பிக்ஹுவுக்குத் தூண்போன்று நின்ற இமாம் முஹம்மத் என்பவர் இந்தச் சமயத்தில் இமாம் அபூ ஹனீபாவிடம் பாடங்கேட்டார். இவ்வாறு, பல மாதங்களும் ஆண்டுகளும் கழிந்தன.

ஆனால், இமாம் அபூ ஹனீபா சிறையிலும் உயிரோடு இருப்பது மன்ஸூருக்குப் பிடிக்கவில்லை. இமாமவர்களுக்குத் தெரியாமலே அவருக்கு விஷம் கொடுக்கப்பட்டது. விஷம் வேலைசெய்ய ஆரம்பித்தது. அப்பொழுதுதான்

இமாமவர்களுக்குத் தெரிந்தது. தெரிந்ததும், தலையைத் தரைமீது வைத்து ஸஜதா செய்து அதே நிலைமையில் ஆவி பிரிந்தார்கள்.

" இன்னலில்லாஹி வ இன்ன இலைஹி ராஜிஊன்-மெய்யாகவே, நாம் ஆண்டவனைச் சேர்ந்தோராவோம். மேலும், நாம் இறைவனிடமே திரும்புவோம் " —குர்ஆன்

இமாம் அபூஹனீபா உலகினின்று மறைந்தார். இஸ்லாமிய உலகின் மாபெரிய ஆவிம் மண்ணுலகினின்றும் விண்ணுலகேகினர். மண்ணுளும் மன்னன் மன்ஸூரின் சிறையில் உயிர்துறந்தர்ர். உலகமே ஒரு சிறை. அதிலிருந்து இமாமவர்களுக்கு விடுதலை கிடைத்து விட்டது!

இமாம் இறந்த செய்தி பக்தாத் நகரெங்கும் பரவியது! ஒரே துக்கம்! ஒரே பரபரப்பு! மக்கள் கூட்டங்கூட்டமாய் வந்தார்கள். அச்சமயம் பக்தாதில் காஜியாயிருந்த ஹஸன்-பின்-அமாரா என்பவரே இமாமவர்களின் உடலத்தைக் குளிப்பாட்டினர். அவர் அப்பொழுது இமாம் அபூ ஹனீபாவின் முகத்தைப் பார்த்துக்கொண்டு,

" ஆண்டவன் மீது சத்தியமாக, நீங்களே எல்லோரிலும் சிறந்த பிக்ஹு ஆசிரியர், பெரிய வணக்க முள்ளோர் மேலான முயற்சியுடையோர். உங்களிடம் எல்லா மேன்மைகளும் நிறைந்திருந்தன..........."

என்று சொல்லிக்கொண்டே குளிப்பாட்டினர். இதற்கிடையில், ஜனத்திரள் அதிகமாகிவிட்டது. முதல் ஜனஸா தொழுகையில் சுமார் ஐம்பதாயிரம் மக்கள் கலந்து கொண்டார்கள். இன்னும் வந்துகொண்டே இருந்தார்கள். இவ்வாறு ஆறுதடவை ஜனஸா தொழுகை தொழப்பட்டது. அஸ்ர் தொழுகை நேரத்தில் கய்ஸரான் என்னும் கபரஸ்தானில் நல்லடக்கம் செய்யப்பட்டது.

அச்சமயம் இஸ்லாமிய நாடுகளில் பெரிய இமாம்கள் இருந்தார்கள், அவர்களில் இமாம் அபூ ஹனீபா உடைய ஆசிரியர்களும் இருந்தார்கள். இந்த மரணத்தைக்கேள்விப்பட்டு அவர்கள் அனைவரும் துக்கத்தில் ஆழ்ந்தார்கள்.

அச்சமயம், மக்காவிலிருந்த இப்னு ஜர்ரீஹ், "இன்னுலில் லாஹி! ஓர் உயர்ந்த ஆலிம் மறைந்துவிட்டார்." என்று துக்கித்தார். அபூ ஹனீபாவின் ஆசிரியரும், பஸ்ராவில் இமாமாகவுமிருந்த ஷுபா-பின்-ஹஜ்ஜாஜ், "கூபாவில் இருள் நிறைந்து விட்டது" என்று வருந்தினர்.

வெகு காலத்திற்குப் பிறகு. ஹி. 459-ல் ஸல்ஜூக் வம்சத்தைச் சேர்ந்த ஸுல்தான் அல்ப் அர்ஸலான் என்பவர், இமாம் அபூ ஹனீபாவின் அடக்க ஸ்தலத்தின்மீது ஒரு குப்பாவும், கல்லூரியும் அதன் பக்கத்தில் ஒரு மத்ரஸாவும் கட்டினர். அப்பாஸி ஆட்சியின் அந்திய காலத்தில் பக்தா திற்கு வந்த இப்னு பதூத்தா என்ற சரித்திரச் சிறப்புவாய்ந்த சர்வதேச சஞ்சாரியும் இதைப் பார்வையிட்டார். ஈரான் நாட்டு பாதுஷா, ஸுல்தான் நாஸிருத்தீன் காச்சார் என் பவர் இங்கு வந்து மரியாதை செய்தார்,

## 12. மாணவர்கள்

இமாம் அபூ ஹனீபாவுக்கு முஸ்லிம் நாடுகள் எல்லா வற்றிலும் மாணவர்கள் இருந்தார்கள். தொளாயிரத்துப் பதினெட்டு மாணவர்கள் இமாம் அபூ ஹனீபாவிடம் கல்வி கற்கும் பேறு பெற்ருர்கள்.

பிக்ஹு கலையைச் சேகரித்து உருவாக்குவதில் குறிப் பாக நாற்பது மாணவர் கலந்துகொண்டார்கள். இமாம் அபூ ஹனீபா தமது வாழ்க்கையில் பிக்ஹு சம்பந்தமாக மகத்தான வேலை செய்தார். இவரிடம் கல்விகற்ற மாணவர் தனிச் சிறப்புள்ளோராதலின், அத்தகைய மாணவர்களை உரு வாக்கிய அபூர்வ ஆசிரியரின் மேன்மை இலேசில் விளங்கும்.

"மாணவர்களது மேன்மையின் காரணமாக ஆசிரியருக் குப் பெருமையுண்டு, என்பது உண்மையாகுல்-இஸ்லாமிய சரித்திரம் முழுமையிலும் இமாம் அபூ ஹனீபாவைத் தவிர வேறு எவரும் இத்தனிச் சிறப்பிற்கு உரியோரல்லர்" என்று அல்லாமா ஷிப்லி நுஃமானி கூறுகிருர்.

வகீஹ் என்ற முஹத்திதிடம் சில ஆலிம்கள் வந்து, ''இமாம் அபூ ஹனீபா இந்த மஸ்அலாக்களில் பிழைசெய்து விட்டார்'' என்றுர்கள். இந்தக் குற்றச்சாட்டுக்கு வகீஹ் கூறிய மறுமொழியிலிருந்து இமாமவர்களின் பெருமை நன்கு விளங்குகின்றது. அதாவது,

''அபூ ஹனீபா எவ்வாறு பிழைசெய்திருக்கமுடியும்? கியாஸ் சம்பந்தமாக அபூ யூஸுப், ஜபர், ஆகிய இருவர் இருந்தார்கள். ஹதீது சம்பந்தமாக எஹ்யா-பின் ஜாயிதா, ஹபஸ்-பின்-கியால், ஹப்பான், மந்தல் ஆகியோர் இருந்தார்கள். தக்வா சம்பந்தமாகவும் ஜுஹுதிலும் தாவூது தாயீ, புஸைல்-பின்-இயால் ஆகியோர் இருந்துவந்தார்கள். மேலும், அரபிய இலக்கியத்தில் காஸிம்-பின்-மஅன் கூட்டாளியாயிருந்தார். இத்தனை பெரிய மகான்கள் எந்த மனிதருடைய தொடர்பில் இருந்தார்களோ அந்த மனிதரைப் பிழை செய்யும்படி அனுமதிப்பார்களா?'' என்று சமாதானம் கூறினுர்.

இமாம் அபூ ஹனீபாவுக்கு நாற்பது குறிப்பான மாணவர்கள் இருந்நார்கள். அவர்களில், எஹ்யா-பின்-ஸயீத் அல் கதான், அப்துல்லாஹ்-பின்-முபாரக், எஹ்யா-பின்-ஜகரீயா-பின் அபீ ஜாயத், வகீஹ்-பின்-அல்ஜர்ராஹ், எஜீத்-பின்-ஹாரூன், ஹபஸ்-பின்-கியால், அபூ ஆஸிம்-பின்-புஸைல் அப்துர் ரஜ்ஜாக்-பின்-ஹமாம், தாவூத் தாயீ முதலியோர் ஹதீது சம்பந்தமான மாணவர்களாவர், மேலும். இமாம் அபூ ஹனீபாவின் தோழமையில் இவர்கள் வெகுகாலம் இருந்தவர்கள்.

ஹாரூன் ரஷீத் காலத்தில் காஜிகளாக இருந்த காஜி அபூ யூஸுப், இமாம் முஹம்மத்-பின்-அல் ஹஸன் அல் ஷய்பானீ, இமாம் ஜபர் (Zafar), காஸிம்-பின்-மஅன், அஸத்-பின் அம்ரு, முதலியோர் பிக்ஹு சம்பந்தமான மாணவர்களாவர்.

ஹஸ்ரத் இப்ராஹீம்-பின்-அத்ஹம், ஹஸ்ரத் புஸைல்-பின் அயால், ஹஸ்ரத் பிஷ்ரு ஹாபீ, ஹஸ்ரத் தாவூத் தாயீ, இந்த அவுலியாக்களுடைய உஸ்தாதாக இருக்கும் பெருமை இமாம் அபூஹனீபா உடையதே.

## 13. நூல்கள்

1. பிக்ஹுல் அக்பர்
2. அல் ஆலீம் வல் முதஅல்லிம்
3. முஸ்னத்

இந்த மூன்று நூல்கள் இமாம் அபூஹனீபா எழுதியதாகத் தெரிகிறது,

பிக்ஹுல் அக்பர் என்பது இஸ்லாமிய கொள்கைகளை விவரிக்கும் நூலாகும். இரண்டாம் நூல் வினாவிடைகள் மூலமாய் விளக்கும் நூல். மூன்றாவதான முஸ்னத் என்பது ஹதீதுகளின் திரட்டு.

இமாமவர்களால் பிக்ஹு சம்பந்தமாக ஒரு சிறந்த நூல் தயாரிக்கப்பட்டதாகத் தெரிகிறது. ஆனால், அது நமக்குக் கிடைக்கவில்லை. அக்காலத்தில் கோர்வை செய்யப்பட்ட எத்தனையோ நூல்களின் கதி இவ்வாறே ஆயிற்று. மேலும், இமாமவர்களுடைய மஸ்அலாக்களை காஜீ அபூ யூஸுப், இமாம் முஹம்மத் இவ்விருவரும் தங்கள் சார்பாக நன்கு விளக்கி, விரிவுரைகள் முதலியன எழுதியதை பொதுமக்கள் அங்கீகரித்து, இமாமவர்களுடைய கோர்வையை மறந்து விட்டார்கள். ஆகவே, இன்று இமாம் அபூ ஹனீபாவின் பிக்ஹு கோர்வையானது இமாம் முஹம்மத், காஜீ அபூ யூஸுப் இவ்விருவருடைய நூல்கள் மூலமாகவே கிடைக்கிறது.

## 14. வாழ்க்கையின் உயர்வு

"அபூ ஹனீபா வெகு புனிதமான மனிதர். விலக்கப்பட்டவற்றினின்றும் வெகுதூரம் விலகி நின்றார். அநேகமாய் மௌனம் சாதித்திருப்பார். எவராயினும் மஸ்அலா கேட்டால் அதன் விடை தமக்குத் தெரிந்தால் மறுமொழி கூறுவார். இன்றேல், மௌனமாயிருப்பார். மேலான கொடையாளியும் தர்ம சிந்தனையுமுடையவர். எவரிடமும் சென்று ஏதாவது கேட்பது கிடையாது. உலகப் பெருமைகளை மதிக்கமாட்டார். கோள் கூறுவதினின்றும் கேட்பதினின்

றும் விலகி நிற்பார். எவரைப்பற்றியேனும் கூறவேண்டுமாயின் அவரது நற்குணங்களைப்பற்றியே பேசுவார். மேலான ஆலிமாக இருந்தார். பணத்தைப் போலவே கல்வியறிவையும் இல்மையும் செலவு செய்வதில் தாராள மனப்பான்மை உள்ளவர்.

இவ்வாறு காஜீ அபூ யூஸுப், இமாம் அபூ ஹனீபா உடைய திவ்விய குணங்களை, கலீபா ஹாரூன் ரஷீதிடம் மிக அழகாகவும் சுருக்கமாவும் விளக்கஞ்செய்திருக்கிறார்.

இமாமவர்களிடம் கல்வியழகுடன் உடலழகும் அமைந்திருந்தது. நடுத்தரமான உயரம், சிரித்த பார்வை. இனிய வார்த்தை. உயர்ந்த குரல். எத்தகைய சிக்கலான பிரச்சினையையும் தெளிவுபட விளக்குவார். எப்பொழுதும் சுத்தமானதும் விலையுயர்ந்ததுமான உடை உடுத்துவார். பாதுஷாக்களிடமும், அமீர்களிடமும், மந்திரிகளிடமும், உபகாரச் சம்பளமோ, இனாம்களோ பெறபட்டார். எனவேதான் மார்க்க விஷயங்களில் ஒருவருக்கேனும் அஞ்சாமல், எவரது தயவையும் எதிர்பாராமல் உண்மையை உள்ளபடியே உரைப்பார். அவரது உள்ளும் புறமும் சுவாதீன குணமே குடிகொண்டிருந்தது.

இறைவனருளால் பிறர் உதவியில்லாமலே இமாம் அபூ ஹனீபா வாழ்க்கை நடத்தினர். வறுமைப் பிணியால் உலகில் எத்தனைபேர் தங்கள் கொள்கைகளை விட்டு விட்டார்கள். செல்வம் இன்றேல் சிறப்பும் சில சமயம் குறைந்து விடும்.

பொருளிலார்க்கின்பமுமில்லை. புண்ணியமுமில்லை. என்றும்
மருவிய கீர்த்தியில்லை. மைந்தரிற் பெருமையில்லை.
கருதிய கருமமில்லை. கதிபெற வழியுமில்லை.
பெருநிலந்தனிற் சஞ்சாரப் பிரேதமாய்த் திரிவர் அன்றே!

கூபா - கவர்னர் அழைப்பு:—ஒருசமயம் கூபா கவர்னர் இமாமவர்களிடம், "நீங்கள் அடிக்கடி என்னிடம் வந்தால், அது என்மீது நீங்கள் செய்யும் அதிக கிருபையாகும்!" என்று கேட்டுக் கொண்டார். அதற்கு இமாமவர்கள்,

"நான் உங்களைச் சந்தித்து என்ன செய்வது? நீங்கள் என்னிடம் தயவுடன் நடந்துவந்தீர்களானால் நான் உங்கள் வலையில் சிக்கிக்கொள்வேன் என்று பயப்படுகின்றேன். ஆனால், இதற்கு மாறாக ஏற்பட்டால், எனக்கு அவமரியாதை கிடைக்கும். உங்களிடமுள்ள பணத்தின் தேவையோ ஆசையோ எனக்குக் கிடையாது. மேலும், என்னிடமுள்ள செல்வத்தை ஒருவரும் பிடுங்கிக்கொள்ள முடியாது" என்று கூறினார்கள்.

கலீபா மன்ஸூர்:—ஒருநாள் கலீபா மன்ஸூருக்கும் அவரது அரசிக்கும் பிணக்கு ஏற்பட்டுவிட்டது. தமது கணவரான கலீபா நியாயம் செய்வதில்லையென்று அரசி குற்றஞ்சாட்டினாள். இருவரும் சேர்ந்து இமாம் அபூ ஹனீபாவை நீதிபதியாக ஏற்படுத்தி அவரை அரண்மனைக்கு அழைத்தார்கள். அவ்வாறே, இமாம் வந்துசேர்ந்தார். இமாம் கூறும் முடிவைத் தனது காதுகளால் கேட்கவேண்டுமென்ற ஆவலுடன் அரசி திரையின் பக்கத்தில் வந்து உட்கார்ந்துகொண்டாள்.

மன்ஸூர்:—(இமாம் அபூஹனீபாவை நோக்கி) சட்டப்படி ஓர் ஆண்மகன் எத்தனை மனைவிகளை மணக்கலாம்?

அபூ ஹனீபா:— நான்கு மனைவிகள்.

மன்ஸூர்:—(அரசி உட்கார்ந்திருந்த இடத்தை நோக்கி) கேட்கிறதா?

அரசி:—ஆம், கேட்டேன்.

அபூ ஹனிபா:—(கலிபாவை நோக்கி) ஆனால் இந்த அனுமதியானது நியாயம் வழுவாமல் வழங்கக்கூடிய மனிதருக்கே கொடுக்கப்பட்டிருக்கிறது. இல்லையேல், ஒன்றிற்கு அதிகமான விவாகம் செய்யக்கூடாது. இது திருகுர்ஆனில் இறைவனுடைய கட்டளையாகும்.

இதைக்கேட்டார் கலீபா. ஒன்றும் பேசாமல் இருந்தார். இமாம் அபூ ஹனீபா அங்கிருந்து திரும்பி வந்தார். வந்த பிறகு ஐம்பதினாயிரம் பொற்காசுகளும் விலையுயர்ந்தவொரு தோடாவையும் அரசி இனாமாகக் கொடுத்ததாக ஓர் அரண்மனைப் பணியாள் கொண்டுவந்து, இமாமவர்களிடம் சமர்ப்பித்து,

"தங்களுக்கு அரசியார் ஸலாம் சொன்னதோடு, தாங்கள் உண்மை கூறியதற்கு வந்தனமளிக்கிருர்" என்று வேண்டிநின்ருன். ஆனுல், இமாமவர்கள் அதை வாங்க மறுத்து,

"நான் எதையாயினும் எதிர்பார்த்தோ அல்லது சுயநல நோக்கத்துடனே அந்தத் தீர்ப்புச் செய்யவில்லை. ஆனுல், நான் செய்ததெல்லாம் எனது கடமையைத்தான்" என்று கூறிவிட்டார்கள்.

நேர்மையான வியாபாரம்:- இமாமவர்களுடைய குடும்பத்தார் வியாபாரிகள். அபூ ஹனீபா பெரிய வியாபாரி. அவரது பிரதிநிதிகள் பல நகரங்களிலிருந்தார்கள். ஆனுல், அனுவசியமாகக் கொள்ளை லாபம் சம்பாதிக்கமாட்டர். சில சமயம் நஷ்டம் உண்டாகும். அச்சமயமும், எச்சமயமும் நேர்மையான முறைகளைக் கைக்கொண்டே வாணிபத் தொழில் செய்தார். தாம் விற்கும் ஜவுளியில் ஏதாயினும் குறையிருந்தால் வாங்குவோரிடம் உடனே அறிவித்துவிடுவார்.

பருத்தி, பட்டு, கம்பளி இம் மூன்றும் கலந்த "கஸ்" எனப்படும் துணிகளே இமாம்செய்த சிறப்பான வியாபாரம். கூபா நகரில் அவரது கடையே மிகப் பெரிதும், புகழும் பெற்றதுமாகும். பெரிய கட்டிடத்திலே பல வேலையாட்களும், நெசவாளிகளும் வேலை செய்தார்கள். கஸ் துணி செய்வதற்காகப் பெரிய ஆலையு மிருந்தது. பெரிய அளவில் "கஸ்" வியாபாரம் கூபா நகரில் அவருடையதே. அவர் கடையில் ஒரே விலை. அவரிடமிருந்து பல நகரங்களுக்கும் பல நாடுகளுக்கும் மூட்டை மூட்டையாக கஸ் துணி சென்றது. ஆண்டு தோறும் இலட்சக்கணக்கான இலாபம் கிடைத்தது.

பல நாடுகளிலிருந்து அவருக்கு சரக்குகள் வந்துகொண்டிருந்தன. அப்பாஸி ராஜ்யத்தின் பல நாடுகளுக்கும் அவரது ஏஜண்டுகள் சென்ருர்கள். இக்காலத்தில் நியூ யார்க், லண்டன் நகரங்கள் சர்வதேச வியாபாரத்திற்கு மத்திய ஸ்தானங்களாக விளங்குவதுபோல அக்காலத்தில் பக்தாத்

நகரமே நடுநாயகமாக இருந்தது. அங்கும் நிஷாபூரிலும் இமாமுடைய வியாபாரப் பிரதிநிதிகள் இருந்தார்கள். எட்டுத் திக்கிலிருந்தும், கிர்மான், ஜர்ஜான், அஸ்தராபாத், ஸமர்கந்து, ஹிராத், கெய்ரோ, பக்தாத், நிஷாபூர் முதலிய நகரங்களிலிருந்து பல மாணவர்கள் அவரிடம் பாடங்கற்க வந்தார்க ளல்லவா? அவர்கள் மூலமாகவும் வியாபாரம் பெருகிற்று. அவர் இறக்கும்பொழுது அவரிடம் ஐந்து கோடி ரூபாய் இருந்தது.

ஒரு சமயம் தமது வேலையாட்களிலொருவன் குறிப்பிட்ட விலைக்கு அதிகமாக ஒரு துணியை விற்றுவிட்டதாக அவர் அறிந்தார். வாங்கியவர் மதீனா நகருக்குப் போய் விட்டார். இமாமவர்கள் உடனே மதீனாவுக்குச் சென்றார் அதிகத் தொகையை அந்த மனிதரிடம் கொடுத்துவிட்டுத் திரும்பினார்.

வட்டியும், ரிபாவும் இல்லாமலே அவரது வியாபாரம் நடந்தது.

இக்காலத்தில் லேவாதேவி (மார்வாடி) கடைகளில் மக்கள் சாமான்களை வைத்து அதற்கு ஈடாக வட்டிக்குப் பணம் வாங்கும் வழக்கம் இருப்பதுபோல, இமாம் அபூ ஹனீபாவும் பாங்க் (வங்கி) (Bank) முறை ஆரம்பித்தார். ஆனால், வட்டி வாங்கமாட்டார். மரணம் வருமுன், எல்லாருடைய பொருட்களையும் திருப்பிக்கொடுத்துவிட்டார்.

வியாபாரத்தில் கிடைக்கும் நேர்மையான இலாபத்தில் முஹத்தித்களுக்கும், ஆசிரியர்களுக்கும் செலவு செய்துவிடுவார். தமது குடும்பத்தாருக்கென்று எந்த சாமான் வாங்கினாலும், முஹத்தித்களுக்கும் ஆலிம்களுக்கும் அதே சாமான்கள் வாங்கி அனுப்பிவிடுவார். அவரைச் சந்திக்க வருவோரை விசாரித்து அவர்களது தேவைகளைப் பூர்த்தி செய்வார். மாணவர்களில் எவராயினும் ஏழைகளாக இருந்தால், அவர்களுக்கு உதவிசெய்து, அவர்கள் கவலையில்லாமல் கல்வி கற்குமாறு உபகாரஞ்செய்வார். பணமில்லாமையால் கல்வி கற்கமுடியாமல் தவித்துக் கொண்டிருந்தோர் பலர், இமாம் அபூ ஹனீபாவின் பேருப

காரத்தின் காரணமாகக் கல்வி கற்று உச்சநிலையடைந்தார்கள். இவர்களின் காஜீ அபூ யூஸுப் என்பவர் ஒருவராவர்.

கடனாளியை மன்னித்தல்:- ஒருநாள் வழக்கம்போல் இமாமவர்கள் நோயாளிகளைப் பார்த்துவரச் சென்றுகொண்டிருக்கையில், வழியில் ஒரு மனிதனைப் பார்த்தார். அந்த மனிதன் இமாம் அபூ ஹனீபாவைக் கண்டவுடன் எதிரில் வராமல் முகத்தைத் திருப்பி, வேறு வழியாகச் செல்ல முயன்றான். அந்த மனிதனை உடனே கூப்பிட்டார். காரணங் கேட்டார். பதினாராயிரம் பொற்காசுக் கடனைத் திருப்பிக் கொடுக்க முடியாமல் வெட்கப்பட்டு அவ்வாறு செய்ததாக அந்த மனிதன் கூறினான். உடனே, இமாமவர்கள் அந்த மனிதனுடைய தன்மதிப்பைப் புகழ்ந்ததோடு, அந்த மனிதன் அவருக்குக் கொடுக்கவேண்டிய கடன் பணத்தையும் மன்னித்துவிட்டார்! மேலும், கடன் பட்டவர் பலருக்கு அவர்களது கடன் தொகை முழுவதையும் எத்தனையோ தடவைகளில் கொடுத்து உதவிசெய்திருக்கிறார்.

கடனாளி வீட்டு நிழல் வேண்டாம்:—ஒரு மனிதன் இமாமவர்களிடம் கடன்வாங்கியிருந்தான். அந்தக் கடனாளி குடியிருக்கும் தெருவில் தமது மாணாக்கரில் ஒருவர் இறந்துவிட்டமையால், இமாம் அங்கு சென்றார். வெயில் அதிகமாயிருந்தது. அச்சமயம், அந்தக் கடனாளியின் சுவற்றின் நிழலைத் தவிர வேறு நிழலோ தங்குமிடமோ கிடையாது. அந்த நிழலில் வந்து நிற்கும்படி மக்கள் இமாமவர்களை அழைத்தார்கள். அதற்கு அவர், "அந்தச் சுவரின் நிழலில் சுகம்பெற எனக்குப் பிரியமில்லை. ஏனென்றால், அந்த வீட்டுக்காரன் என்னுடைய கடனாளி. அந்த நிழலில் நான் உட்காருவேனாயின் அது லாபமாகும். ஏனென்றால், நமது பெருமானாரவர்கள் "கடனுக்குப் பதிலாக ஏதாயினும் லாபம் பெற்றால், அது கூடாது" என்று திருவுளமாகி யிருக்கிறார்கள்" என்று விளக்கம் செய்தார்.

1. ஈ என்று நான் ஒருவரிடம் நின்று கேளாத இயல்பும்,
2. என்னிடம் ஒருவர் ஈதிடு என்றபோது அவர்க்கில்லையென்று சொல்லாமல் இருக்கின்ற திறமும்,

3. இறையாம் நீ என்றும் எனை விடா நிலையும், நான் என்றும் உன் நினைவு விடா நெறியும்,

4. அயலார் நிதி யென்றும் நயவாத மனமும், மெய்ந் நிலை என்றும் நெகிழாத திடமும்,

5. உலகிற் சீ என்று பே யென்று நாயென்று பிறர் தமைத் தீங்கு சொல்லாத தெளிவும்,

தந்து நின் திருவடிக்கு ஆளாக்குவாய். '

என்று கூறும் அருட்பாவின் ஆசைகளை இமாம் அபூ ஹனீபா செயல் முறையில் தமது வாழ்க்கையில் நடத்திக் காட்டும் பேறுபெற்ருர்.

பொறுமை:—அவர் மேலான கல்விமான். ஏராளமான செல்வமுள்ளோர். பொங்கும் புகழ். பாரரசரைப் புகழாதவர். வேலுக்கும் வாளுக்கும் அஞ்சாதவர். ஆயிரமாயிரம் மாணவர்களுக்கு ஆசிரியர். தமது ஆசிரியர்களாலும் புகழப்பட்டு, அவர்களிடம் விசேஷ மரியாதை பெற்றவர். அரசரும் அஞ்சும்படியான அண்ணல். இத்தனை பேறுகள் இருந்தும் தற்பெருமை என்பது எள்ளளவேனும் கிடையாது. சில சமயம் சிலர் இழிசொற்கள் சொன்னுலும் அதைப் பொறுத்துக்கொள்ளும் குன்றனைய குணமுடையோர். பழி வாங்கும் குணமும் அவரிடம் கிடையாது. தமது நாவாலும் செயலாலும் எவருக்கும் துன்பஞ்செய்யமாட்டார். எவரை யும் ஏமாற்றமாட்டார். எவரிடமும் வாக்குமீறி நடக்க மாட்டார்.

இமாமவர்கள் ஒரு நாள் பள்ளிவாசலில் பாடஞ் சொல் லிக்கொண்டிருந்தார். நிறைந்த சபையில் வந்தான் ஒரு மனிதன். வேண்டுமென்றே அபூ ஹனீபாவை நிந்தனை செய் தான். ஆனுல், அவரோ மலைபோல் பொறுமையுடன் உட் கார்ந்திருந்தார், அதைப்பற்றிக் கவனிக்க வேண்டாமென்றும் மாணவர்களுக்குக் கண்டிப்புடன் கூறினர். பாடம் முடிந் தது. இமாம் அபூ ஹனீபா அங்கிருந்து எழுந்தார். புறப்பட் டார். அந்த மனிதனும் விடவில்லை. பின்தொடர்ந்தான். திட்டிக்கொண்டே வந்தான். இவ்வாருக. அபூ ஹனீபாவின் வீடும் வந்துவிட்டது. அபூ ஹனீபா நின்றுகொண்டார். அந்த மனிதனைப் பார்த்தார்.

''இதோ இருப்பது என் வீடு. நான் இதில் நுழையப் போகிறேன். ஆகையால், இன்னும் ஏதாவது சொல்லி முடித்துக் கொள்ளலாம். நான் என் வீட்டிற்குள் போன பிறகு வருத்தப்படவேண்டாம், இனிமேல், இம்மாதிரியான சந்தர்ப்பம் உமக்குக் கிடைத்தல் அரிது'' என்ருர்.

கேடு செய்வோருக்கும் உதவி:—இமாமவர்களின் வீட்டின் பக்கத்தில் ஒரு செம்மான் வசித்து வந்தான். அவன் பகலெல்லாம் வேலைசெய்வான். இாவில் தன் நண்பர்களைச் சேர்த்துக் கொள்வான். ஆடுவான், பாடுவான், சாராயம் குடிப்பான். இதனுல், இமாமவர்களுக்கு இரவில் வணக்கஞ் செய்வதில் அதிக சங்கடமேற்பட்டது. ஆயினும், ஒன்றும் சொல்லமாட்டார்.

இவ்வாறிருக்கையில் ஓரிரவில் அவன் வீட்டில் நிசப்தமாயிருந்தது. ஆடலுமில்லை. பாடலுமில்லை. உடனே, அதற்குக் காரணம் என்னவென்று இமாம் விசாரித்தார். நகரத்துக் கொத்துவால் அவனைப் பிடித்துக் கைதுசெய்து விட்டதாக ஜனங்கள் சொன்ஞர்கள். உடனே, அபூ ஹனீபா, குதிரை ஏறி கவர்னரிடம் சென்ருர். அப்பொழுது கூபா நகரில் அப்பாஸி அரசாங்கத்தின் சார்பில் ஈஸா - பின் - மூஸா என்பவர் இராக் மாகாண கவர்னராக இருந்தார். இவர் கலீபா மன்ஸூரின் சகோதரருடைய மைந்தர். அப்பாஸி குடும்பத்தில் வீரவானும் விவேகியுமாகக் கருதப்பட்டவர். இமாம் வருவதைக் கண்டு, அந்த கவர்னர் உடனே சென்று எதிர்கொண்டழைத்தார். ஆட்சித் தலைவர் ஓடோடி வந்தார். மரியாதையுடன் இமாமை வரவேற்ருர். ஆசனத்தில் அமர்த்தினுர். அன்பினைச் சொறிந்தார். இன்பமொழி கூறினுர். இருக்கை அளித்தார்.

'நீங்கள் ஏன் இந்தக் கஷ்டத்தை ஏற்றுக்கொண்டீர்கள்? எனக்குச் சொல்லியனுப்பினுல் நானே வருவேனே!'' என்ருர்.

இமாமவர்கள், கவர்னரிடம் ''எங்கள் தெருவில் ஒரு செம்மான் இருக்கிருன். அவனை கொத்துவால் சிறைசெய்து விட்டார். அவனை விடுதலை செய்ய வேண்டுமென்பது எனது ஆசை'' என்ருர்.

உடனே விடுதலை செய்யும்படி கவர்னர் உத்தரவு செய்தார். பிறகு, கவர்னருக்கு வந்தனமளித்துவிட்டு இமாம் அங்கிருந்து தமது வீட்டுக்குத் திரும்பி வந்தார். வழியில் அந்தச் செம்மானும் விடுதலையடைந்து வந்து சேர்ந்து கொண்டான். அவரது மேன்மையை அறிந்த அந்த மனிதன் அன்றுமுதல் தனது தீயவாழ்க்கையை விட்டு, இமாமவர்களுடைய சபையில் உட்கார ஆரம்பித்தான். நல்லோருடைய தொடர்பின் காரணமாக இறுதியில் பிக்ஹு கலையில் அவன் உயர்நிலைபெற்றான்.

**மடியில் பாம்பு:—**ஒருநாள் பள்ளிவாசலில் பாடஞ்சொல்லிக் கொண்டிருந்தார். கூரையிலிருந்து ஒரு பாம்பு தொப்பென்று விழுந்தது! அதுவும் இமாமவர்களுடைய மடியில்! எல்லோரும் சபையை விட்டெழுந்து ஓடிவிட்டார்கள். ஆனால், இமாமவர்கள் மனங்கலங்காமல் உட்கார்ந்திருந்தார். இமாம் மாலிக் என்பாருக்கும் ஒருசமயம் இவ்வாறே நேர்ந்தது.

தமக்கு அரசாங்க உத்தியோகஸ்தர் மூலமாக எத்தனையோ விதமான இன்னல்கள் விளைந்தகாலையிலும் அவற்றைப் பொறுமையுடன் ஏற்றுக்கொள்வார். கஜானா உத்தியோகத்தை ஏற்க இமாம் மறுத்தபொழுது, தினந்தோறும் அவருக்குப் பத்துக் கசையடி கொடுக்கப்பட்டது. அப்பொழுது, "எனக்கு இதனால் கஷ்டமொன்றுமில்லை. ஆனால் எனக்குத் துன்பம் வந்ததைக் கண்டு, எனது அருமைத் தாயார் துக்கப்படுவார்களே என்று நான் வருந்துகிறேன்" என்பார்.

பொன்னும் கரும்பும் புகழ்பாலும் சந்தனமும்
சின்னம் படவருத்தம் செய்தாலும்—முன்னிருந்த
நற்குணமே தோன்றும். நலிந்தாலும் உத்தமர்பால்
நற்குணமே தோன்றும் நயந்து.

அனாவசியமாகப் பேசமாட்டார். அவசியமில்லாத பேச்சுக்களைக் கேட்கவும் மாட்டார். பிறரைக் குறைகூறுவதிலும், பிறருடைய குறைகளைக் கேட்பதிலும் அவருக்கு வெறுப்பு. ஆண்டவன்மீது ஆணையிடுதல் கிடையாது.

பிறர் அவ்வாறு செய்தலையும் விரும்பமாட்டார். தாம் எப்பொழுதாவது ஆண்டவன் பெயரால் சத்தியம் செய்தால் அபராதம் விதித்துக் கொள்வார். அவர் எவரையும் திட்டவும், சபிக்கவும் மாட்டார். பழி வாங்கும் தீயகுணம் கிடையாது. எவரையும் ஏமாற்றமாட்டார். முஸ்லிமையோ, முஸ்லிமல்லாதாரையோ துன்பப்படுத்தமாட்டார். புறம் பேசமாட்டார். பிறர் நேர்மையற்ற முறையில் தம்மைத் திட்டினாலும், அதைப் பொறுத்துக்கொள்வார். கருத்து வேற்றுமைக்காக எவருடனும் பகைமைகொள்ளமாட்டார்.

## ஆஸ்திகமும் நாஸ்திகமும்

ஒருநாள் இமாமவர்கள் பள்ளிவாசலில் உட்கார்ந்திருக்கையில் ஒரு நாஸ்திகன் வந்து கேள்விகள் கேட்டான்.

நாஸ்திகன் :- நீங்கள் "அல்லாஹ்! அல்லாஹ்!" என்று சொல்லுகிறீர்களே! அந்த அல்லாவுக்கு முந்தியது எது?

இமாம் :- (ஒன்று இரண்டு என்று எண்ணிக்கொண்டே போகும்படி அவனைக் கேட்டுக்கொள்ள, அவன், "ஒன்று, இரண்டு, மூன்று........" என்றான்) சரி, நிறுத்தும்! ஒன்று என்று ஆரம்பித்தீரே அதற்கு முந்திய எண் எது?

நாஸ்திகன் :- "ஒன்று" என்ற எண்ணுக்கு முந்தி, வேறு எண் கிடையாதே!

இமாம் :—இந்த ஒரு எண்ணுக்கு முந்தி ஒன்றுமில்லையானால், அல்லாஹ்வுக்கு முந்தியதாக ஏதாவது இருக்க முடியுமா!

நாஸ்திகன் தனது வினாவுக்கேற்ற விடைகேட்டுத் திருப்தி யடைந்தான் — அடுத்த கேள்வி :—

நாஸ்திகன் :- உங்கள் அல்லாஹ்வின் முகம் எந்தத் திசையை நோக்கி யிருக்கிறது?

இமாம் :- (எரிந்துகொண்டிருந்த விளக்கை நோக்கி) இந்த விளக்கொளியின் முகம் எந்தத் திசையை நோக்கி இருக்கிறது?

நாஸ்திகன் :- சுடருக்கும் திசை உண்டா?

இமாம் :- அல்லாஹ்வினுல் படைக்கப்பட்ட இந்த அற்ப சுடருக்குத் திசையில்லை என்றீர். எல்லா உலகங்களையும் படைத்துக் காத்துப் போஷித்து, அதனதன் குறிக்கோளை அடைய உதவிசெய்யும் தயாநிதியான ஆண்டவன் ஒரு குறிப்பிட்ட திசையை எவ்வாறு நோக்குவான் ?

நாஸ்திகன் திருப்பதியடைந்தான். அதற்கடுத்த வினு எழுப்பினுன்.

நாஸ்திகன் :- உங்களுடைய அல்லாஹ் எங்கு இருக்கிருன் ?

இமாம் :- இதே விளக்கின் ஒளி எங்கே இருக்கிறது ?

நாஸ்திகன் :- உம்......உம்......உம்.........

இமாம் :- இந்த விளக்கின் ஒளி எல்லாத்திக்கிலும் பரவியிருக்கிறது., இது ஒரு குறிப்பிட்ட இடத்தில் இல்லை. இது ஒரு சிறு சிருஷ்டிப் பொருள். அப்படியிருக்கையில், எங்கும் நிறைந்த, பரஞ்சோதியான அல்லாஹ் ஓர் குறிப்பிட்ட இடத்தில் இருக்கிருன் என்று கூறக்கூடாது.

இவ்வாறு அந்த நாத்தழும்பேறிய நாஸ்திகனுக்கு இமாமவர்கள் விடை தந்து அனுப்பினுர்.

இறை வணக்கம்:—இமாமுக்கு இறைவன் வணக்கத்தில் இணையிலா இன்பமுண்டு. சித்தசுத்தியுடனும், முழுமனதுடனும் ஆண்டவனை நினைத்து நினைத்துப் புகழ்வார். தொழுகையிலும் திருகுர்ஆன் ஓதும்பொழுதும் கண்ணீர் வடித்துக்கொண்டிருப்பார்.

" ஒரு நாள் அதிகாலையில் புஜர் தொழுகையில் நான் இமாம் அபூ ஹனீபாவுடன் தொழுதேன். இமாமவர்கள் தொழுகையில்,

" வலா தஹ்ஸபனல்லாஹ காபிலா அமா யஃமலஸ் ஸாலிமூன் — கொடுமையாளரின் கொடுமைகளை ஆண்டவன் அறியவில்லையென்று நினைக்க வேண்டாம்" — என்று ஓதினுர். உடனே, இமாமவர்களது உடல் நடுங்க ஆரம்பித்தது." என்று இப்ராஹிம் பஸரீ கூறுகிருர்.

சில சமயங்களில், சில-குர்ஆன் வசனங்களைத் திரும்பத் திரும்ப ஓதிக்கொண்டு விடியும்வரை அழுதுகொண்டே தொழுகையில் நின்றுவிடுவார்.

ஒரு சமயம், இஷா தொழுகையில், "இதா ஸில்ஸிலதுல் அர்லு ஸில் ஸாலஹா" ஓதப்பட்டது.

அருளாளனும் அன்புடையோனுமான அல்லாஹ்வின் பெயரால்.

1. தனது (இறுதியான) அதிர்ச்சியில் பூமி அதிரும் பொழுது.

2. தனது சுமைகளை பூமி வெளியாக்கும்பொழுது.

3. "உனக்கு என்ன நேர்ந்தது?" என்று மனிதன் கேட்கும்பொழுது.

4. அந்த நாளில் அது (பூமி) தனது செய்திகளை வெளியிடும்.

5. ஏனென்றால், உம்முடைய இறைவன் அதை (அவ்வாறு கூறும்படி) செய்விப்பான்.

6. தங்கள் செயல்களைக் காண்பிக்கும்படி அந்த நாளிலே மனித இனம் சிதறிய கூட்டங்களில் வெளியாகும்.

7. மேலும், அணுவளவு நன்மை செய்தவன் அதை (நியாயத் தீர்ப்பு நாளாகிய) அப்பொழுது கண்டுகொள்வான்.

8. மேலும், அணுப்பிரமாணம் தீமை செய்தவன் அதை (நியாயத் தீர்ப்பு நாளாகிய) அப்பொழுது கண்டுகொள்வான்- (குர்ஆன். அதிர்ச்சி 99 : 1-8)

இமாமவர்கள் அதன் கருத்தை மனதில் ஊன்றி இரவு முழுதும் பள்ளிவாசலில் உட்கார்ந்து அழுது ஆண்டவனிடம் மன்னிப்புக் கேட்டுக் கொண்டிருந்தார்.

இமாமவர்கள் வழக்கமாகத் தினந்தோறும் முன்னூறு ரக்அத் (தொழுகையில் ஒரு பாகம்) தொழுகை தொழுவார். ஒருநாள் அவர் வீதிவழியாகச் சென்றுகொண்டிருக்கையில், ஒரு பெண் மற்றொரு பெண்ணை நோக்கி,

"இந்த இமாம் ஒவ்வோர் இரவிலும் ஐநூறு ரக்அத் தொழுகை தொழுது வருகிறார்." என்றாள்.

அன்று முதல் அந்தப் பெண் கூறியதைப் பொய்ப் படுத்தக் கூடாதென்றெண்ணி அவ்வாறே தொழுதார்.

இன்னொரு சமயம், அவர் சென்று கொண்டிருக்கையில் சிறுவர் சிலர், "இந்த இமாம் தினந்தோறும் ஆயிரம் ரக்அத் தொழுகிருர்" என்று தங்களுக்குள் பேசிக்கொண்டிருந்ததைக் கேட்டார். அன்று முதல் இமாம் ஆயிரம் ரக்அத் தொழ ஆரம்பித்தார். அப்பால், ஒரு நாள், இமாமவர்களுடைய மாணுக்கரில் ஒருவர்.

"இமாமே! தாங்கள் இரவில் தூங்குவதில்லையென்று மக்கள் பேசிக் கொள்ளுகிருர்கள்." என்ருர். அன்று முதல் இஷா தொழுகைக்குச் செய்த வலுவுடன் மறுநாள் காலையில் ஸுப்ஹூ தொழுகை நிறைவேற்றி வந்தார், இவ்வாறு, முப்பது ஆண்டுகள் செய்து வந்தார். தொழுகை அதிகமாக இருந்தமையால் அவரது முழங்கால்கள் ஒட்டகத்தின் முழங்கால்களைப் போன்று தேய்ந்து விட்டன.

மஸ்அலா—இஸ்லாமிய சட்ட சம்பந்தமான பிரச்சினை அவருக்குப் புரியவில்லையாயின் நாற்பது தடவை திருகுர்ஆன் ஓதுவார். அல்லது, தொழுகையில் நிற்பார். சிறிது நேரத்தில் இறைவனருளால் பிரச்சினை தீர்ந்துவிடும். அலி இப்னு ஸீனு என்ற தற்கால மருத்துவத் தந்தையின் வாழ்க்கையிலும் இவ்வாறு பல தடவை நடந்திருக்கிறது. கஷ்டம் வந்தால் பொறுமையுடனும் வணக்கத்துடனும் இறைவனுடைய உதவியைத் தேடவேண்டும். இறைவனிடமே நமது முறையீட்டைச் சமர்ப்பிக்கவேண்டும்.

தொழுகை-வணக்கம் :- தொழுகையிலும் இறைவணக்கத்திலும் அக்கால மக்களில் இமாமவர்களே தனிச்சிறப்புடையவர். இரவெல்லாம் "தஹஜ்ஜுத்" என்ற தொழுகை தொழுதுகொண்டிருப்பார். அல்லது, குர்ஆன் ஓதிக்கொண்டிருப்பார். ஆனல் உட்காரமாட்டார். இரவில் இஷா தொழுகைக்குச் செய்த வலுவுடன் இரவெல்லாம் இறைவணக்கஞ் செய்து, மறுநாள் அதிகாலையில் "பஜர்" தொழுவார். ஒரே இரவில் குர்ஆன் முழுமையும் ஓதி விடுவார். தொழுகையில் குர்ஆன் ஓதும்பொழுது கண்ணீர்

வடிப்பார். அவர் மரணமடைந்த வீட்டிலே ஏழாயிரம் தடவை குர்ஆன் முழுமையும் ஓதி முடித்திருந்தார். தஹஜ்ஜுத் தொழுகையில் கண்ணீர் விடுவார். நாவு வரண்டு, மயிர் சிலிர்த்து, உடல் நடுங்கி, மெய்மறந்து, விழுந்துவிடுவார். நல்லார் தமக்கு அருள்புரியும் நாயனையே நினைப்பார். நித்திய ஜீவியை நாடுவார். நாவினால் நவில்வார். உள்ளம் உவப்பார். இறைவனது திருமுன்னையே நினைத்து ஏங்குவார். ஒருசமயம் காலைத் தொழுகையில், தொழ வைக்கும் இமாம் "அநியாயக்காரர்கள் செய்யும் கொடுமைகளையெல்லாம் அல்லாஹ் மறந்து போனான் என்று நீங்கள் எண்ணவேண்டாம்" என்ற குர்ஆன் வசனத்தை ஓதியதைக் கேட்டு இமாமவர்கள் இறையச்சத்தால் நடுங்கிக்கொண்டிருந்தார்.

"உண்மையான விசுவாசிகள் யாரென்றால், அல்லாஹ்வுடைய திருநாமம் பிரஸ்தாபிக்கப்பட்டபொழுது அவர்களுடைய இருதயங்கள் பயந்து நடுங்குகிறவர்களாகவும், அவனுடைய திருவசனங்கள் ஓதப்பட்டால் அவர்களுடைய விசுவாசம் மேலும் மேலும் அதிகரிக்கின்றவர்களாகவும், அல்லாஹ்வையே பரிபூரணமாக நம்பி இருப்பவர்களாகவும் உள்ளவர்களே, யாவர்." (குர்ஆன். 8 : 2)

**அன்னையிடம் அளவற்ற அன்பு :-** இமாம் அபூ ஹனீபா தமது தாயாரின் மனம் புண்படும்படியாக நடந்துகொள்ள மாட்டார். கூபா கவர்னர் அவருக்குச் சவுக்கடி தண்டனை கொடுத்தபொழுது, அவர், "என் தாயார் இதைக் கேள்விப்பட்டு மன வருத்தமடைவார்களே!" என்று துக்கித்தார்.

சாதாரணமான மதசம்பந்தமான சந்தேகங்களிலும் அந்த அம்மையார்—தனது புத்திரர் மாமேதையாக இருந்த போதிலும், பலர் அவரிடம் வந்து கல்வி கற்றுச்; சந்தேகங்களைத் தெளிவுபடுத்திக்கொண்டுபோகிறார்கள் என்று தெரிந்திருந்தும்—வேறொரு சாதாரண, மார்க்க உபந்நியாசகரிடம் சென்று அவர் சொல்லும் முடிவையே மேற்கொள்வார், சில சமயம், இம்மாதிரியான விஷயங்களைக் கேட்டுவந்து தன்னிடம் சொல்லும்படி இமாம் அபூ ஹனீபாவையே அனுப்பி

விடுவார். மகன் தனது தாயாரின் கட்டளைக்குக் கீழ்ப் படிந்து செல்வார். ஆனால், அந்த உபந்நியாசகர் வெட்கப் பட்டு, "உங்களுக்குத் தெரியாத விஷயத்தை நான் சொல் லப்போகிறேனா? நீங்களே, உங்கள் தாயாருக்கு விடை சொல்லிவிடுங்கள்" என்பார்.

ஈகை - தியாகம் :- கேட்போருக்கெல்லாம் இல்லை என்று சொல்லாமல் அள்ளி அள்ளிக் கொடுக்கும் வள்ளல் அபூ ஹனீபா. தேவையுள்ளோர் எவரும் அவரிடம் சென்று வெறுங்கையுடன் திரும்பியதே கிடையாது. தமது மைந்தர் ஹம்மாத் என்பவர் குர்ஆன் ஓதி முடித்தவுடன் அந்த ஆசிரியருக்கு இமாம் அபூ ஹனீபா ஆயிரம் திர்ஹம் பொற் காசு கொடுத்தார்! வியாபாரத்தில் கிடைக்கும் இலாபத்தை பக்தாத் நகரிலுள்ள மார்க்கத் தலைவர்களுக்கும் முஹத்தித்தீன் களுக்கும் அனுப்புவார். அனுப்பும்பொழுது, "புகழ் அனைத் தும் அல்லாஹ்வுக்கே உரியது; எனக்கல்ல. ஏனென்றால், எனக்கு இந்தப் பணத்தைக் கொடுத்தவன் அல்லாஹ்வே!" என்று எழுதி அனுப்புவார்.

"என் குடும்பச் செலவிற்காக இமாமவர்கள் இருபது ஆண்டுகள் உதவி செய்தார். ஆனால், எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்ள என்னை அனுமதிக்க மாட்டார். 'ஆண்டவனுக்கே நீர் நன்றிசெலுத்துவீராக! அவனே இதை எனக்கு அருளியவன், என்பார்' என்று இமா முடைய மாணவரான இமாம் அபூ யூஸுப் கூறுகிறார்.

தமது குடும்பத்திற்காகத் தாம் செலவுசெய்யும் தொகைக் குத் சமமாக ஆலிம்களுக்கும் ஏழைகளுக்கும் அவர் செலவு செய்வார்.

**தனிமையிலும் ஆண்டவன் அச்சம் :-** "நான் இருபது ஆண்டுகள் இமாம் அபூ ஹனீபாவுடன் இருந்தேன். வீட்டில் தனிமையாக இருக்கும்பொழுது தலையில் தொப்பியும் தலைப் பாகையும் இல்லாமல், கால்களை நீட்டிக்கொண்டு இமா மவர்கள் இருந்ததை நான் கண்டதே இல்லை. ஒரு நாள், நான் அவரை,

"இமாமே! தனிமையாயிருக்கையிலும் கால்களை நீட்டி உட்கார்ந்தாலென்ன?" என்று கேட்டேன். அதற்கு அவர், "தனிமையிலும் ஆண்டவனிடம் பயபக்தியுடன் நடந்து கொள்ளல் மேலானதாகும்" என்று இமாம் அபூ ஹனீபா கூறினர், என்று ஹஸ்ரத் தாவூத் தாயீ என்னும் முஸ்லிம் ஸூபி—ஆத்மஞானி கூறுகிருர்.

சிறுவன் அறிவுரை :- ஒருநாள் இமாமவர்கள் தெருவில் சென்றுகொண்டிருக்கையில், சேற்றில் நடந்துகொண்டிருந்த ஒரு சிறுவனைக் கண்டார்.

அபூ ஹனீபா :- சிறுவனே! கவனமாகக் காலெடுத்து வை! இன்றேல் வழுக்கி விழுந்துவிடுவாய்!

சிறுவன் :- இமாமவர்களே! நான் வழுக்கி விழுந்தால் நான் ஒருவன்தான் வழுக்கிவிழுவேன். ஆனால், நீங்களோ இமாம். ஆகையால், நீங்கள்தான் வெகு கவனத்துடன் நடக்கவேண்டும். ஏனென்ருல், நீங்கள் தவறிவிடுவீர்களாலுல், உங்களைப் பின்பற்றும் முஸ்லிம்களும் தவறிவிடுவார்கள். அப்பால், எல்லோரையும் காப்பாற்றுவது வெகு கஷ்டமாகிடும்.

இச்சிறுவனுடைய அறிவைக்கண்டு இமாம் ஆச்சரியப்பட்டார். இறைவனை நினைத்து அழுதார். தம்முடன் இருந்தோரை நோக்கி,

"ஜாக்கிரதை! என்னுடைய மஸ்அலாக்களில்—மதச் சட்ட விளக்கத்தின் முடிவுகளில் உங்களுக்குச் சந்தேகம் ஏற்பட்டாலும், அதை நிரூபிக்கச் சரியான தலீல் (ஆதாரம்) உங்களுக்கு அகப்படாவிட்டாலும், என்னைப் பின்பற்ற வேண்டாம். தீர விசாரித்து உண்மையை அறியும் உங்களது உரிமையை விட்டுவிடவேண்டாம்" என்று எச்சரிக்கை செய்தார்.

இந்தப் புத்திமதியை அனுசரித்தே இமாம் அபூ ஹனீபாவின் மாணவர்களான அபூ யூஸுப், என்பவரும் முஹம்மத், என்பவரும் பெரும்பாலான மஸ்அலாக்களைத் தங்கள் ஆசிரியரது அபிப்பிராயத்திற்கு மாற்றமாக எழுதியிருக்கிருர்கள்.

இமாம் அபூ ஹனிபா–முஜ்தஹித்-Mujtahid :— இஸ்லாம் மார்க்கத்தில் பகுத்தறிவுக்கு நல்லதொரு இடமளிக்கப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு மனிதனும் தானகவே சிந்தனை செய்து, ஆழ்ந்த ஆராய்ச்சி செய்து நேர்மையான முடிவுக்கு வரலாம் இதற்கு இஸ்லாமிய பரிபாஷையில் இஜ்திஹாத் என்கிறோம்.

நமது நாயகம் முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் முஆத் என்னும் ஸஹாபி - தோழரை எமன் பிரதேசத்தின் கவர்னராக நியமித்தார்கள். அந்த கவர்னர் பெருமானரிடம் விடைபெற்றுக்கொண்டுபோக வந்தார். அச்சமயம், இந்த சம்பாஷணை நடந்தது.

பெருமானர்:—உம்மிடம் வரும் வழக்குகளுக்குத் தீர்ப்புக் கூறுவதில் நீர் எதை ஆதாரமாகக் கொள்வீர்?

முஆத்:—திருகுர்ஆன் கட்டளைகளின் பிரகாரம் தீர்ப்புக் கூறுவேன்.

பெருமானர்:— ஆனல், அதில் உமக்கு ஆதாரம் கிடைக்காவிட்டால்?

முஆத்:—அவ்வாருன நிலைமையில், இறைதூதருடைய ஸுன்னத் பிரகாரம் செய்வேன்.

பெருமானர்:—ஸுன்னத்தும் உமக்கு வழிகாட்டவில்லை யென்ருல்?

முஆத்:—அப்படியானல், நான் எனது சொந்த அறிவின் முடிவையே உபயோகிப்பேன்.

இதைக் கேட்டுப் பெருமானரவர்கள் மனமகிழ்ந்தார்கள். பெருமானரின் தோழர்களெல்லாம் முதலாவது குர்ஆனையும், இரண்டாவது ஸுன்னத்தையும் தங்கள் வழிகாட்டியகளாகக் கொண்டார்கள். மூன்ருவதாகத் தங்கள் சொந்த அறிவை உபயோகித்தார்கள்.

இமாம் அபூ ஹனீபா இம்மாதிரியான சந்தர்ப்பங்களில் விசாலநோக்குடன் ஆராய்ச்சி செய்து, பகுத்தறிவை உபயோகித்து (இஜ்திஹாத்) முடிவுக்கு வருவார். அனுமானம் (கியாஸ்), செயலுக்குப் பொருத்தமான இயல்பு (இஸ்திஹ்ஸான்), இந்த இரண்டின் அடிப்படையிலும் முடிவு செய்வார்

குர்ஆனிலும் ஹதீதிலும் ஒரு பிரச்சினைக்கு நேர்முகமாக விடை கிடைக்காவிட்டால், அதற்கு வேறுபட்ட அல்லது ஒற்றுமையான ஒரு விஷயத்தில் காணப்படும் முடிவை உபயோகித்து, கையிலுள்ள பிரச்சினைக்கு முடிவு காண்பதே (கியாஸ்) அனுமானமாகும். இதுவே இமாம் அபூ ஹனீபாவின் அனுமானமுறை. அதில் அவர் தமது சொந்த (ராயி) அபிப்பிராயத்தை உபயோகிக்கவில்லை.

இதைப்போலவே இஹ்திஹ்ஸான், அதாவது கழுவும் பொருளைப் பிழியவேண்டும் என்பது சட்டம். ஆனால் மரத்தையும் உலோகத்தையும் கழுவித்துடைக்க வேண்டும், பார்த்தபின் பொருளை வாங்கு என்பது சட்டம். ஆனால், தயாரித்துக் கொடுத்தபின் வாங்குவதாகச் சம்மதித்தால் அவ்வாறே செய்யலாம். குர்ஆனும் ஹதிதும் இதைத்தடுக்கவில்லை, எனவே, குர்ஆன், ஹதீத், இஜ்மா, கியாஸ், இந்த நான்கின் அடிப்படையில் இமாமவர்கள் பிக்ஹு சட்டத்தை அமைத்தனர்.

இதைப்போலவே அவருடைய மாணுக்கரான இமாம் முஹம்மத், இமாம் அபூ யூஸுப் இவ்விருவரும் முஜ்தஹித்கள் எனப்படுகிருர்கள். அவர்கள் இஜ்திஹாதை உபயோகித்துப் பலவிடங்களில் தங்களது ஆசிரியரது அபிப்பிராயங்களிலிருந்து வேறுபடுகிருர்கள். மார்க்கச் சட்டம் எழுதுவதற்காக இமாமவர்கள் அமைத்த குழுவில் நாற்பது பேர் இருந்தார்கள். இந்தக் குழு முப்பதாண்டுகள் (121—150 ஹி,)வேலை செய்தது. 12,90,000 மஸ்அலாக்கள் உள்ள இந்தத் தொகுப்பிற்கு "பிக்ஹுல் அக்பர்" என்று பெயர் வைக்கப்பட்டது. இது இன்று நமக்குக் கிடைக்கவில்லை. இதிலிருந்து பிறநூற்களில் காணப்படும் மேற்கோள்களே நமக்குக்கிடைக்கின்றன.

குர்ஆனையும், ஸுன்னத்தையும் அடிப்படையாகக் கொண்டதே ஷரீயத். ஆனால், இன்று இமாம் அபூஹனீபாவைப் போன்று பகுத்தறிவை மார்க்க விஷயங்களில் நாமும் உபயோகிக்கலாமா என்று சந்தேகிப்போரும் நமக்குள் இருக்கிருர்கள்!

"இஜ்திஹாத் என்ற கதவு எப்பொழுதும் திறந்ததாகவே இருக்கிறது. அதாவது, இமாம் அபூ ஹனீபா காலத்தில் மட்டுமல்ல. எல்லாக் காலத்திலும் அது கையாளப்படுவதாகும், ஒவ்வொரு காலத்திலும் தனிப்பட்ட, விசேஷ பிரச்சினைகள் தோன்றுகின்றன. ஆகவே, ஒவ்வொரு காலத்திலும், இஜ்திஹாதின் கதவு திறந்தே இருக்கவேண்டு" என்று அல்லாமா முஹம்மத் இக்பால் கூறுகிறார். முதல் மூன்று ஹிஜிரி நூற்றுண்டுகளில் இஜ்திஹாதின் கதவு திறந்து இருந்ததைப் போலவே எல்லாக் காலங்களிலும் திறந்திருத்தல் வேண்டும்.

**கலீபா உஸ்மான் ஒரு யூதரா?:-** இஸ்லாமிய சரித்திரத்தில் மூன்றும் கலீபாவான ஹஸ்ரத் உஸ்மான் பெயரைக் கேட்டவுடன் அவரைத் திட்ட ஆரம்பித்து விடுவான் ஒரு பணக்காரன். அந்த கலீபாவை எஹூதி (யூதன்) என்றும் சொல்வான். இவ்விஷயம் அபூ ஹனீபா காதிற்கெட்டியது. உடனே அவர் அந்த மனிதனை அழைத்தார். குறிப்பிட்ட ஒரு யூதன் பெயரைச் சொல்லி,

"உம்முடைய மகளை அந்த யூதனுக்கு விவாகம் செய்து வைக்க நான் விரும்புகிறேன்" என்றார்.

**பணக்காரன் :—** முஸ்லிம்களுடைய இமாமே! இதென்ன ஆச்சரியம்! முஸ்லிம் பெண்களை யூதர்களுக்கு விவாகஞ் செய்தல் எவ்வாறு சாத்தியமாகும்?

**இமாம் :-** ஸுப்ஹானல்லாஹ்! உயர்வு அல்லாஹ்வுக்கே! உம்முடைய மகளை நீர் ஒரு யூதனுக்கு விவாகஞ் செய்யச் சம்மதிக்கமாட்டீர்! ஆனல், நமது நபிபெருமானுர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் தங்களுடைய ஒன்றல்ல—இரண்டு புத்திரிகளை ஒரு யூதனுக்கு மணஞ் செய்வித்தார்களே!

அந்தப் பணக்காரன் இதைக் கேட்ட பிறகு தனது பிழையை உணர்ந்தான். வெட்கப்பட்டான். ஆண்டவனிடம் மன்னிப்புக் கேட்டான்.

**பத்வா வேறு,–தக்வா வேறு** :—ஒரு நாள் இமாமவர்கள் கடைத் தெருவில் சென்றார். அப்பொழுது அவரது உடுப்பில் சிறிதளவு சேறு விழுந்துவிட்டது. அதைக் கழுவிச் சுத்தம் செய்துகொள்ள, உடனே, ஆற்றிற்குப் போனார். ஒரு மாணவர்,

"இமாமவர்களே! இந்தச் சேறு கொஞ்சமாகத்தானே இருக்கிறது. இது கூடுமானதுதானே. அப்படித்தானே நீங்கள் போதிக்கிறீர்கள! இதைக் கழுவ வேண்டிய அவசிய மில்லையே! ஏன் இவ்வளவு கஷ்டப்படு கிறீர்கள்?" என்று வினவினார். அதற்கு, இமா மவர்கள்,

"அது பத்வா; இது தக்வா" என்று மறுமொழி கூறினார். பொதுவான சட்டங்கள் பொதுமக்கள் பின்பற்றுவதற்கென்பதும், ஆனால், இறைவனிடம் பயபக்தி யுள்ளோர் அதிக பேணுதலுடன் இருக்கவேண்டும் என்பதும் இமாமுடைய கருத்தாகும்.

**ஐம்பத்தைந்து ஹஜ்ஜுகள்** :- இவ்வுலகில் அபூ ஹனீபா எழுபது ஆண்டுகள் இருந்தார். இவற்றில் ஐம்பத்தைந்து ஆண்டுகள் ஹஜ் செய்திருக்கிறார். கடைசியாகச் செய்த ஹஜ்ஜில் ஓரிரவில் காபத்துல்லாவின் வாயிலில் நின்று உள்ளே செல்ல அனுமதி கேட்டார். உத்தரவு கிடைத்தது. உள்ளே சென்றார். வலது காலில் நின்றார். இடது காலை வலது காலின்மேல் வைத்து, தொழுகைக்கு நிய்யத்துச் செய்து நின்று, பாதி திரு குர்ஆன் ஓதினார். ருகூ, ஸஜ்தா செய்தார். பிறகு, எழுந்து இடது காலில் நின்றார். வலது காலை இடது காலின்மேல் வைத்து எஞ்சியுள்ள திரு குர்ஆனை ஓதினார். ருகூ, ஸஜ்தா, செய்து ஸலாம் திரும்பினார். பிறகு, கண்களில் நீர் ததும்பக் கைகளை உயர்த்தி,

"ஆண்டவனே! இந்தப் பலவீனமான அடியான், வணக்கஞ் செய்யவேண்டிய முறையில் செய்ய வில்லை! நீ கருணை புரிந்தருள்வாயாக!" என்று மனம் உருகி, துஆ பிரார்த்தனை செய்தார். அப்பொழுது,

'அபூ ஹனீபாவே! நீர் நம்முடைய வணக்கத்தை உண்மையாகவே நல்ல முறையில் செய்தீர். நாம் உம்மை மன்னித்து விட்டோம்' என்று அசரீரி வாக்குக் கேட்டது.

**கொள்கைகள் :-** இமாம் அபூ ஹனீபா வாழ்ந்த காலம், ஸஹாபாக்களின் இறுதிக்காலம். இஸ்லாமிய உலகில் பல விபரீதமான தோற்றங்கள் காணப்பட்ட காலம். நவீன மான கொள்கைகள் தோன்றிய காலம். புதிய புதிய அரசாங்கக் கட்சிகள் ஆரம்பித்த காலம். ஹஸ்ரத் அலீ காலத்தில் காரிஜிகள் தோன்றினர்கள். வாஸில்-பின்-அதா என்பவர் மூதஜிலாக்களின் உட் பிரிவுக்குத் தலைவரானர். ஜஹம்-பின்-ஸப்வான் என்பவர் ஜஹ்மிய்யா பிரிவை நிறுவினர். இந்தப் பிரிவுகளுக்கிடையில் சண்டை சச்சர வுகள் பிறந்தன. தர்க்க மன்றங்களில் வேறுபாடுகள் பல தோன்றின.

இந்தச் சங்கட நிலையில், அதாவது, ஒரு முஸ்லிம் அடுத்த முஸ்லிமை "காபிர்" என்று வாய் கூசாமல் கூறும் அந்த நாளில், இமாம் அபூ ஹனீபா,

"ஒரே கிப்லாவை நோக்கித் தொழுவோர் அனைவரும் இறை நம்பிக்கையுள்ள மூமின்களே. எவராயினும் பர்லு (கடமை)களை விட்டு விட்டால் அவர்கள் காபிராகிவிட மாட்டார்கள். எந்த மனிதன் ஈமானுடன் எல்லாக் கடமை களையும் பின்பற்றுகிருனே அவன் மூமினும் சுவர்க்கவாசி யும் ஆவான். எவனிடம் ஈமானும் அமலும் அதாவது, இறைவன் ஒருவன் என்ற நம்பிக்கையும், நற்செயல்களும் இல்லையோ அவன் காபிரும் நரகவாசியுமாவான். ஒரு மனி தன் ஈமான் உள்ளவன். ஆனல், கடமைகள் (பர்லுகள்) விட்டுப் போகின்றன. இத்தகைய மனிதன் நிச்சயமாக முஸ்லிம் தான். ஆனல், பாவி முஸ்லிம். அவனைத் தண்டிப் பதும் மன்னிப்பதும் இறைவன் இஷ்டம்" என்று கூறுவார்.

சிறு சிறு வேறுபாடுகளின் காரணமாகவும், அடிப் படையற்ற விஷயங்களைச் சேர்ந்த சச்சரவுகள் காரண மாகவும், ஒரே ஆண்டவனுக்குத் தலைவணங்கி, ஒரு குர் ஆன், ஒரு கிப்லா, ஒரு நபி, ஒரு ஈமான், இவற்றிற்கு வழி படும் முஸ்லிம் இனமானது ஒன்றுபட்டு வாழாமல் சித றுண்டு போவதைக்கண்டு, இமாம் அபூ ஹனீபா மனம் நொந்து, குறுகிய மனப்பான்மைகொண்ட அந்த அநாகரீக வெள்ளத்தைத் தடுத்து,

"லா தக்புர் அஹ்ல தன்ம்மின் அஹ்லில் கிப்லா"— ஒரே கிப்லாவை நோக்கித் தொழுவோர் எவரையும் காபிர் என்று நாம் எண்ண மாட்டோம்" என்று முழக்கினர்.

உலகிலுள்ள எழுபதுகோடி முஸ்லிம்களுடைய தனிப் பட்ட, குடும்ப, சமுதாய, அரசியல், வாழ்க்கைத் துறைகளில் ஹஸ்ரத் இமாம் அபூ ஹனீபா (ரஹ்) உடைய வாழ்க்கை வரலாறுகளும், ஆராய்ச்சிகளும் இருளில் ஒளியைப்போன்ற தன்மையுடையன. இஸ்லாமிய அதாவது, இறைவனுக்குச் சரணடைந்த நெறியில் வாழ்க்கை நடத்த விரும்பும் ஒவ்வொரு மனிதனுக்கும், இந்தச் சான்ரோரின் புனித வாழ்க்கையானது சிறந்தொரு வழிகாட்டியாக அமைந்துள்ளது.

## அறவுரைகள்

1. "அல்ஹம்துலில்லாஹ்-எல்லாப் புகழும் அல்லாஹ்வுக்கே" என்று தொடர்ச்சியான வணக்க வார்த்தைகளாக திக்ர் செய்துகொண்டிருந்தால் "நான்" என்ற பெருமை தானாகவே நீங்கிவிடும்.

2. செயல் (அமல்) இல்லாத அறிஞன் (ஆலிம்) உயிரில்லாத உடலுக்கு ஒப்பாவான்.

3. உள்ளத்தை அடக்குவதே பெரிய (ஜிஹாத்) புனிதப்போர்.

4. அறிவில்லாத பெரிய மனிதன் கற்றோர் சபையில் சிறியவனே.

5. நாய்க்குப் பொன்னுடை போற்றினாலும் அது புலி ஆகாது.

6. அண்டை வீட்டாருடைய குற்றங்குறைகளை நாம் மறைக்க வேண்டும்.

7. தினந்தோறும் சிறிய அளவிலாயினும் குர்ஆன் ஓதவேண்டும்.

8. மக்கள்சேவை இறைவனுக்காகச் செய்ய வேண்டும்.

9. அல்லாஹ்வின்மீது முழு ஆதரவு வைக்கவேண்டும்

10. பொது மக்களுடனும், குறிப்பாக பணக்காரருடனும், அதிகமாக நெருங்கிப் பழகினால், உமக்கு பணப் பேராசை இருக்கிறதென்று மக்கள் நினைப்பார்கள்.

11. மாணவர்களை சொந்தப் பிள்ளைகளைப்போல் நடத்தவேண்டும்.

12. அறிவிலிகளுடன் வீண் தர்க்கம் செய்யலாகாது.

13. சொற்போர் நடக்கும்பொழுது கோபப்படல் ஆகாது.

14. எல்லோருடனும் இனிமையாகப் பேசவேண்டும். ஆனால், அளவு கடந்து பேசலாகாது.

15. அரசாங்கத்தைச் சேர்ந்தோருடன் அதிக நேரம் இருக்கலாகாது.

16. சாதாரண அறிவுள்ளோரிடம் ஞானவார்த்தைகளைச் சொல்லவேண்டாம்.

17. வறுமையிலும் செம்மையாகவே நடக்கவேண்டும்

18. உள்ளத்தில் ஒருமைப்பாடு உண்டாவதற்கு உலக இச்சைகளைக் குறைத்துக் கொள்ளவேண்டும்.

19. அல்லாஹும்ம இன்னா நஸ்தயீனுக பிக அலா தாஅதிக - (இறைவனே) உன்னையே வணங்குவதற்காக உன் மூலமாகவே, உன்னிடம் உதவி தேடுகிறேன்'' என்று பிரார்த்தனை செய்தேன். அதனால் இறைவன் என் அறிவைப் பெருக்கினான்.

20. பள்ளிவாசல் போன்ற பொது ஸ்தாபனங்களின் சொத்தை நமது சொந்த வேலையில் உபயோகித்தலாகாது.

21. புறங்கூறுத நாவை எனக்கு அளித்த அல்லாஹ்வுக்கே நான் அளவு[illegible]ன்றி (ஷுக்ர்) செலுத்துகிறேன்.

22. உங்[illegible]த்[illegible]குந்தபடி நல்ல உடை உடுத்துங்கள்.

23. [illegible]த்துப்பங்கு படிப்பைவி[illegible] ஒருபங்கு செயலே சிறந்தது.

# இமாம் அபூ ஹனீபா

## ஹி. 80 - 150 கி. பி. 699 - 767

---

ஹிஜ்ரி

80 பிறப்பு — கூபா நகரில்

90 ஸஹல்-பின்-ஸஅத் மரணம்

93 அன்ஸ் பின் மாலிக் மரணம்

95 ஹஜ்ஜாஜ் மரணம்

96 கலீபா வலீத் மரணம்

99 கலீபா ஸுலைமான் மரணம்

100 அபூ துபைல் ஆமிர் மரணம்

101 உமர்-பின்-அப்துல் அஜீஸ், ஹதீத் சேகரஞ்செய்தல்

105 காலித் பின் அப்துல்லாஹ் கஸ்ரீ-(105–120) கூபா கவர்னர்

113 இமாம் ஜாபர் ஸாதிகைச் சந்தித்தல்.

117 அப்துல்லாஹ் பின் அப்பாஸ் மரணம்

120 ஹம்மாத் மரணம். யூஸுப் பின் உமர்-கூபா கவர்னர் —ஜைத் (இமாம் ஹுஸைன் பௌத்திரர்) உடைய எழுச்சியும் மரணமும்

121 ஜைத் பின் அலீ குழப்பம். இஸ்லாமிய சட்டக்குழு அமைத்தல்

126 கலீபா ஹிஷாம் மரணம்—வலீத் கலீபா ஆனுர்.

127 இரண்டாம் மர்வான் கலீபா ஆனுர். எஜீத் பின் உமர் கூபா கவர்னர். இமாமுக்குக் கசையடி

130 மக்காவிற்கு ஹிஜ்ரத்

132 அப்பாஸி கிலாபத் ஆரம்பம். அப்துல்லாஹ் அபுல் அப்பாஸ் கூபாவில் பிரகடனம்

136 மக்காவிலிருந்து கூபா திரும்பினுர்—அப்பாஸி இரண்டாம் கலீபா மன்ஸூர் ஆட்சி

145 நப்ஸெ ஜக்கியா—இப்ராஹீம் இவ்விரு சகோதரர்கள் எதிர்ப்பில் இமாமின் அப்பாஸி அரசாங்க ஆதரவு

146 கலீபா மன்ஸூர் - பக்தாத் தலைநகர். இமாம் கைது

150 ரஜப் மாதம், இமாம் காலமானுர். (கி. பி. 766)

---

ரெயின்போ பிரிண்டர்ஸ், திருச்சிராப்பள்ளி.

7B
2-142

## ஸையித் இப்ராஹீம் எம். ஏ., எல். டி.,

ஜமால் முஹம்மத் கல்லூரி, :: திருச்சிராப்பள்ளி

### எழுதிய நூல்கள்

| | | ரூ. | பைசா |
|---|---|---|---|
| 1. | முஹம்மத் (ஸல்) பரிசுப் பதிப்பு | 3 | 00 |
| | ,, மலிவுப் பதிப்பு | 2 | 00 |
| 2. | ஹஸ்ரத் அபூ பக்ர் (ரலி) | 1 | 50 |
| 3. | ,, உமர் ,, | 1 | 50 |
| 4. | ,, உஸ்மான் ,, | 1 | 50 |
| 5. | ,, அலீ ,, | 1 | 50 |
| 6. | ,, காலித் பின் வலீத் ,, | 1 | 50 |
| 7. | ,, ஸல்மான் பார்ஸி ,, | 0 | 75 |
| 8. | ,, பிலால் ,, | 0 | 75 |
| 9. | ஸுல்தான் ஸலாஹுத்தீன் | 1 | 00 |
| 10. | தளபதி தாரிக் பின் ஜியாத் | 0 | 75 |
| 11. | உத்தமர் உமர் (பின் அப்துல் அஜீஸ்) | 0 | 75 |
| 12. | ராபியா பஸ்ரீ (ரஹ்) | 0 | 75 |
| 13. | இமாம் அபூ ஹனீபா ,, | 0 | 75 |
| 14. | இமாம் கஸ்ஸாலீ ,, | 1 | 00 |
| 15. | மன்ஸூர் ஹல்லாஜ் ,, | 1 | 00 |
| 16. | இக்பாலின் முறையீடும் மறுமொழியும் | 0 | 75 |
| 17. | இஸ்லாம் காட்டிய அரசியல் | 1 | 00 |
| 18. | உலகம் போற்றும் உத்தம நபி | 1 | 00 |
| 19. | இஸ்லாமியக் கதை விருந்து | 0 | 75 |
| 20. | முஸ்லிம் கதைக்கொத்து | 0 | 50 |
| 21. | அண்ணல் நபி | 0 | 50 |
| 22. | இஸ்லாமிய வீரப் பெருமக்கள் | 1 | 00 |
| 23. | குர்ஆன் மணிமொழிகள் | 1 | 00 |
| 24. | நபிநாயகம் நல்லுரைகள் | 0 | 75 |
| 25. | வளர்மதி நீதிக் கதைகள் | 0 | 50 |
| 26. | பாத்திமா நாயகி | 1 | 00 |
| 27. | இஸ்லாமும் அதன் உட்பிரிவுகளும் | 1 | 00 |
| 28. | ஜிஹாத் | 0 | 50 |
| 29. | ஸஹாபாக்கள் (நாயகத்தோழர்கள்) சிறப்பு | 0 | 50 |
| 30. | கதீஜா பிராட்டியார் | 1 | 00 |

## வளர்மதி பதிப்பகம்,

தென்னூர் :: திருச்சிராப்பள்ளி

*Wrapper Printed at the Imperial Press, Triuchirapalli-8—60.*